விலை ரூபா: 15.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

பக்கங்கள்: இருபது — Valampurii


சங்கு 12 வள்ளுவர் ஆண்டு 2042 வைகாசி 09 திங்கட்கிழமை (23.05.2011) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 155

ராம்கோ MADRAS CEMENTS LTD RAMCO CEMENT RAMCO

SLS 107 தரம் கொண்டதும் 100 விதி சாதாரண போட்லாண் சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமெந்து

# சொந்த நலனுக்காகவே அரசு கூட்டமைப்புடன் பேசுகின்றது!

## சுரேஷ் பிரேமச்சந்திரன் சாடல்



(திருகோணமலை)

இலங்கையின் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்காக தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் இடம்பெற்றுவரும் பேச்சுவார்த்தைகளை அரசாங்கத் தரப்பே பலவீனப்படுத்தி குழப்பி வருகிறது. இந்த இடத்தில் சர்வதேச சமூகத்தின் ஆதரவைப் பெறுபவர்களாக தமிழர் தரப்பு இருக்க வேண்டும். இவ் விவகாரத்தில் எமக்கு ஒரு இராஜ தந்திரம் இருக்கவேண்டும்.

திருகோணமலை நகரசபை மண்டபத்தில் நடைபெற்ற நூல் வெளியீட்டு விழாவில் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு உரையாற்றும் போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஊடகப் பேச்சாளரும், யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான சுரேஷ் பிரேமச்சந்திரன் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இந் நிகழ்வில் உரையாற்றும்போது அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

அரசாங்கத்திற்கும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்கும் இடையே கடந்த ஜனவரி மாதம் தொடக்கம் மே மாதம் வரை ஆறு தடவைகள் பேச்சுவார்த்தை நடந்துள்ளது.

இனப்பிரச்சினையை மையமாக வைத்தும் மற்றும் பாதிக்கப்பட்ட மக்களின் மீள் குடியேற்றம் உள்பட ஏனைய அவசியப் பிரச்சினைகள் பற்றியுமே பேச்சுவார்த்தை நடந்து வந்துள்ளது.

ஒவ்வொரு தடவையும் முதல் அரைமணி நேரம் அரசியல் தீர்வு பற்றியும், மற்றைய அரை மணிநேரம் மக்களின் அத்தியாவசிய பிரச்சினைகள் (20 ஆம் பக்கம் பார்க்க)

# சனல் 4 தொலைக்காட்சியின் காணொளி போலி என நிறுவ அரசு கடும் பிரயத்தனம்

## சண்டே ரைம்ஸ் தெரிவிப்பு

(கொழும்பு)

**ஜெனிவாவில் நடைபெறவுள்ள ஐக்கிய நாடுகள் சபையின் மனிதவுரிமைகள் ஆணைக்குழுவின் 17-வ்து கூட்டத் தொடரில் கொழும்புக்கு எதிராக தீர்மானம் நிறைவேற்றப்படுவதை தடுக்கும் வகையில் பிரித்தானியாவின் சனல் 4 தொலைக் காட்சி கடந்த வருடம் வெளியிட்ட காணொளி போலியானது என நிறுவ அரசாங்கம் முனைப்புக் காட்டி வருவதாக சண்டே ரைம்ஸ் பத்திரிகை தெரிவித்துள்ளது.**

வன்னியில் கடந்த வருடம் நடைபெற்ற போரின் போது அரசாங்கம் மேற்கொண்ட போர்க்குற்றங்கள் தொடர்பில் பல அதிர்ச்சியூட்டும் தகவல்களை சனல் 4 தொலைக் காட்சி கடந்த வருடம் மே மாதம் வெளியிட்டிருந்தது.

இது குறித்து இத் தொலைக்காட்சியின் வெளிநாட்டுச் செய்தியாளர் ஜொனாதன் மில்லர் கருத்துத் தெரிவிக்கையில், வன்னிப் போரின் இறுதிக் கட்டத்தில் அரசாங்கத் தரப்பின் உயர்மட்ட கட்டளைகளுக்கு அமையவே தமிழ் மக்கள் கண்மூடித்தனமாகப் படுகொலை செய்யப்பட்டதாக ஆதாரங்களுடன் சுட்டிக்காட்டியிருந்தார்.

இது குறித்து சிறிலங்கா படைத்தரப்பின் சிரேஷ்ட படையதிகாரி ஒருவரும் களமுனையில் நின்ற படைச்சிப்பாய் ஒருவருக்கும் தமக்குக் கூறியதாக (19ஆம் பக்கம் பார்க்க)

# விமல் வீரவன்ஸவின் அமெ.பயணம் 19 ஆயிரம் அமெரிக்க டொலர் செலவு



(கொழும்பு)

தேசிய சுதந்திர முன்னணியின் தலைவரும், வீடமைப்பு மற்றும் கட்டுமான அமைச்சருமான விமல் வீரவன்ஸவின் அமெரிக்கப் பயணத்திற்கான செலவு 19,000 அமெரிக்க டொலர்கள் எனத் தெரிய வந்துள்ளது.

நியூயோர்க்கில் அமைந்துள்ள ஐக்கிய நாடுகள் சபையின் தலைமையகத்தில் நடைபெற்ற 2600ஆவது சம்புத்தத்வ ஜெயந்தி நிகழ்வில் கலந்து கொள்வதற்காக விமல் வீரவன்ஸ அமெரிக்காவுக்கு விஜயம் செய்திருந்தார்.

இந் நிகழ்வுக்கான ஏற்பாடுகளை ஐக்கிய நாடுகள் சபையில் அங்கத்துவம் வகிக்கும் இலங்கை, தாய்லாந்து, கம்போடியா, பூட்டான், ஜப்பான், தாய்வான், லாவோஸ், மியான்மார், வியட்னாம், மொங்கோலியா, பங்களாதேஷ், இந்தியா மற்றும் தென்கொரியா போன்ற நாடுகள் செய்திருந்தன.

இந் நிகழ்வின் ஏற்பாட்டுக் குழுவில் அங்கம் வகிக்கும் வண.சர்தஜீவ தேரர் விடுத்த அழைப்பை ஏற்று நியூயோர்க் சென்ற விமல் வீரவன்சவுடன், அவரது மகனும் சென்றிருந்தார்.

இவர்கள் இருவரும் (20ஆம்பக்கம்பார்க்க)

# நெடியவன் மீதான விசாரணைக்கு இலங்கை அரசு ஆதரவளிக்கும்

(கொழும்பு)

நோர்வேயில் கைது செய்யப்பட்ட தமிழீழ விடுதலைப்புலிகளின் தற்போதைய தலைவராகக்கருதப்படும்நெடியவன்எனப்படும்பேரின்பநாயகம் சிவபரன் தொடர்பான விசாரணைகளுக்கு இலங்கை ஆதரவளிக்கும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பில் ஒஸ்லோவில் உள்ள இலங்கைக்கான தூதுவராலயம் உறுதியளித்துள்ளது.

தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்தின் செயற்பாட்டிற்காக நிதி சேகரித்தமை தொடர்பான குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் நெதர்லாந்து விசாரணைகளை மேற்கொண்டு வருகிறது. இது தொடர்பில் நெதர்லாந்து நீதிபதி மற்றும் 5 சட்டத்துறை நிபுணர்கள் ஒஸ்லோவிற்கு சென்றுள்ளனர்.

இந் நிலையில்நெடியவனிடம் கடந்த இரண்டு நாட்களிலும் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. தமிழீழ விடுதலைப்புலிகளின் செயற்பாடுகள் குறித்த விசாரணைகளுக்கு தேவையான தரவுகளை வழங்க இலங்கை தரப்பில் தயாராக இருப்பதாக நோர்வேக்கான இலங்கைத் தூதுவர் ரொட்னி பெரேரா தெரிவித்துள்ளார். (ந-5)

# முன்னாள் புலிப் போராளிகள் 900பேருக்கு ஜூனில் விடுதலை

(கொழும்பு)

வன்னி இறுதிக்கட்டப் போரின் போது படைத்தரப்பினரால் கைது செய்யப்பட்ட மற்றும் சரணடைந்த விடுதலைப் புலிகளின் 900 போராளிகள் அடுத்த மாதம் முதல் வாரத்தில் விடுவிக்கப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இது குறித்து ஊடகங்களுக்கு கருத்து வெளியிட்ட சிறைச்சாலை மறுசீரமைப்பு அமைச்சின் செயலாளர் ஏ.திஸாநாயக்க இவ் வருட இறுதிக்குள் புனர்வாழ்வு வழங்கப்பட்டு வரும் முன்னாள் விடுதலைப் புலிகளின் உறுப்பினர்கள் அனைவரையும் விடுதலை செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் எனத் தெரிவித்தார். இது குறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது.

புனர்வாழ்வு முகாம்களில் 4ஆயிரம் முன்னாள் விடுதலைப் புலிகளின் உறுப்பினர்கள் தற்போது எஞ்சியுள்ளனர். அவர்களுக்கான புனர்வாழ்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இந்த வருட இறுதிக்குள் புனர்வாழ்வளிக்கப்படும் முன்னாள் விடுதலைப் புலிகளின் உறுப்பினர்கள் அனைவரையும் விடுதலை செய்வதற்குநடவடிக்கை (20ஆம்பக்கம்பார்க்க)

# கூட்டமைப்பும் முஸ்லிம் காங்கிரஸும் இணைந்து கொண்டால் தீர்வு சாத்தியம்

## நாடாளுமன்ற உறுப்பினர் ஹரீஸ்

(கொழும்பு)

**தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு முஸ்லிம் காங்கிரஸையும் அரவணைத்துச் செல்வதன் மூலமே இனப்பிரச்சினைக்கு முழுமையான தீர்வைப் பெற்றுக்கொள்ள முடியுமெனவும் இவ் விவகாரம் தொடர்பில் அக்கட்சி கவனம் கொள்ள வேண்டும் எனவும் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் அரசியல்துறைப் பொறுப்பாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ஹரீஸ் தெரிவித்துள்ளார்.**

சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் இனப் பிரச்சினைத் தீர்வு தொடர்பாக ஒருமித்துச் செயற்படுவதாக முடிபெடுத்திருந்த போதிலும் கூட்டமைப்பை அரசாங்கம் பேச்சுவார்த்தைக்கு அழைத்த போது அந்த உறுதிமொழியைக் காற்றில் பறக்க விட்டுவிட்டதாக அவர் குற்றம் சுமத்தியுள்ளார். இவ் விடயம் தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு நெருக்கடி ஏற்பட்ட வேளையில் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸை துணைக்கு அழைத்து பேச்சு வார்த்தை நடத்தியது. ஆனால் இப்போது முஸ்லிம் சமூகத்தைப் பற்றி ஒரு வார்த்தையேனும் பேச மறுக்கின்றது.

முஸ்லிம்களின் அரசியல் அபிலாஷைகள் மற்றும் பல்வேறு பிரச்சினைகளை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கருத்தில் எடுக்க வேண்டும்.

இலங்கையின் இனப்பிரச்சினைத் தீர்வில் இரண்டு சமூகமும் பொதுவான இணக்கப்பாட்டுக்கு வர வழி செய்ய வேண்டும்.

வடமாகாணத் தமிழர்களின் அரசியல் சார்ந்த செயற்பாடுகள் நிர்வாக விடயங்களில் ஒரு சில முஸ்லிம் அரசியல்வாதிகள் மூக்கை நுழைப்பதை நாம் கண்டிக்கிறோம்.

வட மாகாணத்திலுள்ள முஸ்லிம்கள் தமது பிரதேச நலன்களைக் கருத்திற் கொண்டு தமக்கென பிரதிநிதிகளை உருவாக்குவது மிகச் சரியானதே. ஆனால் அத்தகைய அரசியல்வாதிகள் தமிழ் மக்களை மேலாண்மை செய்வதை நாம் ஒரு போதும் விரும்பவில்லை என அவர் மேலும் குறிப்பிட்டார். (ந-5)

## சவுதியில் பணிபுரிவதற்கு புதிய நடைமுறை அறிவிப்பு

(கொழும்பு)

சவூதியிலுள்ள முகவர் ஒருவரின் துணையின்றி இலங்கையரை வேலைவாய்ப்புக்காக சவூதி அரேபியாவுக்கு அனுப்புவதை இலங்கையின் வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் தடை செய்துள்ளது.

இதற்கான புதிய சுற்று நிருபமொன்றை பணியகம் இலங்கையிலுள்ள அனைத்து வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவர் நிலையங்களுக்கும் அனுப்பி வைத்துள்ளது என பணியகத்தின் தலைவர் சட்டத்தரணி கிங்ஸிலி ரணவக்க தெரிவித்தார்.

சவூதி அரேபியாவிலுள்ள வேலைவாய்ப்பு முகவர் ஒருவரின் துணையின்றி தனிப்பட்ட முறையில் அங்கு தொழிலுக்கான நுழைவு அனுமதியைப் பெற்று இங்குள்ள வேலைவாய்ப்பு முகவர்களின் ஊடாக ஆட்களை அனுப்புவது இதன் மூலம் தடுக்கப்படுகிறது.

சவூதி அரேபியா அரசின் அனுமதி பெற்ற வேலைவாய்ப்பு முகவர்கள் ஊடாக வரும் நுழைவு அனுமதிக்கு மட்டுமே ஆட்களை அனுப்ப முடியும். அவ்வாறு வராத நுழைவு அனுமதிகளுக்கு ஆட்களை அனுப்ப முடியாது.

நீண்டகாலமாக சவூதி அரேபியாவின் வெளிநாட்டு தொழில் துறையில் ஏற்பட்டுவந்த சிக்கல்கள், பிரச்சினைகள் தொடர்பாக ஆராய்ந்த பின்னரே இந்த முடிபு எடுக்கப்பட்டதாக பணியகத்தின் தலைவர் ரணவக்க தெரிவித்துள்ளார்.

சவூதி அரசினால் அங்கீகாரமளிக்கப்பட்ட வேலைவாய்ப்பு முகவரினால் அனுப்பப்படும் நுழைவு அனுமதிக்கு ஆட்களை அனுப்பும் போது தொழில் வழங்குநரின் முழுமையான விபரம், விலாசம், வழங்கப்படும் கொடுப்பனவு, வேலை செய்ய வேண்டிய காலப்பகுதி, உட்பட முக்கிய தரவுகள் அனைத்தும் அறியக்கிடைப்பதுடன், தொழிலுக்காக செல்லும் நபருக்கு வழங்கப்படும் சலுகைகள் பற்றியும் உள்ளடக்கப்பட்ட நுழைவு அனுமதியே இங்கு அனுப்பப்படும்.

தனிப்பட்ட முறையில் சவூதியிலிருந்து வரும் நுழைவு அனுமதிக்கு வேலை வாய்ப்புக்காக ஒருவர் செல்வதானால் சவூதியிலுள்ள இலங்கை தூதரகத்தில் தொழில் வழங்குநர் பற்றிய சகலவிபரங்களையும் வழங்குவதுடன். வழங்கப்படும் கொடுப்பனவு மற்றும் வேறு சலுகைகள் பற்றிய முழுமையான விபரங்களடங்கிய ஆவணமொன்றை தயாரித்துநுழைவு அனுமதியுடன் இலங்கையில் தொழிலுக்காக செல்பவருக்கு அனுப்பிவைக்கவேண்டும் இதன்பின்னரே அவர் சவூதி அரேபியா செல்ல முடியும். (ந-5)


**Study & Work in UK and Canada**

Intake Get Register Now
Collecting the application until March 31st 2011
start the academic on August 2011
இறுதிச் சந்தர்ப்பம் IELTS தேவையில்லை
Administration & Documentation
என்பன வெற்றிகரமான முறையில் எங்களால் செய்து தரப்படும்.
ஐரோப்பிய நாடுகளுக்கான வீஸா பெறுவதற்கான Sponsorship பிரச்சினையா? உடனடியாக ஏற்பாடு செய்து தரப்படும்.
சகல தொடர்புகளுக்கும்: 0729994777
London City College
No.01, Deanston House, Deanston Place, Colombo-03
(C-2291)

**வர்த்தகப் பெருமக்களே...**

பெறுமதிமிக்க உங்கள் வியாபார நிறுவனங்களை இலகுவாகப் பதிவு செய்து, அதற்குரிய கௌரவத்தையும் உத்தரவாதத்தையும் பெற்றுக் கொள்ளுங்கள்.
தொடர்புகளுக்கு:-0729994777
(C-2290)

**ஆசிரியர் தேவை**

ஆங்கிலம் கற்பிப்பதற்கு ஆசிரியர் தேவை.
இருபாலாரும் தொடர்பு கொள்ளலாம்.
தொடர்புகளுக்கு :-
0722238778
(4993)

**தவறிவிட்டது**

(4988)
கனகசபாபதி என்னும் பெயர் உடைய N4198093 இலக்கம் கொண்ட கடவுச்சீட்டு 09.05.2011 அன்று யாழ்.பல்கலைக்கழகத்திற்கும் யாழ்.கல்வி வலய பணிமனைக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் 0718034182 என்ற தொலைபேசி இலக்கத்திற்கு தயவு செய்து தகவல் தரவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

**காணி விற்பனைக்கு**

யாழ்.நகர் அரியாலை பொன்னம்பலம் சந்தி A9 வீதிக்கு அண்மையில் 6பரப்பு காணி விற்பனைக்கு உண்டு.
நேரடித் தொடர்புக்கு:
T.P.: 0776115042
(4991)


## துயர் பகிர்தல்



**கனகசபை அருணாசலம்**

யா / கொக்குவில் இந்துக்கல்லூரியின் முதல்வரும் வடமாகாண அதிபர்கள் சங்கத்தின் செயலாளருமாகிய திரு.அ.அகிலதாஸ் அவர்களது அன்புத் தந்தையார்

**கனகசபை அருணாசலம்**


அவர்கள் இறைபதம் எய்திய செய்திகேட்டு மிகு துயரடைகின்றோம். அவர் தம் குடும்பத்தவரது துயரில் நாமும் பங்கேற்பதுடன் அன்னாரது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

-வடமாகாண அதிபர்கள் சங்கம்

(C-3274)

## மரண அறிவித்தல்

### சின்னப்பு ஜேசுதாசன் (பெரியதம்பி)



வசாவிளானைப் பிறப்பிடமாகவும் 16/3, கச்சேரி நல்லூர் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னப்பு ஜேசுதாசன் அவர்கள் 22.05.2011 அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னப்பு மரியம்மா தம்பதியினரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான சின்னப்பு சூசானம் தம்பதியினரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற ஞானம்மாவின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற அலோசியஸ் மற்றும் மரியதாஸ், சேவியர், அமலதாஸ் ஆகியோரின் சகோதரரும் காலஞ்சென்ற பிரதீபன் மற்றும் அன்றூ, கொன்சி, பெனோஜன், பெனோஜினி, இளங்கோ, கவிதா ஆகியோரின் அன்புத் தந்தையாரும், பெனிற்றா, அருள், யோகன், மாலா, ஜேசுதாசன், பிரியா, வினோத் ஆகியோரின் அன்பு மாமானாரும், பிரவீனா, ராஜன், கெவின், லியோன், டன்சிகா, அபிஷனா, லரிஷா, நிருஷா, அக்ஷிகன் ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று திங்கட்கிழமை (23.05.2011) மாலை 3.30 மணிக்கு அவரது இல்லத்திலிருந்து இறுதி அஞ்சலிக்காக புனித திரேசம்மாள் ஆலயத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு பின்னர் கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

(4994)
**16/3, கச்சேரி நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்.** தகவல்: **குடும்பத்தினர்**

## இன்று ஒரு தகவல்

# மனநிறைவு

ஒரு ராஜா இருந்தார். நாடு முழுவதும் நிறைய மரங்களை நட்டு வளர்க்க வேண்டும் என்பது அவரது விருப்பம். தானே அதற்கு முன் மாதிரியாக இருக்க வேண்டும் என்று அவர் நினைத்தார். ஆதலால் அரண்மனையைச் சுற்றி நிறைய மரங்கள் நட்டு வைத்தார்.

இதைப் பார்த்த மக்களும் தங்கள் தங்கள் வீடுகளைச் சுற்றி மரக்கன்றுகளை நிறைய நட்டு வளர்த்தார்கள். அதனால் சிறிது காலத் திற்குள் ஊர் முழுவதும் பசுமையாக மாறிவிட்டது... இது எல்லோ ருக்கும் மகிழ்ச்சியைத் தந்தது.

இது ஒரு பக்கம் இருக்கட்டும். இப்போது நான் வேறு ஒரு கதையைச் சொல்லப் போகிறேன்.

அதாவது... அந்த ராஜா ஒரு நாள் தன்னுடைய அரண்மனையைச் சுற்றியிருக்கும் விதவிதமான மரங்களையெல்லாம் சென்று பார்த்தார். "எப்படி இருக்கிறீர்கள்?" என்று ஒவ்வொரு மரத்திடமும் விசாரித்தார். எந்த மரமும் சந்தோஷமாகயிருப்பதாகத் விசாரித்தார். எந்த மரமும் சந்தோஷமாகயிருப்பதாகத் தெரியவில்லை... அது அதற்கும் மனதில் ஒரு குறை!

முதலில் அரசர் ஆலமரத்திடம் சென்றார். அது கூறியது. "மன்னா... நான் நன்றாகப் பெரிய மரமாகத் தான் வளர்ந்திருக்கிறேன்... அடர்த் தியாகவும் இருக்கிறேன். என்னுடைய கிளைகளெல்லாம் நாலா புறத் திலும் நன்றாகப் படர்ந்துதான் இருக்கின்றன. இருந்தாலும் என்ன பிரயோசனம்? என்னுடைய பழம் மிகவும் சிறிதாக அல்லவா இருக் கிறது! என் கண்ணுக்கே அது புலப்பட மாட்டேன் என்கிறதே... 'சைஸ்' க்கு என் கிளையில் இருக்கும் பழம் எவ்வளவு பெரிதாக இருக்க வேண்டும்? அப்படியில்லாமல் அது இவ்வளவு சிறியதாகயிருப்பது எனக்குப்பெரிய அவமானமாக இருக்கிறது. இப்படி இங்கே நின்று கொண்டிருப்பதே பெரிய கூச்சமாக உள்ளது. ஒரு நல்ல புயல் வந்தால் பேசாமல் சாய்ந்து விடலாமா என்று பார்க்கிறேன் என்று கூறி ஆலமரம் புலம்பியது.

'சரி, இருக்கட்டும்' என்று நினைத்துக் கொண்டு ராஜா அடுத்தபடி யாக ஓர் அத்திமரத்திடம் சென்றார். அதுவும் புலம்ப ஆரம்பித்து விட்டது.

"நான் கூட பெரிய மரம்தான்... என் இலை அழகாகத்தான் இருக்கிறது."

"பழம் அழகாக இருக்கிறது... இருந்தாலும் உள்ளே விடயம் இல் லையே. அத்திப் பழத்தைப் புட்டுப் பார்த்தா, அத்தனையும் சொத்தை என்று ஒரு பழமொழியே உண்டாக்கி விட்டதே... இப்படி ஒரு கெட்ட பெயரோடுதான் இருக்க வேண்டுமா?", என்று அது வினவியது.

"சரி... இது இருக்கட்டும்" என்று மன்னன் அடுத்த படியாக வேப்பம ரத்திடம் சென்றார். அது தன்னுடைய வேதனையை வெளியிட்டது.

"எனக்கு எவ்வளவோ மருத்துவ குணங்களெல்லாம் இருப்பதாக மக்கள் சொல்கிறார்கள். இருந்தாலும் என்ன பயன்? என்னுடைய பழத்தை மக்கள் விரும்பிச் சாப்பிடுவதில்லையே!" என்று தெரிந்தது.

ராஜா...அடுத்தபடியாக இருந்த ஒரு பனை மரத்திடம் சென்றார். "நான் நன்றாக உயரமாகத்தான் வளர்ந்திருக்கிறேன். மற்ற மரங்களெல் லாம் என்னை அண்ணார்ந்துதான் பார்க்க வேண்டும். இருந்தாலும் என்னிடம் நிழலுக்கு யாரும் வந்து ஒதுங்குவதில்லையே!" என்று கூறி அது அலுத்துக் கொண்டது.

"என்ன இது? எல்லா மரமும் இப்படி திருப்தி இல்லாமல் இருந்து கொண்டிருக்கின்றனவே...!" என்று நினைத்தபடியே ராஜா அடுத் தபடியாக அங்கிருந்தே ஒரு "பைன்" மரத்திடம் போனார்.

அழகாக, உயரமாக, பசுமையாகத்தான் பைன் மரம் இருந்தது. ஆனால் அதில் பூவோ, பழமோ கிடையாது. அதை நினைத்து அந்த மரம் வருத்தப்பட்டுக் கொண்டிருந்தது.

"ஒக் மரம் நின்று கொண்டிருந்தது. அது என்ன சொல்லிய தென்றால் இலையுதிர் காலத்தில் என் மீதுள்ள எல்லா இலைகளும் உதிர்ந்து போகின்றன. முடிகொட்டிய மனிதர்களைப் போல மொட்டையாக நான் நிற்க வேண்டியிருக்கிறது... என்ன வாழ்க்கை இது? எல்லாம் என் தலையெழுத்து?" என்று கூறி அலுத்துக் கொண்டது.

"சரி... புளியமரம் என்ன சொல்கிறது பார்ப்போம்" என்று நினைத்தபடியே அரசர் அதனிடம் சென்றார்.

"என்னுடைய நிழலில் யாரும் தங்கமாட்டார்கள்" உடம்புக்குச் சூடு!" என்று ஒதுங்கிப் போகிறார்கள். அடிமரத்தைப் பார்த்தீர்களானால் பட்டையெல்லாம் உரிந்து போய் பார்ப்பதற்கே வேதனையாக இருக்கிறேன்!" என்று கூறி புளியமரம் வருத்தப்பட்டுக் கொண்டது.

முருங்கைமரம் என்ன சொல்லியது தெரியுமா?

"என் இலை-காய் எல்லாம் சாப்பிடுகிறவர்களுக்கு சத்து கொடுக் கிறது என்பது உண்மைதான். ஆனால் என் உடம்பில் சத்தே கிடையாது. கொஞ்ச வேகமாக காற்று அடித்தால் முறிந்து விடுகிறேன். என்ன வாழ்க்கை இது?" என்று சொல்லி வருத்தப்பட்டது.

ராஜா யோசித்தார்... என்ன இது? மரங்கள் பூமியின் வரங்கள் என்று சொல்கிறோம். மழை பெய்வதற்கே மரங்கள் தான் காரணம். அவைகளால் தான் பூமியே செழிப்பாக இருக்கிறது. வீடு கட்ட- மேசை, நாற்காலி செய்ய மரங்கள் உபயோகப்படுகின்றன. மக்களுக்கு வேண் டிய உணவுகளையும் அவை கொடுக்கின்றனவே" என்று நினைத்தார்.

அப்போது அங்கே ஒரு மகிழமரம் அவர் கண்ணில் பட்டது. அந்த மரம் மட்டும் நிம்மதியாக -மகிழ்ச்சியாக -மன நிறைவுடன் இருப்பது போல் தெரிந்தது.

"அப்படியா!" என்று ஆச்சரியமாக கேட்டார் ராஜா.

ஆமாம் மன்னா.. இந்த இடத்தில் நீங்கள் ஒரு முருங்கை மரத் தையோ, வேப்ப மரத்தையோ கூட நட்டிருக்கலாம். ஆனால் இந்த இடத்தில் நடுவதற்கு என்னைத் தேர்ந்தெடுத்தீர்களே...அதுவே எனக்கு மகிழ்ச்சி... அதுவே எனக்கு பூரண திருப்தி என்றது மகிழமரம்.

மகிழமரம் சாதாரணமாகத்தான் இருக்கும். இளம் மஞ்சள் நிறத்தில் பூக்கள்... அது காய்ந்து மணம் வீசும்.

மகிழமரம் போன்று மனதிருப்தியுடன் வாழ்வதற்கு மனதர்களாகிய நாம் கற்றுக் கொள்ள வேண்டும்.

நாம் இந்த உலகத்தில் ஒரு நாயாகவோ, நரியாகவோ பிறக்காமல் மனிதர்களாகப் பிறந்திருக்கிறோமே... அதுவே பெருமையில்லையா? இந்த மனநிறை தான் மகிழ்ச்சியின் இரகசியம்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# ஐ.நா. நிபுணர் குழு அறிக்கைக்கு எதிராக ஜெனீவாவில் ஆர்ப்பாட்டம்

(கொழும்பு)

ஐக்கிய நாடுகள் நிபுணர் குழு வின் அறிக்கைக்கு எதிராக ஜெனீ வாவில் ஆர்ப்பாட்டமொன்றை மேற் கொள்ள பிரான்ஸ், இத்தாலி, சுவிற் சர்லாந்து ஆகிய நாடுகளில் வாழும் இலங்கையர்கள் ஏற்பாடொன்றை மேற் கொண்டுள்ளனர்.

எதிர்வரும் ஜூன் 2 ஆம் திகதி பிரஸ்தாப ஆர்ப்பாட்டம் நடைபெற வுள்ளது. ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொள்ளவுள்ள பிரான்ஸ் மற்றும் இத்தாலி நாடுகளில் வாழும் இலங் கையர்களுக்கான ஆர்ப்பாட்டங் களில் அந்நாடுகளில் அமைந் துள்ள இலங்கைத் தூதரகங்கள் ஏற்பாடு செய்து கொடுத்துள்ளன.

அத்துடன் எதிர்வரும் 30 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள ஐக்கிய நாடுகள் மனித உரிமைக்கவுன் சிலின் அமர்வில் கலந்து கொள் ளும் இராஜதந்திரிகளுக்கு ஆர்ப் பாட்டத்தில் கலந்து கொள்ளும் இலங்கையர்கள் மகஜரொன்றைக் கையளிக்கவுள்ளனர்.

பிரஸ்தாப மகஜரில் இலங்கையில் போர்க் குற் றங்கள் நடைபெற வில் லை என்றும் அவ்வாறான அறிக்கைகள் போலியா னவை என்றும் வலியுறுத் தும் வண்ணம் வாசகங் கள் அமையப் பெற்றிருப் பதாக இராஜதந்திர வட் டாரங்களில் இருந்து தெரி யவருகின்றது.

ஏற்கனவே நியூயோர் க்கில் நடை பெற்ற இவ்வா றானதோர் ஆர்ப்பாட்டத் தில் இருபதுக்கும் குறை வான இலங்கையர்களே பங்கு கொண்டிருந்த நிலையில் இந்த ஆர்ப்பாட் டம் வெற்றிக்கரமாக நடைபெறுமா என்ற ஐயமும் அரசாங்க உயர் மட்டத்தினரிடையே காணப்படுகி ன்றது. (ஸ்ரீ-2)

# பத்து இலட்சம் கையெழுத்து மனு விரைவில் கையளிக்கப்படும்

### அமைச்சர் ரத்னாயக்க தெரிவிப்பு

(கொழும்பு)

ஐ.நா.சபை நிபுணர்குழு அறிக்கைக்கு எதிராக திரட்டப்பட்ட பத்து இலட்சம் கையெழுத்துக்கள் கொண்ட மனுவை இன்னும் சில நாட்களில் கையளிக்கவுள்ளதாக தனியார் போக்குவரத்துத் துறை அமைச்சர் சி.பி.ரத்நாயக்க.தெரிவித்துள்ளார்.

இலங்கையிலுள்ள ஐ: நா. சபை பிரதிநிதி ஊடாக இதைக் கையளிக்க உள்ளதாகவும், இது தவிர வெளிநாடுகளில் உள்ள இலங்கைத் தூதரகங்கள் மூலமும் இலங்கையின் எதிர்ப்பைத் தெரிவிக்க திட்டமிடப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார். (ஸ்ரீ)

# இந்து, பௌத்த கலாசார பேரவை அங்குரார்ப்பணம்

(யாழ்ப்பாணம்)

இந்து, பௌத்த கலாசார பேரவையின் அங்குரார்ப்பண நிகழ்வு இன்று திங்கட்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு இல.29, பழம் வீதி, கந்தர்மடத்தில் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வின் கௌரவ விருந்தினராக வண.அத்துரலியரத் தின தேரர், நல்லை திருஞானசம்பந்த ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். (ஸ்ரீ-2)

# குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | சாவகச்சேரி |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 80 | 100 | 80 |
| உருளைக்கிழங்கு | 80 | 80 | 70 |
| பச்சைமிளகாய் | 80 | 90 | 90 |
| தக்காளி | 120 | 80 | 70 |
| மரவள்ளிக்கிழங்கு | 50 | 40 | 50 |
| கோவா | 90 | 90 | 60 |
| கரட் | 120 | 100 | 70 |
| பூசணி | 40 | 40 | 30 |
| புடோல் | 40 | 60 | 30 |
| வாழைக்காய் | 30 | 40 | 25 |
| சின்ன வெங்காயம் | 130 | 130 | 150 |
| பெரிய வெங்காயம் | 50 | 50 | 50 |
| பாகற்காய் | 140 | 130 | 60 |
| வெண்டிக்காய் | 60 | 60 | 40 |
| கருணைக் கிழங்கு | 80 | 80 | - |
| பயற்றங்காய் | 50 | 30 | 30 |
| லீக்ஸ் | 70 | 80 | 80 |
| பீற்றூட் | 80 | 60 | 70 |
| கறிமிளகாய் | 140 | 100 | 100 |
| முருங்கைக்காய் | 300 | 300 | 250 |
| போஞ்சி | 100 | 100 | 100 |
| கத்தரிதம்புள்ள | 40 | 60 | 40 |
| கீரை - 1 பிடி | 30 | 40 | 20 |
| தேசிக்காய் | 150 | 150 | 130 |
| தேங்காய் (ஒன்று) | 50 | 50 | 50 |

# இராசி பலன்

*23.05.2011*
*(வைகாசி 9, திங்கட்கிழமை)*
*சூரியஉதயம் காலை 5.54 மணிக்கு*
*சஷ்டி பிற்பகல் 1.41 மணிவரை*
*திருவோணம் முன்னிரவு 8.23 மணிவரை*
*இராகு காலம் 7.22-8.52 மணிவரை*
*சுபநேரம் 11.52-1.22 மணிவரை*
*அமிர்த சித்தம்*

**மேடம்** புதிய முயற்சிகளில் வெற்றி பெறும் நாள், பெரிய மனிதர்க ளின் உதவிகள் கிடைக்கலாம், வருங்கால நலன் கருதி சேமிக்க முற்படுவீர்கள், சுப செய்திகள் வந்து சேரலாம்.

**இடபம்** அரைகுறையாக இருந்த பணி களை மீண்டும் தொடர்வீர்கள், குடும்பத்தில் நிலவிவந்த சொல் யுத் தம் சுமுகமாக முடியும், புதிய முயற் சிகளில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**மிதுனம்** எதிர்பார்ராத வகையில் சில மனஸ் தாபங்கள் ஏற்படலாம், பிரயாணங் களில் விழிப்புணர்வு தேவை, கௌர வக்குறைவான நாள், தேக நலனில் கூடிய கவனம் எடுப்பீர்கள்.

**கடகம்** நட்பால் நல்ல காரியமொன்று நடைபெறலாம், தொழிலில் மேலதிகாரிகளின் ஆதரவைப் பெறு வீர்கள், பொருட் சேர்க்கையுண்டு.

**சிங்கம்** தைரியத்தோடும் தன்னம்பிக்கை யோடும் பணிபுரியும் நாள், நீண்ட நாட்களாக தள்ளிப் போட்ட காரியம் ஒன்றை இன்று செய்து முடிப்பீர்கள், பாராட்டுப் பெறுவீர்கள்.

**கன்னி** இன்பங்கள் இல்லம் தேடி வரும் நாள், பூர்வபுண்ணிய கருமங்களில் ஈடுபடும் சூழ்நிலை அமையலாம், அதிகாரிகளின் பாராட்டுக்களைப் பெறுவீர்கள்.

**துலாம்** செல்வாக்கு அதிகரிக்கும் நாள், செல்லும் இடங்களில் சிந்தனை ஆற்றலால் சிறப்படைவீர்கள், தொழில் முன்னேற்றம் ஏற்படும், வாகன சுகமுண்டு.

**விருச்சிகம்** உடன் பிறப்புக்கள் மூலம் உள் ளம் மகிழும் நாள், தொலை பேசி மூலம் சுப செய்திகள் வந்து சேரும், செய் தொழி லால் முன்னேற்றம் ஏற்படும்.

**தனுசு** தொழிலில் மேன்மையும் உயர்வும் கிடைக்கும் ,குடும்பத்தில் மங்கல ஓசை கேட்பதற்கான அறிகுறி தோன்றும், பொருளாதார நிலை உயரும்.

**மகரம்** தொட்ட காரியம் வெற்றி பெற கணபதியை வழிபட வேண்டிய நாள், உடல் நலனில் அதிக அக்கறை கொள்ள வேண் டிய நாள்.

**கும்பம்** மற்றவர்களால் ஏற்றம் பெறும் நாள், தொழில் வளர்ச்சிக்கு நண்பர்கள் உறுதுணை புரிவர், உறவினர் வருகையால் திடீர்ச் செலவுகள் ஏற்படலாம்.

**மீனம்** அதிர்ஷ்ட வாய்ப்புக்கள் தேடி வரலாம், ஆதரவு தருவோரின் எண்ணிக்கை அதிகரிக்கும், பய ணங்கள் செய்ய போட்ட திட் டங்கள் நிறைவேறலாம்.

வளவன்

# வடபகுதியிலுள்ள நெடுஞ்சாலைகள் அபிவிருத்தி செய்யப்படவுள்ளது

## அமைச்சர் பீலிக்ஸ் பெரேரா தெரிவிப்பு

(பூநகரி)

பூநகரிக் கோட்டத்தைச் சேர்ந்த 17 பாடசாலைகளுக்கு சமூக சேவை அமைச்சினால் குடிநீர்த்தாங்கி வழங்கும் நிகழ்வு நேற்று காலை 10 மணிக்கு பூநகரி மகாவித்தி யாலய விசேட அரங்கில் 661ஆம் படைப்பிரிவு கட்டளைத் தளபதி பிரிகேடியர் சன்னா கொடித்துவக்கு தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்து கொண்ட சமூக சேவைகள் அமைச்சர் பீலிக்ஸ் பெரேரா உரையாற்றுகையில், கடந்த 30 ஆண்டுகாலமாக நாம் எப்படியெல்லாம் வாழ்ந்தோமோ, அதை, அப்போது நடந்த துயரசம்பவங்களை நாங்களும் நீங்களும் மறந்து புது வாழ்வை ஆரம்பித்துள்ளோம்.

நாம் அனைவரும் இப்போது சந்தோசமாக இருக்கிறோம். இப்போது பல அபிவிருத்தி வேலைகள் ஆரம்பிக்கப்பட்டு துரிதமாக நடைபெற்றுவருகிறது.

இப்பகுதியில் உள்ள பல நெடுஞ்சாலைகளை அபிவிருத்தி செய்ய இறுதியாக நடைபெற்ற அமைச்சரவை கூட்டத்தில் பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. உங்கள் பிரதேச அபிவிருத்தியில் நாம் மிகவும் அக்கறையாக இருக்கிறோம்.

உங்கள் பிரதேசம் அபிவிருத்தியடைய நாடு அபிவிருத்தியடையும். அப்போது நாம் அனைவரும் சந்தோசமாக வாழும் நாள் வெகு சீக்கிரத்தில் வருமென்றார்.

இதன்போது அமைச்சர்களும் விருந்தினர்களும் 17 பாடசாலை அதிபர்களிடம் நீர்த்தாங்கிகளை கையளித்தனர்.

இந்நிகழ்வில் பூநகரிப் பகுதி கமக்கார அமைப்பினர், மாதர் சங்கத்தினர், கிராம முன்னேற்ற சங்கத்தினர் உட்பட பாடசாலை மாணவர்களும் ஆசிரியர்களும் சமுகமளித்திருந்தனர்.

(ஸ்ரீ-84)

# கிரிக்கெட் இறுதிப்போட்டியில் உதயசூரியன் வி.கழகம் வெற்றி

(பூநகரி)

தேசிய இளைஞர் சேவை மன்றத்தினால் இளைஞர் கழகங்களுக்கிடையிலான மெய்வல்லுநர் போட்டியும் பெருவிளையாட்டுப் போட்டியும் பூநகரி மகாவித்தியாலய மைதானத்தில் கடந்த வாரம் தொடக்கம் நடைபெற்று வருகிறது.

நேற்று முன்தினம் நடைபெற்ற கிரிக்கெட் இறுதிப்போட்டியில் நாச்சிக்குடா உதயசூரியன் விளையாட்டுக்கழகமும் பூநகரி மகாவித்தியாலய இளைஞர் கழகமும் மோதியதில் நாச்சிக்குடா உதயசூரியன் விளையாட்டுக்கழகம் 5 விக்கெட் இழப்புக்கு 128 ஓட்டங்களைப் பெற்று வெற்றிபெற்றது.

பூநகரி மகாவித்தியாலய இளைஞர் அணி சகல விக்கெட்டுக்களையும் இழந்து 59 ஓட்டங்களை மட்டும் பெற்றுக்கொண்டது.

இறுதிநாள் நிகழ்வுகள் எதிர்வரும் 26 ஆம் திகதி வியாழக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு நடைபெறவுள்ளதாக கிளிநொச்சி மாவட்ட தேசிய இளைஞர் சேவை மன்ற அலுவலர் தெரிவித்தார்.

(ஸ்ரீ-2)

# ஔடத தட்டுப்பாட்டுக்கு அதிகாரியே காரணம்

## சுகாதார அமைச்சு தெரிவிப்பு

கடந்த காலங்களில் அரச வைத்திய சாலைகளில் நிலவிய ஔடத பற்றாக்குறைக்கான முக்கிய காரணம் மருந்து விநியோகிக்கும் பிரிவைச் சேர்ந்த முன்னாள் இயக்குநர் ஒருவரே என சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

முன்னாள் இயக்குநருக்கு எதிரான ஒழுக்காற்று நடவடிக்கைகளை எடுக்க தீர்மானிக்கப்பட்டிருப்பதுடன், இவர் குறித்த அறிக்கை ஒன்றை சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிறிசேனவிடம் கையளிக்கவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அண்மைக்காலத்தில் புற்றுநோய், சிறுநீரகம், நீரிழிவு மற்றும் மாரடைப்பு போன்ற நோய்களுக்கான மருந்து வகைகளும் அரசாங்க வைத்தியசாலைகளில் பெரும் தட்டுப்பாடு நிலவியது.

இந்த பற்றாக்குறை குறித்து சுகாதார அமைச்சருடன் அண்மையில் அதிகாரிகள் குழுவொன்று விசேட பேச்சுவார்த்தை ஒன்றை மேற்கொண்டது.

இதன்போது அனுமதிக்கப்பட்ட கேள்விப்பத்திர விநியோகத்தினை 50 சதவீத குறைப்பு, குறிப்பிட்ட முன்னாள் இயக்குநரால் மேற்கொள்ளப்பட்டதாக அமைச்சரின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டது.

இதேவேளை, 24 ஆயிரம் வகையான மருந்து வகைகள், சத்திர சிகிச்சை உபகரணங்கள் மற்றும் இரசாயன மருந்துவகைகள் என்பனவற்றை இறக்குமதி செய்வதற்கு கிட்டத்தட்ட 450 கேள்விப்பத்திர சபைகள் கூடி, அதற்கான பரிந்துரைகளை மேற்கொண்டிருந்தது.

இதுதவிர, வெளிநாட்டு மருந்து உற்பத்தி நிறுவனங்களுக்கு உரிய அனுமதி வழங்கப்பட்டிருந்த போதிலும், சில நிறுவனங்கள் உரிய நேரத்தில் ஏற்றுமதியினை மேற்கொள்ள தவறியமையும் இந்த ஔடத பற்றாக்குறைக்கு காரணம் என தெரிவிக்கப்படுகிறது.

(ஸ்ரீ-2)

# டெங்கு காய்ச்சல் காரணமாக ஓட்டமாவடியில் மாணவர் உயிரிழப்பு

ஓட்டமாவடி 3ஆம் வட்டாரத்தைச்சேர்ந்த பாடசாலை மாணவர் ஒருவர் டெங்கு காய்ச்சல் காரணமாக கண்டி போதனா வைத்திய சாலையில் மரணமானார்.

ஓட்டமாவடி ஹிஜ்ரா வித்தியாலயத்தில் தரம் 2இல் கல்வி கற்றுக் கொண்டிருந்த முகம்மது அசனார் முகம்மது சராப் (வயது 7) என்பவரே டெங்கினால் பாதிக்கப்பட்டு மரணமுற்றவர் ஆவார்.

இதேவேளை, இந்த மாதத்தில் மிக வேகமாக டெங்கு நோய் பரவிவருவதாக சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது.

இந்த மாதத்தின் கடந்த 3 வாரங்களில் மாத்திரம் சுமார் 669 டெங்கு நோயாளர்கள் இனங்காணப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சின் தொற்று நோய் ஆய்வுப் பிரிவு தெரிவித்துள்ளது.

இதன்படி இந்த வருடத்தின் கடந்த வியாழக்கிழமை வரையிலான காலப்பகுதியில் மொத்தமாக 5 ஆயிரத்து 510 டெங்கு நோயாளர்கள் இனங்காணப்பட்டுள்ளதாகவும் அந்தப் பிரிவு குறிப்பிட்டுள்ளது.

இதேவேளை, கடந்த ஜனவரி மாதம் தொள்ளாயிரத்து 10 டெங்கு நோயாளர்களும், பெப்ரவரி மாதம் ஆயிரத்து 51 டெங்கு நோயாளர்களும் இனங்காணப்பட்டுள்ளனர்.


மார்ச் மாதம் ஆயிரத்து 118 பேர் டெங்கு நோயினால் பாதிக்கப்பட்டுள்ளதோடு, ஏப்ரல் மாதத்தில் ஆயிரத்து 762 பேர் பாதிக்கப்பட்டுள்ளமை கண்டறியப்பட்டுள்ளது.

(ஸ்ரீ-2)


# உலகக் கிண்ண கிரிக்கெட் போட்டி 2011

ICC Cricket World Cup 2011

## வினா-விடைப் போட்டி பரிசளிப்பு விழா



முதலாவது பரிசினை Media Electro Mart உரிமையாளர் மதிதரன் வழங்கிவைக்கிறார்.



மூன்றாவது பரிசினை PC Solutions உரிமையாளர் பி. கோகுலன் வழங்கிவைக்கிறார்.




Jaffna Electrical வழங்கிய நான்காவது பரிசில் வழங்கிவைக்கப்படுகிறது.




5ஆவது பரிசிலை சிங்கர்-மானிப்பாய் கிளை முகாமையாளர் பி.சிவபாலன் வழங்கிவைக்கிறார்.


தொடரும்...

union assurance
*Trust in your tomorrow, today.*

# 23.05.2011 இன்று கொழும்பு CINNAMON GRAND HOTEL இல் நடைபெறும் யூனியன் அஷ்யூரன்ஸ் P.L.C யின் வருடாந்த விருது வழங்கும் விழாவில் யாழ். பிராந்தியத்தில் இருந்து வெற்றியீட்டி விருதினைப் பெற்றுக்கொள்வோர்


MR.A.A.JANOSHAN
SALES MANAGER
FULL GOLD WINNER


MR.V.RAYMOND
AGENCY DEVELOPMENT OFFICER
FULL GOLD WINNER


MR.K.VIMALATHEESAN
AGENCY DEVELOPMENT OFFICER
HALF GOLD WINNER



MRS.S.SUGANYA
AGENCY DEVELOPMENT OFFICER
HALF GOLD WINNER


MRS.VAISHNAVI SRIVARATHAN
INSURANCE ADVISOR
FULL GOLD WINNER


MISS.SUJITHA BALENDRAN
INSURANCE ADVISOR
FULL GOLD WINNER


MRS.JEYAMATHY SIVASKUMAR
INSURANCE ADVISOR
FULL GOLD WINNER


MR.M.HARAN
INSURANCE ADVISOR
FULL GOLD WINNER



MR.S.THURUPARAN
INSURANCE ADVISOR
FULL GOLD WINNER


MR.S.MATHITHARAN
INSURANCE ADVISOR
FULL GOLD WINNER



MR.V.THUVARAGAN
INSURANCE ADVISOR
FULL GOLD WINNER
(POINTPEDRO BRANCH)


MR.R.ERIYASINGHAM
INSURANCE ADVISOR
FULL GOLD WINNER
POINTPEDRO BRANCH



MR.S.SASIKUMAR
INSURANCE ADVISOR
HALF GOLD WINNER


MR.U.JEYAKUMAR
INSURANCE ADVISOR
HALF GOLD WINNER


MISS.N.MATHYREKANA
INSURANCE ADVISOR
HALF GOLD WINNER


MR.T.RAJENDRAMOHAN
INSURANCE ADVISOR
HALF GOLD WINNER


MR.I.KASTRO
INSURANCE ADVISOR
MERIT


MR.J.JEGATHEESWARAN
INSURANCE ADVISOR
MERIT

**வாழ்த்துவோர்:-**

**யாழ். பிராந்திய முகாமையாளரும்**
**சக பணியாளர்களும்.**






குவைத் நாட்டின் சியாப் நிறுவனத்தின் நிதியுதவியுடன் பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சின் அனுசரணையுடன் குடத்தனை கிராம சேவை செயலகம் நேற்று முன்தினம் திறந்து வைக்கப்பட்டது. இதில் பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சர் டபிள்யூ டி. ஜோன் செனவிரட்ன பெயர்ப் பலகையை திரை நீக்கம் செய்து வைப்பதையும் பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கே.என். டக்ளஸ் தேவானந்தா நாடாவெட்டி திறந்து வைப்பதையும் நிகழ்வில் கலந்து கொண்டவர்களில் ஒரு பகுதியினரையும் படங்களில் காணலாம்.

(படங்கள்:- அலுவலக செய்தியாளர்)

# தேசிய இளைஞர் சேவை மன்றத்தினால் தையல் தொழிற் பயிற்சி நிலையம் திறப்பு

(தனங்கிளப்பு)

தேசிய இளைஞர் சேவை மன்றத்தின் யாழ். மாவட்ட அலுவலகத்தினால் ஒவ் வொரு பிரதேச ரீதியாக தொழிற்பயிற்சிகள் ஆரம்பிக்கப்பட்டு வருகிறன.

இதில் ஒரு கட்டமாக தென்மராட்சி பிரதேச செயலகத்திற்குட்பட்ட மறவன்புலோ கிராமத்தில் தேசிய இளைஞர் சேவை மன்றத்தின் வடமாகாண பணிப்பாளர் திருமதி. விமலேஸ்வரியால் நேற்று தையல் தொழிற் பயிற்சி நிலையம் வைபவ ரீதியாக ஆரம்பிக்கப்பட்டது.

இந்த நிகழ்வு இக்கழகத்தின் தொழிற் பயிற்சி செயலாளர் சி. முரளி தலைமையில் நடைபெற்றது.

இங்கு கருத்து தெரிவித்த வடமாகாண பணிப்பாளர், இக் கிராமம் யுத்தத்தினால் பாதிக்கப்பட்டு 10 வருடங்கள் பின்பாக மக்கள் மீளக்குடியமர்த்தப்பட்டதன் பின் இப்பயிற்சி நிலையம் இங்கு ஆரம்பிக்கப்படுவது யுவதிகளுக்கு முக்கியமானதாகக் கருதப்படுகிறது என்றார். இதில் தேசிய இளைஞர் சேவை மன்றத்தின் வடமாகாண கணக்காய்வாளர் இரத்தினகுமார், தென்மராட்சி இளைஞர் பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.ரி. விமலதாஸ் மற்றும் தென்மராட்சி இளைஞர் சேவை உத்தியோகத்தர் செ. உதயமோகன், கிராம சேவையாளர் ஆ. நடராசா மற்றும் கிராமத்தின் பொது அமைப்புக்களின் பிரதி நிதி ஆகியோர் கலந்து கொண்டனர். (ஸ்ரீ-37)

# சித்திரப் போட்டிகளுக்கான முன்னேற்பாட்டுக் கூட்டம்

(சாவகச்சேரி)

வடக்கு மாகாண கல்வியமைச்சினால் நடாத்தப்படும் ஆரம்பக்கல்வி மாணவர்களுக்கான சித்திரப் போட்டிகள்-2011 ஜூன் மாதம் தென்மராட்சி வலயப் பாடசாலைகளில் நடாத்தப்படவுள்ளது.

அதற்கான முன்னேற்பாட்டு ஆலோசனைக் கூட்டங்களும் ஆசிரியர் சந்திப்பும் தரம்-01 ஆசிரியர்களுக்கு 24 ஆம்திகதி செவ்வாய்க்கிழமையும் தரம்-02 ஆசிரியர்களுக்கு 26 ஆம்திகதி வியாழக்கிழமையும் தரம்-03 ஆசிரியர்களுக்கு 27 ஆம்திகதி வெள்ளிக்கிழமையும் தரம்-04 ஆசிரியர்களுக்கு 31 ஆம்திகதி செவ்வாய்க்கிழமையும் , தரம்-05ற்கான ஆசிரியர்களுக்கு ஜூன் மாதம் 2 ஆம் திகதி வியாழக்கிழமையும் தென்மராட்சி வலய கல்வி அலுவலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறுமென சித்திரப்பாட உதவிக்கல்விப் பணிப்பாளர் போ.கைலாசநாதன் அறிவித்துள்ளார்.

மேற்குறித்த வகுப்புக்களில் கற்பிக்கும் ஆசிரியர்களை தவறாது குறிப்பிட்ட தினங்களில் சமுகமளிக்குமாறு அவர் கேட்டுள்ளார்.(ஸ்ரீ-29)

# இனந்தெரியாத விஷமிகளால் வீதிவிளக்குகள் சேதம்

(கொழும்புத்துறை)

கொழும்புத்துறை ஆனந்தன் விடுதி வீதிப் பகுதியில் உள்ள மின் விளக்குகளை இனந்தெரியாத குழுவினர் சேதப்படுத்தியுள்ளதாக அப்பகுதி மக்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

குறிப்பாக குழந்தை இயேசு சொருபத்துக்கு அண்மையிலுள்ள சுட்டிவிளக்கு அடித்துடைக்கப்பட்டுள்ளது.

இனந்தெரியாத விஷமிகளின் இச்செயற்பாடு குறித்து மக்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.

இது குறித்து சம்பந்தப்பட்டவர்கள் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென அப்பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர்.

(ஸ்ரீ-51)

# தமிழ் இணைய பல்கலைக்கழகத்தினால் இணைய வழிப் பரீட்சைகள்

(மந்துவில்)

தமிழ் இணைய பல்கலைக்கழகத்தினால் (Tamil vitural university) 2010-2013 கல்வியாண்டு மாணவர்களுக்குரிய இணையவழி பரீட்சைகள் அவர்களின் பாடப்பரப்பிற்கு அமைவாக எதிர்வரும் ஜூன் மாதம் நடுப்பகுதியில் நடைபெறவுள்ளது.

இதற்கமைய யாழ்ப்பாணத்தில் பதிவுகளை மேற்கொண்ட முதலாம் அணி மாணவர்கள் அனைவரும் யாழ். மாவட்ட இணைப்பாளருடன் தொடர்பு கொண்டு வேண்டிய தகவல்களைப் பெற்று பரீட்சைக்கு தோற்றுமாறு இணைப்பாளர் அறிவித்துள்ளார்.

2011-2014 ஆம் ஆண்டு மாணவர்களுக்கான புதிய பதிவுகள் எதிர்வரும் ஜூன் மாதம் 30 ஆம் திகதிக்கு முன்னதாக மேற்கொள்ளுமாறு இரண்டாம் அணி மாணவர்கள் கேட்கப்படுகின்றனர்.

க.பொ.த(சாதாரண தரம்), க.பொ.த (உயர்தரம்) ஆகிய பெறுபேறுகள் , பிறப்பு அத்தாட்சிப் பத்திரம், தேசிய அடையாள அட்டை, போட்டோ கொப்பி பிரதி என்பவற்றுடன் பதிவுகளை மேற்கொள்ளுமாறு அவர் அறிவித்துள்ளார்.

இதற்கான வகுப்புக்கள் எதிர்வரும் 29 ஆம் திகதி ஆரம்பமாகி பிரதி ஞாயிறு தோறும் காலை 9.30 மணிக்கு இடம் பெறவுள்ளது.

(ஸ்ரீ-2-102)

# "பன்மைத்துவக் கலாசாரம் ஊடாக சமாதானம்" கவிதை, சித்திரப் போட்டி முடிவுகள்

(அல்வாய்)

பன்மைத்துவ கலாசாரம் ஊடகச் சமாதானம் எனும் தொனிப்பொருளில் பருத்தித்துறைக் கோட்ட பாடசாலை மாணவர்களுக்கு இடையில் நடத்தப்பட்ட சித்திர, கவிதைப் போட்டி முடிவுகள் அறிவிக்கப்பட்டுள்ளன.

இதில் முதல் மூன்று இடங்களைப் பெற்றோர் விபரம் வருமாறு,

**சித்திரப்போட்டி**

**பிரிவு-1**

கி.யதுசாயினி ( தும்பளை சிவப்பிரகாச ம.வி), பு.அர்ச்சயா (மேலைப்புலோலி சைவப் பிரகாச வித்தி), கி.டிறோஜன் (கலட்டி றோ.க. த.க. பாட)

**பிரிவு-2**

கி.யதுகோபி ( தும்பளை சிவப்பிரகாச ம.வி), வி.அ.அன்ரனிசாள்ஸ் (பொலிகண்டி இ.த.க.பா), சே.கௌரீசன் (ஹாட்லிக் கல்லூரி)

**பிரிவு-3**

ச.அஜந்தன் (பொலிகண்டி இ.த.க.பாட), ய.மேனன் ( தொண்டைமானாறு வீரகத்தி ம.வி), ச.சிந்துஜன் (ஹாட்லிக் கல்லூரி)

**பிரிவு -4**

யோ.பகீரதன் (ஹாட்லிக் கல்லூரி), பி.டினேஸ் ( தும்பளை சிவப்பிரகாச ம.வி), யோ. செந்தூரன் (புற்றளை மகா வித்தி)

**பிரிவு-5**

ஜெ.நிரூபன் (ஹாட்லிக் கல்லூரி),யோ. சிவரூபி (புற்றளை மகா வித்தி), க.சுஜீவ் (தொண்டைமானாறு வீரகத்தி ம.வி)

**கவிதைப் போட்டி**

**பிரிவு-1**

ஆர்.டொனாடோ (கலட்டி றோ.க.த.க. பாடசாலை), ரி.சுபாஸ்(பரு.சித்திவிநாயகர் வித்தியாசாலை), ஆர்.நிலக்சனா (பொலிகண்டி இ.த.க. பாடசாலை)

**பிரிவு-2**

சி.சிந்துஜா (மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலை), ஜெ.விவேகா (பரு.சித்திவிநாயகர் வித்தியாலயம்), ஆர். விதூஷன் (கலட்டி றோ.க.த.க. பா)

**பிரிவு-3**

மா. மாதுரி (மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலை),ச.சரண்ஜா (புற்றாளை மகா வித்தியாலயம்), கே.சுவஸ்திகா(புலோலி மெ.மி.த.க. பாடசாலை)

(ஸ்ரீ-19)




# வாய்ப்பாட்டு மனனப் போட்டி

(சாவகச்சேரி)

தென்மராட்சி கல்வி வலய ஆரம்பக் கல்வி பிரிவு மாணவர்களுக்கான பல்வேறு வகையான போட்டிகளின் வரிசையில் எதிர்வரும் 25 ஆம் திகதி புதன்கிழமை தரம் -02 மாணவர்களுக்காண வாய்ப்பாட்டு மனனப் போட்டி மீசாலை விக்னேஸ்வரா மகா வித்தியாலயத்திலும் அறநெறி மாணவர்களுக்கான மனனப் போட்டி எதிர்வரும் 30 ஆம் திகதி திங்கட்கிழமை கைதடி நுணாவில் அ.த.க. பாடசாலையில் நடைபெறும் என்று ஆரம்பக் கல்வி உதவிக் கல்விப்பணிப்பாளர் த.ஸ்ரீஸ்கந்தராஜா அறிவித்துள்ளார். (ஸ்ரீ-29)

# நூல் வெளியீடும் கலைஞர்கள் கௌரவிப்பும்

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழக அருள்மிகு பார்வதி சமேத பரமேஸ்வரன் தேவஸ்தான மஹா கும்பாபிஷேக தின விழா திருவூஞ்சல் நூல் வெளியீடும் கலைஞர்கள் கௌரவிப்பும் இன்று காலை 9 மணிக்கு யாழ்.பல்கலைக்கழக பரமேஸ்வரன் ஆலயத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் காலை 8 மணிக்கு நவோத்திர ஸஹஸ்ர சங்காபிஷேகமும் காலை 10 மணிக்கு கலாபூஷணம் கே.எஸ்.ஆர்.திருஞானசம்பந்தன் வழங்கும் பண்ணிசையும் காலை 11.50 மணிக்கு திருவூஞ்சல் பா நூல் வெளியீடும் இடம்பெறவுள்ளது.

இதனைத் தொடர்ந்து கலைஞர்கள் கௌரவிப்பு இடம்பெறவுள்ளது. (ஸ்ரீ)

சலை, யாழ்ப்பாணம்,



# ராகு - கேது பெயர்ச்சி பலன்கள்

## 16.05.2011 முதல் 01.12.2012 வரை




**(பூரட்டாதி 4ஆம் பாதம், உத்தரட்டாதி, ரேவதி முடிய)**

**தெய்வ தரிசனம் திருப்தி தரும்!**

எவரிடமும் எளிதாக நெருங்கிப் பழகும் இயல்பைப்பெற்ற மீனராசி நேயர்களே!

உங்கள் இராசிநாதன் குரு புத்திரகாரகன் என்றும், பொன்னவன் என்றும் வர்ணிக்கப்படுகிறார். மனதில் பட்டதை மறைக்காமல் சொல்பவர்கள் நீங்கள் தான் மற்றவர்களுக்கு வலியச்சென்று உதவுகின்ற எண்ணம் உங்களுக்கு உண்டு. பேச்சாற்றல் மிக்க நீங்கள் எதிரிகளைக்கூட நண்பர்களாக மாற்றி விடுவீர்கள்.

இராசியில் கடைசிராசியாக இருந்தாலும், வளர்ச்சியில் முதல் இராசியாக காட்சியளிப்பீர்கள் பணபலத்தால் மற்றவர்கள் சாதிக்கமுடியாததை நீங்கள் பக்கபலமாக இருக்கும் நண்பர்களால் சாதித்துக் காட்டுவீர்கள். நாகரீக பொருட்களின் மீது மோகம் கொள்வீர்கள் எந்தவொரு செயலிற்கும் காரணமுண்டு என்று சொல்லும் நீங்கள். அரசியல் வாதிகளில் அதிகபேரை நண்பர்களாக பெற்றிருப்பீர்கள்.

உறுதியான மனமே உங்கள் மூலதனமாக இருப்பதால் இறுதியாக நீங்கள் எடுக்கும் முடிவை எல்லோரும் ஏற்றுக்கொள்வார்கள். நீதி, நியாயத்துக்காக போராடுவீர்கள். சுற்றுப்பயனத்தில் அதிக ஆர்வம் காட்டுவீர்கள். இரவு நேரம் விழிப்பதைக் கூட இனிமையாகக் கருதுவீர்கள்.

இப்படிப்பட்ட குணாதிசயங்களைப் பெற்ற உங்களுக்கு இந்த ராகு - கேது பெயர்ச்சி கொடுக்கப் போகிற மாற்றங்களையும், ஏற்றங்களையும் பற்றிப் பார்ப்போம்.

**ஒளிமயமான வாழ்வு தரும் ஒன்பதாம் இடத்து ராகு!**

**உடன்பிறப்புகளின் உறவை பலப்படுத்தும் மூன்றாமிடத்து கேது!**

இதுவரை தனுசு இராசியில் சஞ்சரித்து வந்த ராகுவும், மிதுன இராசியில் சஞ்சரித்து வந்த கேதுவும் 16.05.2011 அன்று தனது வான் வெளிப்பயணத்தில் பின்நோக்கிச் சென்று உங்கள் பிரச்சினைகளுக்கு நல்ல வழி வகுத்துக் கொடுக்கப் போகிறார்கள். 9ஆம் இடத்தில் சஞ்சரிக்கப் போகும் ராகு ஒளிமயமான எதிர்காலத்தை உங்களுக்கு கொடுக்குமா, இல்லைத் தடுக்குமா என்ற சிந்தனை உங்களுக்கு மேலோங்கலாம்.

உங்களுக்கு என்று ஒரு சுயஜாதகம் இருக்கிறது. உங்கள் குடும்ப உறுப்பினர்களுக்கு என்றும் ஜாதகம் இருக்கலாம். அவற்றில் ராகு, கேதுக்கள் எங்கு இருக்கிறார்கள்? எப்படி இருக்கிறார்கள் என்பதை பார்க்க வேண்டும். அதற்கேற்பவே அவர் பலன்களை வழங்குவார்.

அவை திருப்திகரமாக இல்லையென்றால் அவர்கள் நல்ல பலன்களை அள்ளி வழங்க என்ன பரிகாரம் செய்ய வேண்டும்? எந்த தலத்திற்கு செல்ல வேண்டும் என்பதை நீங்கள் அறிந்து கொண்டு செயல்பட வேண்டும்.

ஒன்பதாமிடத்து ராகு உங்களுக்கு ஒப்பற்ற பலன்களை வாரி வழங்கப் போகிறது. முன்பு செய்த காரியங்களில் முற்றுப் பெறாத காரியங்கள் அனைத்தும் இப்பொழுது முற்றுப் பெறும். அன்பு நண்பர்களின் எண்ணிக்கையை அதிகரிக்க வைக்கும். பண்புடையவர்களின் தொடர்பால் பல நல்ல காரியங்களை முடித்துக் காட்டுவீர்கள்.

பக்தி மார்க்கம் அதிகரிக்கும். பகல், இரவாக பாடுபட்டதற்கேற்ற பலன் கிடைக்கவில்லையே என்று நினைத்தவர்கள் முகமலர்ச்சி அடைவர். வியர்வை சிந்தாமலேயே வீடு தேடி காசு வரும். எப்பொழுது நல்ல நேரம் வரும் என்று கேட்ட உங்களுக்கு இப்பொழுது பதில் கிடைக்கப்போகிறது.

ஒன்பதாம் இடத்து ராகுவால் பொன், பொருள் குவியும். மனக்குமுறல் மாறும். மகிழ்ச்சி வெள்ளம் கரைபுரண்டோடும். தந்தை வழியில் இருந்த தகராறுகள் அகலும். வந்த ஒப்பந்தங்களில் எல்லாம் கையெழுத்திட்டு வருமானத்தை பெருக்கிக் கொள்வீர்கள். பங்காளிப் பகை மாற எடுத்த முடிவில் திசை திருப்பம் ஏற்படும். உடன்பிறப்புகளின் கல்யாணத்தை நடத்திப் பார்ப்பீர்கள். பயணங்கள் அதிகரிக்கும். அதிகரித்த பயணத்தால் அபரிமிதமான இலாபங்களும்கிடைக்கும்.

**முன்னேற்றம் தருமா மூன்றாமிடத்து கேது?**

மூன்றாமிடத்து கேதுவால் முன்னேற்றம் கிடைக்குமா? என்று நீங்கள் நினைக்க வேண்டாம். அரவு கிரகங்கள் அற்புதமான பலன்களைத் தர வேண்டுமானால், மறைவிடங்களில் தான் சஞ்சரிக்க வேண்டும் என்று சாஸ்திரம் சொல்கிறது. அந்த அடிப்படையில் கேது பலம் பெறுவதால், கேட்ட இடத்தில் உதவிகள் கிடைக்கும். கீர்த்தி, செல்வமும் கூடும். பார்த்தவர்கள் எல்லோரும் உங்களுக்கு பணி செய்ய காத்திருப்பர்.

கூட்டு முயற்சி வெற்றி பெறும். கொடுக்கல் - வாங்கல்களில் கொஞ்சம் விட்டுக் கொடுத்துச் செல்வது நல்லது. உதாசீனப்படுத்திய உடன் பிறப்புகள் உங்களுக்கு உதவிக்கரம் நீட்ட முன்வருவர். பெற்றோர்கள் உங்களுக்கு தந்த சொத்துக்களை உடன்பிறப்புகளிடமே விற்றுவிட்டு, அவர்கள் தரும் தொகையைப் பெற்றுக் கொள்வீர்கள். அந்தத் தொகையில் அழகிய இல்லம் ஒன்றை வாங்கியோ, கட்டியோ குடியேற வேண்டுமென்ற ஆசையைப் பூர்த்தி செய்து கொள்வீர்கள்.

பிள்ளைகளால் இருந்த தொல்லை அகலும். பெரிய மனிதர்களின் தொடர்பு கிட்டும். நல்லவர் யார்? கெட்டவர் யார்? என்பதை இனம் கண்டு கொள்வீர்கள். நாட்டுப்பற்று மிக்கவர்கள் உங்கள் கூட்டாளியாக வந்திணைவர். உத்தியோக முன்னேற்றம் கூடும்.

வரவு ஒருபுறம் வந்தாலும், குடும்பச் செலவு ஒருபுறம் கூடும். அந்நிய தேசத்தில் இருந்து அனுகூலச் செய்தி வந்து சேரும். ஒரு சிலருக்கு உடனே புறப்பட்டு வருக! என்று தொலைபேசி வழித்தகவல் வந்து சேரும்.

பாகப்பிரிவினைகள் சுமூகமாக முடிவடையும். பரபரப்பு அதிகரிக்கும். தேகத்தைக் கவனிக்கவும், தினமும் சாப்பிடவும் கூட நேரம் கிடைக்காது. தேகத்தில் சுறுசுறுப்பு கூடும் இந்த நேரத்தில் வியாபார விரோதங்கள் விலகும். புதிய இடம் பிடித்து தொழில் தொடங்கும் சூழ்நிலை உருவாகும். மேலும் வளர்ச்சி கான கேது ப்ரீத்தியும், வார வழிபாடாக விநாயகர் வழிபாடும் செய்வது நல்லது.

**பாதசார அடிப்படையில் பலன் தரும் ராகு!**

ராகு விருச்சிக ராசிக்குள் அடியெடுத்து வைக்கும்போது புதன், சனி மற்றும் குருவின் கால்களில் சஞ்சரிக்கும் பொழுது அதற்கேற்பவும் பலன்களை அள்ளி வழங்குவார்.

மேலும் சுயஜாதகத்தில் ராகு மற்றும் கேது 2, 4, 6, 8, 12 ஆகிய இடங்களில் இருந்தால் அதற்குரிய சிறப்பு வழிபாடுகளை மேற்கொள்வது நல்லது. குடும்பத்தில் மகிழ்ச்சி கூடவும், கொடுக்கல் - வாங்கல்களில் திருப்தி ஏற்படவும், கோவில் வழிபாடுகள் கைகொடுக்கும் அல்லவா?

ராகு புதன் சாரத்தில் சஞ்சரிக்கும் பொழுது எதிலும் விழிப்புணர்ச்சியுடன் செயல்படுவது நல்லது. வரவைக் காட்டிலும் செலவு கூடும். வருமானத்தில் பாதி வீண் விரயமாகிறதே என்று கவலைப்படுவீர்கள். சுபச்செலவுகளை மேற்கொள்ள முன்வருவதன் மூலம் வீண் விரயங்களில் இருந்து விடுபடலாம். இடம், பூமி வாங்கும் எண்ணம் நிறைவேறும்.

குரு சாரத்தில் ராகு சஞ்சரிக்கும் பொழுது தொழில் வளர்ச்சி மேலோங்கும். பழைய தொழிலை பிறரிடம் ஒப்படைத்து விட்டு புதிய தொழிலை தொடங்கும் முயற்சியில் ஆர்வம் காட்டுவீர்கள். பொதுநல ஈடுபாடு அதிகரிக்கும். புகழ்மிக்கவர்கள் உங்களுக்குப் பின்னணியாக இருந்து பொருளாதார நிலை உயர வழிவகுத்துக் கொடுப்பார்கள்.

பெற்றோர் மற்றும் உறவினர்களின் பாசமழையில் நனைவீர்கள். இக்காலம் இனிய காலமாக குரு வழிபாட்டினை மேற்கொள்வது நல்லது.

சனி சாரத்தில் ராகு சஞ்சரிக்கும் போது அனுமன் வழிபாட்டையும் மேற்கொண்டால் அன்றாட வாழ்க்கை நன்றாக அமையும்.

**பாதசார மாற்றத்தால் பலன் தரும் கேது!**

செவ்வாய் காலில் கேது சஞ்சரிக்கும்பொழுது, நற்பலன்களைப் பெறக் கூடிய வாய்ப்பு உங்களுக்கு வந்து சேரும். குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் ஏராளமாக நடைபெறும். பணவரவு திருப்தி தரும். நினைத்ததை நினைத்த நேரத்தில் செய்து முடிப்பீர்கள். கல்யாணம், காதுகுத்து, மணிவிழா, முத்து விழா, பவள விழா என்று விழாக்கள் கொண்டாடுவதோடு பெண் குழந்தைகளின் சுபச் சடங்கு நிகழ்ச்சிகளும் எதிர்பார்த்தபடியே அமையும்.

சந்திரன் காலில் கேது சஞ்சரிக்கும் பொழுது, பூர்வீக சொத்துக்களால் இலாபம் கிட்டும். புதிய சொத்துக்கள் வாங்குபவர் போதிய மூலதனமில்லையே என்று கவலைப்பட்டவர்களுக்கு இப்போது வாழ்க்கைத் துணை வழியிலோ, வந்திணைந்த நண்பர்கள் வழியிலோ வரவு ஏற்படும். ஆனால், மனப்பயம் அதிகரிக்கும். பிள்ளைகளை கண்காணித்து அவர்கள் தேவைகளை முறையாகப் பூர்த்தி செய்வதன் மூலமே மனநிம்மதியை வரவழைத்துக் கொள்ள இயலும். சூரியன் சாரத்தில் கேது சஞ்சரிக்கும் பொழுது, எதிர்ப்புகள் மேலோங்கும். எதையும் ஒருமுறைக்குப் பலமுறை யோசித்து செய்வது

**சிவல்புரி சிங்காரம்**

நல்லது. கடன் வாங்கும் சூழ்நிலை கூட ஒருசிலருக்கு ஏற்படலாம். உத்தியோக மாற்றம் உறுதியாவது போல் தோன்றும். சிலர் வி.ஆர்.எஸ். விண்ணப்பித்து விட்டு வீட்டில் இருந்தபடியே தொழில் செய்யலாம் என்று நினைப்பர். எதைச் செய்தாலும் இறைவழிபாட்டில் சிறிது நேரமாவது கவனம் செலுத்தி விட்டுச் செய்தால் வெற்றி வாய்ப்புகிட்டும்.

மூன்றாமிடத்துக் கேதுவால் முன்னேற்றம் ஏற்படவும், ஒன்பதாம் இடத்து ராகுவால் ஒப்பற்ற வாழ்க்கை அமையவும் வியாழன் தோறும் குருவழிபாட்டை மேற்கொள்வதோடு, சுயஜாதகத்தில் ராகு கேதுக்களின் பாதசார பல மறிந்து பரிகாரங்களை மேற்கொள்ளுங்கள். *(தொடரும்)*

# இலங்கை தொடர்பில் இந்தியாவின் நிலைப்பாட்டை தளர்த்தவே அமைச்சர் பீரிஸ் சீனா பயணம்

## அரசியல் நோக்கர்கள் கருத்து



ஐக்கிய நாடுகள்சபை நிபுணர் குழுவின் அறிக்கைதொடர்பாக இந்தியா தொடர்ந்தும் இலங்கை எதிர்பார்க்கின்ற நிலைப்பாட்டுக்கு ஒத்துவராமல் இருப்பது இலங்கைக்கு மனக்கசப்பை உண்டுபண்ணியுள்ளது என்று அரசியல் நோக்கர்கள் கருத்து தெரிவித்துள்ளனர்.

அதேவேளையில் இந்திய அரசாங்கம் ஐ.நா வுக்கு நிபுணர் குழு அறிக்கையால் சர்வதேசரீதியில் இலங்கைக்கு ஏற்படுத்தப்பட்டுள்ள அழுத்தங்கள், நெருக்குவாரங்களை வைத்துக்கொண்டு இலங்கை அரசாங்கத்தை பழிவாங்குவதாக இலங்கைத் தரப்பு மிக ஆழமாக உணர்வதாகவும் அரசியல் நோக்கர்கள் தெரிவிக்கின்றனர்.

இதன் விளைவாகவே இலங்கை வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல். பீரிஸ் சீனாவிற்கு பயணத்தை மேற்கொள்வதாகவும் அரசியல் நோக்கர்கள் கூறுகின்றனர்.

அமைச்சர் பீரிஸ் மேற்கொண்ட இந்தியப் பயணம் எதிர்பார்த்த வெற்றியை அளிக்கவில்லை என்ற பிரதிபலிப்பே அவரது சீன விஜயம் என்று கூறப்படுகின்றது.

அதாவது இந்தியாவின் நிலைப்பாட்டைத் தளர்த்துவதை நோக்கமாகக் கொண்டே பீரிஸின் சீனாவுக்கான பயணம் திட்டமிடப்பட்டதாகவும் அப்படியில்லையெனில் சீனாவுக்கான பயணம் இந்தியப் பயணத்திற்கு முன்பாகவே இடம்பெற்றிருக்கும் என்று கருதுகோளை முன்வைக்கும் அரசியல் நோக்கர்கள் ஐ.நா. நிபுணர் குழுவின் அறிக்கை தொடர்பாக சீனா ஆரம்பத்திலேயே தனது நிலைப்பாட்டைத்தெளிவுபடுத்தியிருந்தமையும் சுட்டிக்காட்டப்படுகின்றது. ஐ.நா நிபுணர் குழுவின் அறிக்கை வெளிவந்த கையோடு சீனா விடுத்த அறிக்கையில் இலங்கை அரசும் மக்களும் தமது உள் நாட்டு போர் சம்பந்தமான சர்ச்சைகளை முறையாகத் தீர்த்துக் கொள்வார்கள். சர்வதேச சமூகம் இவ்விவகாரத்தை சிக்கலாக்க கூடாது எனத் தெரிவித்திருக்கிறது.

பின்னர் சர்வதேச நிறுவனங்கள் மற்றும் அவற்றின் அலுவலர்கள் மீது இலங்கை அரசு மேற்கொண்டு வரும் நடவடிக்கைகள் குறித்து தனது கவலைகளை தெரிவித்துக் கொண்டதுடன் இவ்வாறான நடவடிக்கைகள் தொடருமானால் இலங்கை அரசுக்கு தாம் வழங்கிவரும் ஆதரவை மறுபரிசீலனை செய்ய வேண்டி வருமென சீனா தெரிவித்திருந்தமையையும் இவர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

இது தொடர்பாக டெக்கான் ஹெரால்ட் பத்திரிகையில் இந்திய இலங்கை உறவுகள் தலைப்பில் முன்னாள் இராஜதந்திரியான எம்.கே. பத்திரகுமார் எழுதியுள்ள கட்டுரையில் இலங்கையானது வெகுமதி அளிக்கப்பட்ட நாடாக உள்ளது. சர்வதேச இராஜதந்திரத்தின் எல்லைகளற்ற மர்மங்களை அசாதாரணமான முறையில் இலங்கை பற்றிப் பிடித்திருக்கின்றது.

மென்மையாகப் பேசுபவரும் புத்திஜீவியுமான இலங்கையின் வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல். பீரிஸை துரும்புச் சீட்டாக கொழும்பு வைத்திருக்கின்றது.

அ.தி.மு.க. தலைவர் செல்வி ஜெயலலிதா போர்க்குற்றங்களுக்கான ஜனாதிபதி ராஜபக்ஷவை விசாரணைக்குட்படுத்த வலியுறுத்தியிருந்த போதிலும் ஜெயலலிதாவுக்கு அவரின் தேர்தல் வெற்றியைப் பாராட்டியும் அவருடன் இணைந்து செயற்படுவதற்கான ஆவலை வெளிப்படுத்தியும் கண்ணியமான முறையில் பீரிஸ் கடிதம் எழுதியுள்ளார்.

பீரிஸ் தனது நீண்ட பயணத்தை டில்லியில் ஆரம்பித்து பீஜிங்கிற்கு முன் வைத்திருப்பது குறிப்பிடத்தக்கதாகும் என்று குறிப்பிட்டுள்ளதையும் அரசியல் நோக்கர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

(ஸ்ரீ-2)

# பல்கலைக்கழக கல்வி நடவடிக்கைகள் ஸ்தம்பிதம் அடையக்கூடிய அபாயம்

## விரிவுரையாளர்கள் ஒன்றியம் எச்சரிக்கை

(கொழும்பு)

நாட்டின் பல்கலைக்கழக கல்வி நடவடிக்கைகள் ஸ்தம்பிதமடையக் கூடிய அபாயம் ஏற்பட்டுள்ளதாக விரிவுரையாளர் ஒன்றியம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

சம்பள உயர்வு வழங்கப்படாத காரணத்தினால் பல விரிவுரையாளர்கள் வெளிநாடுகளில் தொழில் வ' ய்ப்புப் பெற்றுச் செல்ல முனைப்பு காட்டி வருவதாக ஒன்றியம் சுட்டிக்காட்டியுள்ளது.

ஒரு சில விரிவுரையாளர்கள் ஏற்கனவே வெளிநாடுகளுக்கு சென்று விட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. - பல்கலைக்கழக விரிவுரையாளர்களின் கோரிக்கைகளுக்கு அரசாங்கம் தீர்வு வழங்க தவறியுள்ளதாகவும், இதனால் முழுப் பல்கலைக்கழகக் கட்டமைப்புமே பாதிப்படையக் கூடும் என எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

பல்கலைக்கழகங்களில் விரிவுரையாளர்கள், இணைப்பாளர்கள், பணிப்பாளர்கள் என பல்வேறு பதவிகளை வகித்து வந்த பலர் தமது பதவிகளை ஏற்கனவே இராஜினமா செய்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

(ஸ்ரீ-2)

# புதுக்குடியிருப்பு கோட்டமட்ட ஆங்கிலதின போட்டி முடிவுகள்

(முல்லைத்தீவு)

புதுக்குடியிருப்பு கோட்டத்தின் ஆங்கில தினப்போட்டி முடிவுகள் கோட்டக்கல்விப் பணிப்பாளரினால் அறிவிக்கப்பட்டுள்ளது.

இதில் முதல் மூன்று இடங்களைப் பெற்றோர் விபரம் வருமாறு.

*பார்த்தெழுதுதல்*

தரம்-3

ஜே.விதுசன்(மு/ விசுவமடு ம.வி), ஆர் வேந்தினி (மு/பாரதி வித்தியாலயம்), எஸ்.ஜெயரூபன்(மு/தேராவில் தமிழ் வித்தியாலயம்)

தரம்-4

ஆர் .மிதுசன் (மு/பாரதி வித்தியாலயம்), ரி.நிதுசா (மு/ விசுவமடு ம.வி), எஸ். கயல்விழி (மு/தேராவில் தமிழ் வித்தியாலயம்)

தரம்-5

ரி.தனுசா (மு/பாரதி வித்தியாலயம்), கே.விதுசியா (மு/ விசுவமடு ம.வி), கே. குட்டியரசி (மு/தேராவில் தமிழ் வித்தியாலயம்)

தரம்-6

கே.வைஸ்ணவி (மு/ விசுவமடு ம.வி), எம்.டிலக்சனா (மு/பாரதி வித்தியாலயம்), பி.டனுயன் (மு/தேராவில் தமிழ் வித்தியாலயம்)

தரம்-7

ஜே.டேனுகா (மு/பாரதி வித்தியாலயம்), ரி.தமிழினி(மு/பாரதி வித்தியாலயம்), ஜி.மதுசன் (மு/ விசுவமடு ம.வி)

*தரம்-8*

எஸ.பிரவீனா (மு/பாரதி வித்தியாலயம்), ரி.யமித்தா (மு/ விசுவமடு ம.வி), எஸ்.மிதுசியா (மு/பாரதி வித்தியாலயம்)

தரம்-9

எஸ.சர்மிளா (மு/பாரதி வித்தியாலயம்), என். யசோதினி (மு/பாரதி வித்தியாலயம்), எஸ்.சுதாயினி(மு/தேராவில் தமிழ்வித்தியாலயம்)

தரம்-10

கே.சஞ்யீவிதா (மு/பாரதி வித்தியாலயம்), ஜே.தர்சிகா (மு/பாரதி வித்தியாலயம்), ஏ.வினோதினி (மு/பாரதி வித்தியாலயம்),

தரம்-11

எஸ்.ரம்மியா (மு/பாரதி வித்தியாலயம்), பி.மேகலா (மு/பாரதி வித்தியாலயம்), எஸ். ஸ்ரெலினா (மு/ விசுவமடு ம.வி),

தரம்-12

எஸ்.சத்தியா ' (மு/பாரதி வித்தியாலயம்), எஸ்.யசோதா (மு/ விசுவமடு ம.வி), ஆர். மோனகனவதனி (மு/ விசுவமடு ம.வி),

தரம்-13

ஏ. சாந்தி (மு/பாரதி வித்தியாலயம்), ஜே.தர்சினி (மு/பாரதி வித்தியாலயம்),

*வாசிப்பு*

தரம்-3

ஆர்.விதுசியா (மு/ விசுவமடு ம.வி), ஜே.விதுசன் (மு/ விசுவமடு ம.வி),

தரம்-4

ஆர்.சுரபி (மு/விசுவமடு ம.வி), இ.கஜனி (மு/ விசுவமடு ம.வி),

தரம்-5

பி.கேனுசா (மு/பாரதி வித்தியாலயம்), கே.டிலக்சி (மு/பாரதி வித்தியாலயம்),

*கவிதை கூறல்*

தரம்-3

எஸ்.சந்தினி(மு/நெத்தலியாறு அ.த.க.பா), கே.ஜெனனி (மு/நெத்தலியாறு அ.த. க.பா), ஜெ.கிறிஸ்ஷீனா, தர்சிகா (மு/பாரதி வித்தியாலயம்),

தரம்-4

பி.றொசானி (மு/நெத்தலியாறு அ.த. க.பா) , ஆர். சுரபி (மு/விசுவமடு ம.வி), என்.தேனுஜா (மு/நெத்தலியாறு அ.த. க.பா),

(தரம்-5

எஸ்.கலைநிலா (மு/நெத்தலியாறு அ.த. க.பா), எஸ்.சங்கீந்தி (மு/பாரதி வித்தியாலயம்), டி.அனுசிகா (மு/நெத்தலியாறு அ.த. க.பா),

தரம்-6

ரி.லக்ஷன் (மு/ விசுவமடு ம.வி), வி.மதுரப்பிரியா (மு/ விசுவமடு ம.வி), எஸ்.றொசானி (மு/பாரதி வித்தியாலயம்),

தரம்-7

வி.வினித்தா (மு/பாரதி வித்தியாலயம்), எம்.தமிழ்வேணி (மு/பாரதி வித்தியாலயம்), ஜே.தேனுகா (மு/பாரதி வித்தியாலயம்), ரி.துவாரகா (மு/தேராவில் தமிழ் வித்தியாலயம்)

தரம்-8

இ.டனுசோபன் (மு/ விசுவமடு ம.வி), பி.தனுஜா (மு/ விசுவமடு ம.வி), ரி.கிரிஸ்ரீனா (மு/பாரதி வித்தியாலயம்),

தரம்-9

ஆர். கீர்த்தனா (மு/பாரதி வித்தியாலயம்), எஸ். சாம்பவி (மு/ விசுவமடு ம.வி), ஜே. லலிசா (மு/ விசுவமடு ம.வி),

தரம்-10

ஏ.பிலோமினி (மு/ விசுவமடு ம.வி), பி.கோமதி (மு/ விசுவமடு ம.வி), கே.சஞ்யீவிதா (மு/பாரதி வித்தியாலயம்),

தரம்-11

எஸ்தேவநிசாந்தினி (மு/ விசுவமடு ம.வி), எஸ். லிந்துயா(மு/ விசுவமடு ம.வி), ரி.முகுந்தினி (மு/பாரதி வித்தியாலயம்),

*எழுத்துருவாக்கம்*

தரம்-7

என். இமையாவலா (மு/பாரதி வித்தியாலயம்), வை. றஜிதா (மு/ விசுவமடு ம.வி),

தரம்-8

கே. கஜநிதா (மு/ விசுவமடு ம.வி), ரி.ஜமிதா (மு/விசுவமடு ம.வி), எஸ். மிதுசியா (மு/பாரதி வித்தியாலயம்),

தரம்-9

ஜெ.லலிசா (மு/ விசுவமடு ம.வி), கே.சங்கீர்த்தியா(மு/ விசுவமடு ம.வி),

தரம்-10

ஏ.பிலோமினி (மு/ விசுவமடு ம.வி), கே. புவனேஸ்வரி (மு/ விசுவமடு ம.வி), ஜே. தர்சிகா (மு/பாரதி வித்தியாலயம்),

தரம்-11

கே. சாரங்கா (மு/ விசுவமடு ம.வி), பி. நிதர்சனா (மு/பாரதி வித்தியாலயம்), ரி.மதுசா (மு/ விசுவமடு ம.வி),

சொல்வதெழுதுதல்

தரம்-6

எஸ். கியாந்தன் (மு/பாரதி வித்தியாலயம்), ரி.லக்ஸன் (மு/ விசுவமடு ம.வி), ஆர். தனுசியா (மு/பாரதி வித்தியாலயம்),

தரம் -7

என் .இமையாவல் (மு/பாரதி வித்தியாலயம்), ஜி.மதுசா (மு/ விசுவமடு ம.வி), எம். தமிழ்வாணி (மு/பாரதி வித்தியாலயம்),

தரம் -8

பி. தனுஜா (மு/ விசுவமடு ம.வி), இ.தனுசோபன் (மு/ விசுவமடு ம.வி), ரி.கிரிஸ்ரீனா (மு/பாரதி வித்தியாலயம்),

தரம்-9

கே. சங்கீர்த்தியா (மு/ விசுவமடு ம.வி), எஸ். சம்பவி (மு/ விசுவமடு ம.வி), ஜே. வினித்தா (மு/பாரதி வித்தியாலயம்),

தரம்-10

கே. கயந்தினி (மு/ விசுவமடு ம.வி), பி.சுதர்சிகா (மு/பாரதி வித்தியாலயம்), பி. கவின்சா (மு/பாரதி வித்தியாலயம்),

தரம்-11

பி. நிதர்சனா (மு/பாரதி வித்தியாலயம்), எஸ். லிந்தியா (மு/ விசுவமடு ம.வி), கே. சாரங்கா (மு/ விசுவமடு ம.வி), (ஸ்ரீ)


(தொடரும்.....)

# இலங்கையை உலுப்பிவரும் ஐ.நா. நிபுணர் குழுவின் அறிக்கை

இன்னுமொரு கூட்டத்துடன் கேணல் ரமேஸ் பின்னால் வந்தார். சிறிது நேரத்திற்குப்பின்னர், நடேசனும் புலித்தேவனும் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார்கள் என பி.பி.சி.யும் ஏனைய தொலைக்காட்சி நிலையங்களும் அறிவித்தன. இச்சம்பவம் பற்றி பின்னர் அரசாங்கம் பல்வேறுபட்ட விளக்கங்களை வழங்கியது. அவர்கள் கொல்லப்பட்ட சூழ்நிலைகள் பற்றிய தகவல்கள் அரிதாக உள்ள நிலையில், எல்.ரி.ரி.ஈ. தலைமைத்துவம் சரணடைய நாடியிருந்தது என குழு நம்புகின்றது.

**ஏ. நிகழ்வுகள் பற்றிய அரசாங்கத்தின் கூற்று**

172. யுத்தத்தின் இறுதிக்கட்டங்கள் பற்றிய இலங்கை அரசாங்கத்தின் கூற்றுக்கு மிகவும் மாற்றமானதொரு கண்ணோட்டத்தை மேற்படி நம்பகமான குற்றச்சாட்டுக்கள் வழங்குகின்றன. "பூச்சியப் பொதுமக்கள் பாதிப்பைக்" கொண்டதொரு "மனிதாபிமான மீட்புநடவடிக்கையை" அது மேற்கொண்டதாக அரசாங்கம் கூறுகிறது. 2010 மே 7ஆம் திகதி, உரையொன்றின் போது பாதுகாப்புச் செயலாளர், யுத்தத்தின் இராணுவ நடவடிக்கைக் கட்டளைகளுள் "பூஜ்யப்பாதிப்புக் கோட்பாடு உள்ளடக்கப்பட்டது. உலகில் இதுவே முதற்தடவையாகும்" எனக்குறிப்பிட்டார். 2010ஜூன் 18ஆம்திகதி ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ ஆற்றிய உரையொன்றில், "சாதாரண பொதுமக்களுக்கு எதிராக ஒரு வேட்டேனும் தீர்க்கப்படுவதற்கு நாம் இடமளிக்கவில்லை". எனத்



தெரிவித்தார். 2010 மே 18ஆம் திகதியன்று யுத்தமுடிவின் முதலாவது ஆண்டு நிறைவன்று, பின்வருமாறு பாதுகாப்புச் செயலாளர் நினைவூட்டினார்; "நாம் யுத்தசூன்ய வலயங்களை பிரகடனப்படுத்தினோம். பொதுமக்கள் வாழும் யுத்த வலயங்களை எதிர்கொண்டபோது வான், பீரங்கி மற்றும் மோட்டார் தாக்குதல்களை மேற்கொள்வதிலிருந்தும் நாமாகவே தவிர்த்துக் கொண்டோம். இது பற்றி எமது களகட்டளைத்தளபதிகள் மிகவும் கவனமாக இருந்ததோடு அவர்கள் தம்மை அனேகமான சந்தர்பங்களில் கட்டுப்படுத்திக் கொண்டார்கள். மேலும் யுத்தத்தின் எல்லாக் கட்டங்களிலும் உலக உணவுத்திட்டம், செஞ்சிலுவைச்சங்கம் மற்றும் ஐ.நா ஊடாக சிக்குண்ட பொதுமக்களுக்கான உணவு மற்றும் மருந்து வகைகள் சென்றடைவதை உறுதிப்படுத்திக் கொண்டோம்".

(60) 173. 2009 மார்ச் 2ஆம் திகதி, அனர்த்த முகாமைத்துவ மற்றும் மனித வளங்கள் அமைச்சர் மஹிந்த சமரசிங்க பி.பி.சி.யின் ஹார்ட்டோக் நிகழ்ச்சியில் "கனரக ஆயுதங்களைப் பாவிப்பதற்கான எந்தவொரு நியாயமும் இல்லை.. மற்றும் உண்மையிலேயே சுமார் 10 நாட்களுக்கு முன்னர் கனரகஆயுதங்களைப் பாவிப்பதில்லை என ஆயதப்படைகள் தெளிவான தீர்மானமொன்றை எடுத்தனர். நீங்கள் அறிந்திருப்பீர்கள், எல்.ரி.ரி.ஈ. சுமார் 48கிலோமீற்றர் சிறிய பரப்பொன்றிற்குள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளதால் கனரக ஆயுதங்களை நாம் பாவிக்க முடியாது". எனக்குறிப்பிட்டார். ஆயினும் யுத்தம் முடியும்வரை 81மிமீ வரையிலான மோட்டார்கள் பிரயோகிக்கப்பட்டதாகக் கூறிய ஏனைய அரசாங்க அதிகாரிகள், அவை கனரக ஆயுதங்கள் அல்ல என வாதிட்டனர்.

174. 2009 ஏப்பிரல் 06 ஆம் திகதி "பணயக் கைதிகளைக் காப்பாற்றும், உலகின் மிகப்பெரிய நடவடிக்கையில் இலங்கை இராணுவம் ஈபட்டிருந்தது" என லெப்டினன்ட் ஜெனரல் சரத் பொன்சேகா இலங்கையின் ஒவ்சேவர் பத்திரிகைக்குத் தெரிவித்தார். 2009 மே 18 ஆம் திகதி "இரத்தக்களறி" ஒன்று ஏற்படும் என்ற எச்சரிக்கைகள் பிழையென நிரூபிக்கப்பட்டுள்ளதாக மனித உரிமைகள் அமைச்சர் சமரசிங்க தெரிவித்தார்.

யுத்த வலயத்திலிருந்து வரும் இடம் பெயர்ந்தோர், "நலன்புரி நிலையங்களில்" வரவேற்கப்பட்டார்கள் எனவும் முன்னாள் எல்.ரி.ரி.ஈ. இனர் மீட்பு செயற்பாட்டிற்கு உட்படுத்தப்பட்டு அவர்கள் "புனர்வாழ்வு" பற்றிக் கவனம் செலுத்தப்படுவதாகவும் அரசாங்கம் அறிவித்தது.

175. கிடைக்கக்கூடிய சகல தகவல்களையும் கடுமையாக மீளாய்வு செய்து மதிப்பீடு செய்தபின்னர், நிகழ்வுகள் பற்றிய இலங்கை அரசாங்கத்தின் கூற்றைக் குழு ஏற்றுக்கொள்ள முடியாதுள்ளது

ஐ) முடிவுகள்.

176. எனவே யுத்தத்தின் இறுதிக் கட்டங்களுடன் தொடர்புபட்ட குற்றச்சாட்டுக்கள் பற்றிய குழுவின் விளக்கம் இலங்கை அரசாங்கம் புரிந்துள்ள ஐந்து அடிப்படை பகுதிகளைச் சேர்ந்த பாரிய நிலைத்தகவுள்ள மீறல்களை வெளிப்படுத்துகின்றது:

அ) பரவலான செல் வீச்சினால் பொதுமக்கள் இறப்பு

இலங்கை இராணுவம் வன்னியில் அதன் இராணுவநடவடிக்கையை, அதிகளவில் பொதுமக்களுக்குச் சேதம் ஏற்படும் விதத்தில், சில சமயங்களில் பல்குழல், ரொக்கட் ஏவும் கருவிகளை மற்றும் பீரங்கிகளைக் கொண்டு பாரிய மற்றும் பரவலான செல்தாக்குதலைப் பிரயோகித்து முன்னெடுத்தது. பொதுமக்கள் ஒன்று திரள்வதற்காக அவர்களை ஊக்குவித்து மற்றும் கனரக ஆயுதங்கள் பாவிக்கப்படமாட்டாது என அது அறிவித்தபின் மூன்று தொடர்ச்சியான யுத்த சூன்ய வலயங்கள்மீது ஷெல்தாக்குதலை அது மேற்கொண்டது. ஆளில்லா விமானங்களை உள்ளிட்ட இராணுவத்தினர் உளவு அமைப்புக்கள் மற்றும் ஐ.நா. அத்துடன் ஐ.சி.ஆர்.சி. போன்ற புற பாத்திரங்களின் அறிவிப்புக்கள் மூலம் ஏற்படக்கூடிய தாக்கம் பற்றி அறிந்திருந்த போதிலும், ஷெல்தாக்குதலை அது மேற்கொண்டது.

பொதுமக்களிடையான அதிக உயிர்ச்சேதம், காயம் என்பன அரசாங்கத்தின் ஷெல்வீச்சு காரணமாகவே யுத்தத்தின் இறுதிக்கட்டங்களில் நேர்ந்தன. யுத்தவலயத்தில் இருந்து சர்வதேச அமைப்புக்களை ஒதுக்கிவைப்பதன் மூலம் புற அழுத்தங்களையும் மற்றும் அவதானிப்பினையும் கட்டுப்படுத்த அரசாங்கம் முனைந்தது.

**(61) (ஆ) ஆஸ்பத்திரிகள் மற்றும் ஏனைய மனிதாபிமான நிலைகள் மீதான செல்தாக்குதல்**

போர் முனைகளில் அரசாங்கம் திட்டமிட்ட விதத்தில் ஆஸ்பத்திரிகள், சிலவற்றை மீண்டும்மீண்டும் செல்லடித்துத் தாக்கியது. ஆஸ்பத்திரிக்கு வந்திருந்த காயமடைந்த சில பொதுமக்கள் செல்வீச்சுக்காரணமாக மீண்டும் காயமடைந்தனர் அல்லது கொல்லப்பட்டனர்.

வன்னியில் இருந்த அனைத்து ஆஸ்பத்திரிகளும் ஷெல் தாக்குதலுக்குள்ளாகியதோடு அவற்றிலிருந்து அகலவேண்டியிருந்தது. அவற்றின் அமைவிடங்களை அரசாங்கம் நன் கறிந்த நிலையிலும் இவ்வாறு நேர்ந்தது.


**இ) மனிதாபிமான உதவியை மறுத்தல்**

உணவு மற்றும் அடிப்படை மருந்து வகைகள், குறிப்பாக காயங்களுக்கான மருந்துவகைகள் போன்ற மனிதாபிமான உதவியை யுத்த வலயத்தில் இருந்தவர்களுக்கு கிடைக்கச் செய்வதை அரசாங்கம் திட்டமிட்டவாறு தடுத்தது. இதற்காக, யுத்தவலயத்தில் எஞ்சியிருந்த பொதுமக்களின் எண்ணிக்கையை வேண்டுமென்றே குறைத்து மதிப்பீடு செய்தது.

குறிப்பாக சத்திரசிகிச்சைக்கான பொருட்களை வழங்காமை, பொதுமக்களின் கஸ்டங்களை அதிகரித்ததோடு, மரணிப்பவர்களின் எண்ணிக்கையையும் அது அதிகரித்தது.

**ஈ) பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் யுத்தத்தில் உயிர் தப்பிய வர்களின் மனித உரிமைகள் மீறல்**

அதன் செயற்பாடுகளை "மனிதாபிமான மீட்பு நடவடிக்கை" எனக் குறிப்பிட்டபோதிலும், பாதிக்கப்பட்டோரும் யுத்தத்தில் உயிர் பிழைத்தவர்களும் யுத்தவலயத்தை விட்டகன்றபின், அரசாங்கம் மேலும் அவர்களைக் கஷ்டத்துக்குள்ளாக்கியது.



பாரியநெரிசல் மோசமான நிலைமைகளைத் தோற்றுவித்ததோடு, அது தடுத்துவைக்கப்பட்டவர்களின் அடிப்படை, மற்றும் பொருளாதார உரிமைகளில் பிளவினை ஏற்படுத்தி தேவையின்றி உயிர்கள் பலியாவதற்கு வழிகோலியது. சகல இடம்பெயர்ந்தவர்களும் புறத்தொடர்பற்ற முகாம்களில் தடுத்து வைக்கப்பட்டதோடு, மனிதாபிமான அமைப்புக்களுடன் தனியாகக் கதைப்பதற்கு அவர்கள் அனுமதிக்கப்படவில்லை. முகாம்களில் மற்றும் தடுப்புக் காவலில் பெண்கள் மேலும் இம்சைக்குட்படுத்தப்பட்டார்கள்.

எல்.ரி.ரி.ஈ. இனைப் பிரித்தெடுப்பது எவ்வித வெளிப்படையோ, புறக்கணிப்போ இன்றி நடைபெற்றது. சந்தேகிக்கப்பட்ட சில எல்.ரி.ரி.ஈ. உறுப்பினர்கள் கொலை செய்யப்பட்டதோடு ஏனையோர் மாயமானார்கள்.

நிர்வாணமான பெண் உறுப்பினர் புகைப்படங்கள் மற்றும் படச்சுருள்கள் அவர்கள் கற்பழிக்கப்பட்டதை அல்லது பாலியல்ரீதியில் தாக்கப்பட்டதைக் குறிப்பதாகவுள்ளன.

விசாரணையின்போதான சித்திரவதை தொடர்ந்தது. எல்.ரி.ரி.ஈ. சந்தேகநபர்கள் வெவ்வேறு முகாம்களுக்கு கொண்டு செல்லப்பட்டு அங்கு அவர்கள், ஐ.சி.ஆர்.சி. மற்றும் இலங்கை மனிதஉரிமை ஆணைக்குழு மற்றும் ஏனைய

**தமிழாக்கம் தொடர் 22**

முகவர்களின் கண்காணிப்பின்றி, வருடக்கணக்காகத் தடுத்து வைக்கப்பட்டார்கள்.

உ) வெள்ளை வான்களில் உள்ளிட்ட கடத்தல்கள் மற்றும் ஆட்கல் காணாமல் போதல் பல் வகையான அச்சுறுத்தல்கள் மூலம் ஊடகங்களையும் ஏனைய விமர்சனங்களையும் பயமுறும்த்தி மௌனம் சாதிக்க வைக்க அரசாங்கம் முயன்றது.

(தொடரும்)

# தேசிய அமைப்பாளர் நியமனத்திற்கு எதிரான வழக்கு விசாரணை இன்று

(கொழும்பு)

ஐக்கிய தேசிய கட்சியின் தேசிய அமைப்பாளர் நியமிக்கப்பட்டமை சட்டவிரோதமானது என தெரிவித்து நுகேகொட -கங்கொடுவில மாவட்ட நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்ட மனு இன்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ளது.

தென்மாகாண சபை உறுப்பினர் குணரத்தினவினால் தாக்கல் செய்யப்பட்டுள்ள இந்த மனுவில் எதிர்க்கட்சி தலைவர் ரணில் விக்ரமசிங்க உள்ளிட்ட ஐக்கிய தேசிய கட்சியின் மத்திய செயற்குழு உறுப்பினர்கள் பிரதிவாதியாக குறிப்பிடப்பட்டுள்ளனர்.

எவ்வாறாயினும் இன்று இடம் பெறும் இந்த வழக்கு விசாரணைக்கு எதிர்க் கட்சி தலைவர் ரணில் விக்கிரமசிங்க, தவிசாளர் காமினி ஜயவிக்கிரம பெரேரா, பொது செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க ஆகிய நாடாளுமன்ற உறுப்பினர்களும் திறைசேரியாளர் சேனத் கப்பு கொட்டுவ ஆகியோர் சமுகமளிக்கமாட்டார்கள் என தெரிவிக்கப்படுகிறது.

எனினும் கட்சியின் தலைவர் மற்றும் ஏனைய உறுப்பினர்கள் சார்பில் வழக்கறிஞர்கள் குழு மன்றில் முன்னிலையாகும் என எதிர்க்கட்சி அலுவலகத்தின் சிரேஷ்ட பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

எவ்வாறாயினும் மத்திய செய ற்குழுவில் அங்கம் வகிக்கும் நாடாளுமன்ற உறுப் பினர்களாக பதவி வகிக்கும் வழக்கறிஞர்கள் இந்த வழக்கு விசாரணையில் பங்கு கொள்வார்கள் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ஸ்ரீ-2)

# யாழ்ப்பாணத்திலிருந்து சென்ற லொறியும் கன்ரர் ரக வாகனமும் மோதி விபத்து

## மூவர் பலி

(கொழும்பு)

புத்தளம் முந்தல் ஆனைவிழுந்தான் பகுதியில் நேற்று அதிகாலை இடம்பெற்ற வாகன விபத்தில் மூவர் பலியாகியுள்ளதுடன் மூவர் காயமடைந்துள்ளனர்.

இந்த விபத்தில் படுகாயமடைந்தவர்கள் முந்தல் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். விபத்தில் பலியானவர்களில் வாகன சாரதிகள் இருவர் அடங்குகின்றனர்.

யாழ்ப்பாணத்திலிருந்து மீன்களை ஏற்றிக்கொண்டு கொழும்பு நோக்கி வந்து கொண்டிருந்த குளிரூட்டப்பட்ட லொறியொன்றும் கன்டர் ரக வாகனமொன்றும் நேருக்கு நேர் மோதியே இந்த விபத்து இடம் பெற்றுள்ளது.

முந்தல் ஆனைவிழுந்தான் பகுதியிலுள்ள 61 ஆவது சந்தியில் நேற்று ஞாயிற்றுக்கிழமை அதிகாலை 5.45 மணியளவில் இந்த விபத்து இடம் பெற்றுள்ளது.

லொறியும் கன்ரர் ரக வாகனமும் முந்தல் பொலிஸ் நிலையத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டுள்ளது. இந்த விபத்து சம்பவம் தொடர்பில் முந்தல் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

(ஸ்ரீ-2)

# இலங்கையில் மீண்டும் சிவில்யுத்தம் ஏற்படுவதற்கு வாய்ப்பில்லை

## அமைச்சர் பீரிஸ் தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கையில் மீண்டும் சிவில் யுத்தம் ஏற்படுவதற்கு வாய்ப்பில்லை என வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.

வெளிநாடுகளில் வாழும் சில புலம் பெயர் தமிழர்கள் போராட்டங்களை முன்னெடுக்க முனைப்பு காட்டக்கூடும் என்ற போதிலும் இலங்கையில் மீளவும் யுத்தம் இடம்பெற வாய்ப்பில்லை என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

தமிழ், சிங்கள மற்றும் முஸ்லிம் மக்களுக்கு இடையில் முரண்பாடு காணப்படுவதாக வெளியாகும் தகவல்களில் உண்மையில்லை என அவர் குறிப் பிட்டுள்ளார்.

வடக்கு கிழக்கு, புனர்நிர்மாணப் பணிகளுக்காக பெருமளவில் பணம் ஒதுக்கீடு. செய்யப்படுவதாக குறிப்பிட்டுள்ளார். (ஸ்ரீ-2)

# பயங்கரவாத ஒழிப்பு குறித்த மாநாட்டில் பிரதான விரிவுரையாளராக கோத்தபாய

பயங்கரவாதம் இல்லாதொழிப்பு தொடர்பாக இலங்கையில் நடைபெறவுள்ள சர்வதேச மாநாட்டின் பிரதான விரிவுரையாளராக பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ செயற்படவுள்ளார்.

பயங்கரவாத இல்லாதொழிப்பு குறித்து அனுபவங்களை பகிர்ந்து கொள்ளும் வகையில் இந்த மாநாடு நடைபெறவுள்ளது.

எதிர்வரும் 31 ஜூன் முதலாம் , 2 ஆம் திகதிகளில் கொழும்பு கலதாரி ஹோட்டலில் இந்த மாநாடு நடைபெறவிருப்பதாக இராணுவப் பேச்சாளர் உபய மெதவல தெரிவித்துள்ளார்.

உலகின் பல நாடுகளைச் சேர்ந்த இராணுவ அதிகாரிகள் உள்ளிட்ட 300 பேர் இந்த கருத்தரங்குகளில் கலந்து கொள்ளவுள்ளனர்.

35 நாடுகளைச் சேர்ந்த இராணுவ அதிகாரிகள் இந்த கருத்தரங்கில் கலந்து கொள்வதனை ஏற்கனவே உறுதி செய்துள்ளனர்.

இந்த கருத்தரங்கு பாதுகாப்பு அமைச்சின் உத்தியோகபூர்வ இணையத்தளத்தின் ஊடாக ஒளிபரப்புச் செய்யப்படவுள்ளது.

இராணுவத் தளபதி ஜகத் ஜயசூரியவின் எண்ணக்கருவிற்கு அமைய இந்த கருத்தரங்கு ஒழுங்கு செய்யப்பட்டுள்ளதாக குறிப்பிடப்படுகிறது.

(ஸ்ரீ-2)

# இலங்கையின் ஆடை உற்பத்திகளைப் புறக்கணிக்குமாறு போராட்டம்

## புலம் பெயர் தமிழர்கள் ஏற்பாடு

இலங்கையின் ஆடை உற்பத்திகளைப் புறக்கணிக்குமாறு கோரும் ஆர்ப்பாட்டமொன்றை புலம்பெயர் தமிழர்கள் ஏற்பாடு செய்து வருவதாக தெரியவருகின்றது.

முள்ளிவாய்க்கால் சம்பவத்தின் இரண்டாவது வருட நினைவு தினத்தை முன்னிட்டு எதிர்வரும் 28 ,29 ஆம் திகதிகளில் பிரித்தானியாவிலிருந்து பிரஸ்தாப ஆர்ப்பாட்டம் ஆரம்பமாகும் என்று இராஜதந்திர வட்டாரங்களில் இருந்து தெரிய வருகிறது.

இலங்கையின் ஆடை உற்பத்திகளைக் கொள்வனவு செய்யும் பிரதான நிறுவனங்களான கெப் டிபார்ட்மெண் ஸ்டோர்ஸ் மற்றும் மார்க் ஆண்ட் ஸ்பென்சர் நிறுவனங்களின் முன்பாக பிரஸ்தாப ஆர்ப்பாட்டங்கள் முன்னெடுக்கப்படவுள்ளன.

தற்போதைக்கு அந்த நிறுவனங்களில் எதிர்வரும் வருடத்துக்கான கொள்முதல் தொடர்பிலான நிதி ஒதுக்கீட்டுக்கான கலந்தாலோசனைகள் நடைபெற்று வருகின்றன.

இலங்கையானது சிறுபான்மை இன மக்களைப் புறக்கணிப்பதாகவும் போர்க்குற்றங்களை இழைத்த ஒரு நாடு என்பதாகவும் குற்றச்சாட்டுகளை முன்வைத்து அதனடிப்படையில் இலங்கையின் ஆடை உற்பத்திகளைப் புறக்கணிக்குமாறு அழுத்தம் கொடுக்கும் வகையில் பிரஸ்தாப ஆர்ப்பாட்டங்கள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாகவும் அறியக் கிடைத்துள்ளது.

(ஸ்ரீ-2)

# மட்டக்களப்பில் மரமுந்திரிகை செய்கையை ஊக்குவிப்பதற்கு நடவடிக்கை

(கொழும்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் கடந்த யுத்த காலத்தில் செயலிழந்து போயுள்ள மரமுந்திரிச் செய்கையை மீள பயிரீடு செய்வதற்கும் செய்கையில் ஈடுபட்டுள்ளவர்களை ஊக்குவிக்கவும் பல்வேறு செயற்றிட்டங்கள் மேற்கொள்ளப்படவுள்ளன.

மீள்குடியேற்ற பிரதியமைச்சர் விநாயகமூர்த்தி முரளிதரனின் வேண்டுகோளின் பேரில் மட்டக்களப்பு மாவட்டத்துக்கு விஜயம் செய்த சிறு பயிர்கள் அபிவிருத்தி மற்றும் ஊக்குவிப்பு அமைச்சர் ரெஜினோல்ட் குரே இதற்கான செயற்றிட்டங்கள் தொடர்பில் கலந்துரையாடல்களை மேற் கொண்டு வருகின்றார்.

கடந்த வெள்ளிக்கிழமை மட்டக்களப்பில் அதிகளவில் மரமுந்திரி உற்பத்தியை மேற்கொள்ளும் மண்முனைப் பற்று பிரதேச சபைக்குட்பட்ட பகுதிகளுக்குச் சென்ற அமைச்சர் அங்கு மேற் கொள்ளப்பட்டு வரும் மரமுந்திரிகை செய்கையைப் பார்வையிட்டார்.

அத்துடன் மரமுந்திரிச் செய்கையை மேம்படுத்தி அதன்மூலம் இப்பகுதியில் பொருளாதாரத்தை பெருக்குவதற்கு தேவையான அனைத்து நடவடிக்கைகளும் இரு மாதங்களில் மேற்கொள்ளப்படும் எனவும் அவர் உறுதியளித்தார்.

மரமுந்திரிகைச் செய்கையின் அளவைக் கூட்டுவதற்கு தடையாக உள்ள காரணிகள் தொடர்பில் மரமுந்திரிகையாளர் சங்கப் பிரதிநிதிகளிடம் கேட்டறிந்து கொண்டதுடன் அவற்றை தீர்த்து வைப்பதற்கான அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்படும் எனவும் தெரிவித்தார்.


(ஸ்ரீ-2)



யா/ சந்திரபுர ஸ்கந்தவரோதயா மகா வித்தியாலய தரம் 6, 7, 8 சைவசமய மாணவர்களின் கற்றல் உபகரண கண்காட்சி அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் பிரதமவிருந்தினராகக் கலந்துகொண்ட தென்மராட்சி கல்வி வலய சேவைக்கால சைவசமய ஆசிரிய ஆலோசகர் செல்வி. இராசமலர் இராமலிங்கம், சிறப்பு விருந்தினராக கலந்து கொண்ட தென்மராட்சி கல்வி வலயப் பிரதிக்கல்விப் பணிப்பாளர் ஆ. ஸ்ரீஸ்கந்தமூர்த்தி, கௌரவ விருந்தினராக கலந்து கொண்ட பாடசாலை அதிபர் வே. கந்தசாமி, ஆசிரியர் சைவப்புலவர் கு. சுமுகலிங்கம், ஆங்கில ஆசிரியர் ச. முருகையா ஆகியோர் வரவேற்கப்படுவதையும் சிறப்பு விருந்தினர் கண்காட்சியினை பார்வையிடுவதையும் நிகழ்வில் கலந்து கொண்ட மாணவர்களையும் படங்களில் காணலாம்.

# தமிழக முதலமைச்சரை இலங்கை வருமாறு அழைப்பு விடுக்கப்பட வேண்டும்

## பேராசிரியர் ரொஹான் குணரட்ண தெரிவிப்பு



(கொழும்பு)

தமிழக முதலமைச்சர் ஜெயலலிதாவுக்கு இலங்கைக்கு வருமாறு அழைப்பு விடுக்கப்படவேண்டும் என பயங்கரவாத ஒழிப்பு தொடர்பான விசேட பேராசிரியர் ரொஹான் குணரட்ண வலியுறுத்தியுள்ளார்.

தமிழக முதல்வர் ஜெயலலிதாவை இலங்கைக்கு விஜயம் செய்யுமாறு அழைப்பதுடன் யுத்தம் இடம்பெற்ற வலயங்களை நேரில் பார்வையிடுவதற்கும் ஜெயலலிதா அழைத்துச் செல்லப்படவேண்டுமென அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்தியா,அமெரிக்கா, பிரிட்டன் போன்ற நாடுகளின் ஒத்துழைப்புடனேயே இலங்கை யுத்தத்தை வெற்றி கொண்டது. அந்த நாடுகளைப் புறக்கணித்து விட்டு இலங்கை தனது அரசியல் செயற்பாடுகளை முன்னெடுக்க முடியாது.

வடக்குக் கிழக்கில் பிரதான தமிழ் தலைமைத்துவங்களை உருவாக்குவது இன்றைய நெருக்கடி மற்றும் எதிர்ப்புணர்வு கொண்ட சூழ்நிலையை ஓரளவுக்கேனும் தணிக்க உதவும்.அதன்மூலம் சர்வதேச மட்டத்தில் இலங்கை அரசாங்கம் இன்னும் பல வெற்றிகளை அடைந்து கொள்ளமுடியும்.

அதற்கு ஏதுவான வகையில் விடுதலைப் புலிகளின் சிரேஷ்ட உறுப்பினர் நெடியவன் கைது செய்யப்பட்டமை மேற்குலக நாடுகளின் நிலைப்பாட்டில் மாற்றம் ஏற்பட்டுள்ளதற்கான பிரதான அறிகுறி என்பதனை அரசாங்கம் உணர்ந்து கொண்டு அதற்கேற்ப தனது செயற்பாடுகளை மீளக்கட்டமைத்துக் கொள்ள வேண்டும்.

தற்போதைய சூழ்நிலையில் விடுதலைப் புலிகள் மூன்று பிரிவுகளாகப் பிரிந்தும் முனைகளில் செயற்பட்டு வருகின்றனர்.

இமானுவல் அடிகளாரின் தலைமையிலான உலகத் தமிழர் பேரவை, விசுவநாதன் ருத்ரகுமாரன் தலைமையிலான நாடு கடந்த தமிழீழ அரசு மற்றும் நெடியவன் தலைமையிலான அமைப்பு ஆகிய மூன்று வடிவங்களில் விடுதலைப்புலிகளின் செயற்பாடுகள் அமைந்துள்ளன.இதில் நெடியவனின் அமைப்பே மிகவும் வன்முறையான அமைப்பாக கணிக்கப்படுகிறது.

ஐக்கிய நாடுகளின் நிபுணர் குழு அறிக்கை வெளியிடப்பட்டதன் காரணமாக மேற்குலக நாடுகள் இலங்கைக்கு எதிராகச் செயற்படுகின்றன 'எனக் கருத முடியாது. ஏனெனில் உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழுவின் நடவடிக்கைகள் குறித்து அமெரிக்கா நம்பிக்கை வெளியிட்டுள்ளது. உலகின் பல நாடுகளிலும் இன்றளவும் விடுதலைப் புலிகளுக்கு எதிரான செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுகின்றன.

அதேபோன்று பயங்கரவாத நடவடிக்கைகளுக்கு நோர்வே போன்ற நாடுகள் ஒத்துழைப்பு வழங்கக்கூடாது எனவும் பேராசிரியர் ரொஹான் குணரட்ண மேலும் வலியுறுத்தியுள்ளார்.

(ஸ்ரீ-2)

# ஸ்ரீலங்கன் விமான சேவைக்கு புதிய விமானம் சேவையில்

(கொழும்பு)

இலங்கையில் சுற்றுலாத்துறை அபிவிருத்தியடைந்து வரும் நிலையில் ஸ்ரீ லங்கன் விமான சேவை தனது விமான சேவைகளை மேலும் விஸ்தரிக்க திட்டமிட்டுள்ளது.

இதன் அடிப்படையில் 11 வருடங்களுக்குப் பின்னர் முதன்முறையாக புதிய விமானம் ஒன்றை வாங்கியுள்ளது.

இறக்குமதி செய்யப்பட்ட ஏ320-200 ரக பயணிகள் விமானத்தை குத்தகை அடிப்படையில், 35 கோடி அமெரிக்க டொலர் நிதி செலவிடப்பட்டுள்ளது.

பிரான்ஸ்- ரைவ்லோஸ் எயார் பஸ் இண்டரீஸ் விமான உற்பத்தி தொழிற்சாலையில் உற்பத்தியான இந்த விமானம், கடந்த வியாழக்கிழமை கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்துள்ளது.

இது தவிர, மேலும் இரண்டு விமானங்கள் இலங்கைக்கு கொண்டு வரப்படவுள்ளதாக ஸ்ரீ லங்கன் விமான சேவையின் தலைவர் நிஷாந்த விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

இதற்கு அமைய ஏ340 ரக பயணிகள் விமானம் ஒன்று அடுத்த வாரமளவில் இலங்கை வரவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் மேலும் ஒரு ஏ330 ரக விமானம் ஒன்று இந்த வருடத்தினுள் இலங்கைக்கு கொண்டு வரப்படவுள்ளது.

எப்படியிருப்பினும், அடுத்த வாரம் இலங்கைக்கு கொண்டு வரப்படவுள்ள விமானம்,6 வருடங்கள் கத்தே பசுவிக் விமான சேவையினால் உபயோகத்திற்கு உட்பட்டது என தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதேவேளை, தற்போது ஸ்ரீ லங்கன் விமான சேவைக்குச் சொந்தமான 18 விமானங்கள் சேவைகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஸ்ரீ-2)

# போலிநாணயத்தாள்கள் வைத்திருந்த நால்வர் கைது

போலி நாணயத்தாள்களையும் போலி நாணயத்தாள் செய்வதற்கான சாதனங்களையும் வைத்திருந்த நால்வர் பொத்துவில் பொலிஸார் மற்றும் குற்றப்புலனாய்வுப் பிரிவினரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இரண்டு ஆயிரம் ரூபா போலி நாணயத்தாள்கள், ஆயிரம் ரூபா நாணயத்தாள் வடிவமைக்கப்பட்ட கடதாசி, கணனி போன்றன இந்த முற்றுகை நடவடிக்கையின் போது கைப்பற்றப்பட்டுள்ளன.

இது தொடர்பில் குற்றப் புலனாய்வுப் பிரிவினரின் உதவியுடன் பொத்துவில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஸ்ரீ-2)

# சஜித் பிரேமதாசவின் தலைமையில் மாற்று மத்திய செயற்குழு?

ஐக்கிய தேசியக் கட்சியின் இணைப் பிரதித் தலைவர் சஜித் பிரேமதாச மாற்று மத்திய செயற்குழு ஒன்றை அமைத்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. சுமார் நூறு உறுப்பினர்கள் இந்த மாற்று மத்திய செயற்குழுவில் அங்கம் வகிப்பதாகக் குறிப்பிடப்படுகிறது.

நாடாளுமன்ற உறுப்பினர்கள், மாகாண சபை உறுப்பினர்கள், தொகுதி அமைப்பாளர் மற்றும் புத்திஜீவிகள் இந்த மாற்று மத்திய செயற்குழுவில் அங்கம் வகிக்கின்றனர்.

இவ்வாறு உருவாக்கப்பட்டுள்ள மாற்று மத்திய செயற்குழு பணிகளை ஆரம்பித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ஸ்ரீ-2)

# நாட்டின் பொலிஸ் சேவை அரசியல் மயப்படுத்தப்பட்டுள்ளது

## ஐ.தே.க.குற்றச்சாட்டு

(கொழும்பு)

பொலிஸ் சேவை அரசியல் மயப்படுத்தப்பட்டுள்ளதாக ஐக்கிய தேசியக் கட்சி அறிவித்துள்ளது. கிழக்கு மாகாணத்தில் சட்டம் ஒழுங்கை நிலைநாட்டுவதற்கு பொலிஸார் நடவடிக்கை எடுக்க வேண்டுமென ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்த நாயக்க கோரிக்கை விடுத்துள்ளார்.

அரசியல் நோக்கங்களுக்காக அரசாங்கம் பொலிஸாரை பயன்படுத்திக் கொள்வதாக அவர் குற்றம் சுமத்தியுள்ளார்.

பொலிஸார் சுயாதீனமான முறையில் செயற்பட வேண்டியது மிகவும் அவசியமானது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

'கிழக்கு மாகாணத்தில் வன்முறைச் சம்பவங்களுடன் தொடர்புடையவர்களுக்கு தராதரம் பாராது தண்டனை வழங்கப்பட வேண்டுமென அவர் வலியுறுத்தியுள்ளார்.

எதிர்க்கட்சி உறுப்பினர்கள் குற்றச் செயல்களில் ஈடுபட்டிருந்தால் அரசாங்கம் ஒரு போதும் இவ்வாறு செயற்பட்டிருக்காது என திஸ்ஸ அத்தநாயக்க சுட்டிக்காட்டியுள்ளார். (ஸ்ரீ-2)

# டுபாயில் இலங்கைப் பெண் சுருக்கிட்டு தற்கொலை

(கொழும்பு)

டுபாயில் பணியாற்றிய இலங்கைப் பெண் ஒருவர் சுருக்கிட்டு தற்கொலை செய்து கொண்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

முந்தல் பிரதேசத்தைச் சேர்ந்த பெண் ஒருவரே இவ்வாறு தூக்கில் தொங்கி உயிரை மாய்த்துக் கொண்டுள்ளார்.

டுபாயில் தொடர்ந்தும் பணியாற்ற முடியாது என குறித்த பெண் பல சந்தர்ப்பங்களில் முறைப்பாடு செய்திருந்ததாக உயிரிழந்த பெண்ணின் கணவர் தெரிவித்துள்ளார்.

எனினும் போதியளவு பணம் இல்லாத காரணத்தினால் பெண்ணை நாட்டுக்கு திருப்பி அழைக்க முடியாமல் போனதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை குறித்த பெண்ணின் சடலத்தை இலங்கைக்கு அனுப்பி வைக்க ஐந்து இலட்சம் ரூபா கோரியதாக பெண்ணின் தாய் தெரிவித்துள்ளார்.

இந்த சம்பவம் குறித்து முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதாகவும் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகத்தின் தலைவர் கிங்ஸ்லி ரணவக்க தெரிவித்துள்ளார் . (ஸ்ரீ-2)

# நிர்வாகசபைக் கூட்டம்

தையிட்டி கலைமகள் சனசமூக நிலைய நிர்வாக சபை கூட்டம் எதிர்வரும் 29 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு நடைபெறும்.

மீள்குடியேற்றத்திற்கான முன்னேற்றங்களை துரிதப்படுத்த புதிய அங்கத்தவர்களும் இணைந்து ஒத்துழைப்பு வழங்கும் படியும் இதற்கான் பதிவுகளை இணுவில் வீதி, மானிப்பாயில் அதிதீரன் மின்சார தொழில்நுட்ப நிலையத்தில் தற்காலிகமாக இயங்கும் அலுவலகத்தில் மேற்கொள் ளும் படியும் மேற்படி சனசமூக நிலைய தலைவர் கேட்டுள்ளார். (ஸ்ரீ-2)

# ஜனாதிபதியுடனான பேச்சுவார்த்தைகளில் கலந்து கொள்ளப் போவதில்லை

## பல்கலைக்கழக பேராசிரியர்கள் அறிவிப்பு

(கொழும்பு)

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுடனான பேச்சுவார்த்தைகளில் கலந்து கொள்ளப் போவதில்லை என பல்கலைக்கழக பேராசிரியர் ஒன்றியம் அறிவித்துள்ளது.

பல்கலைக்கழகங்களில் நிலவும் சம்பள முரண்பாடுகளைக் களைவது தொடர்பிலான பேச்சுவார்த்தை ஒன்றை ஜனாதிபதி ஏற்பாடு செய்துள்ளார். எனினும் இந்தப் பேச்சுவார்த்தைகளில் தமது ஒன்றியத்தின் உறுப்பினர்கள் பங்கேற்கப் போவதில்லை என பல்கலைக் கழக பேராசிரியர் ஒன்றியத்தின் தலைவர் நிர்மால் ரஞ்சித் தெவ்சிறி தெரிவித்துள்ளார்.

இன்று நடைபெறவுள்ள இந்த பேச்சுவார்த்தைகளில் கலந்து கொள்ளுமாறு பல்கலைக் கழக பேராசிரியர்களுக்கு தனிப்பட்ட ரீதியில் கடிதங்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

தமது சங்கத்தில் அங்கம் வகிக்கும் விரிவுரையாளர்கள் இந்த பேச்சுவார்த்தைகளில் கலந்து கொள்வதில்லை என தீர்மானித்துள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார்.

பேச்சுவார்த்தைகளில் கலந்து கொள்ளுமாறு விடுவிக்கப்பட்டுள்ள அழைப்பினைக் கொண்டு இந்தக் கூட்டம் எவ்வாறு நடைபெறும் என்பதை யூகம் செய்ய முடியும் என அவர் தெரிவித்துள்ளார். (ஸ்ரீ-2)

# கொஞ்சம் அமுதம் கொஞ்சம் விஷம்



ஒரு பெண்ணை உயிருக்கு உயிராக நேசித்தேன்.நாங்கள் காதலித்த நாட்கள் மிகரம்மியமானவை. அவளையே என் மனைவி ஆக்கிக் கொண்டேன். ஆனால் அந்த பழைய காதல் காற்றில் கரைந்ததுபோல் காணாமல் போய்விட்டது. அப்படியானால் காதல் என்பது உடல் இச்சையை அடிப்படையாகக்கொண்டது தானா? இச்சை தீர்ந்ததால் காதலும் தீர்ந்து போய்விட்டதா?

ஆணுக்கும் பெண்ணுக்கும் இடையில் உடல்ரீதியான கவர்ச்சி இருப்

## ஆன்மீகம் 03

பது இயற்கையின் நியதி இரு வேறுவிதமான உடலமை:ப்புகள் இருப்பது தான் அந்த வசீகரததின் அடிப்படை.

உடலளவில் என் இணை என்னிலிருந்து முற்றிலும் மாறுபட்டு இருக்க வேண்டும். ஆனால் மனதளவில் என்னிலிருந்து எந்த விதத்திலும் வித்தியாசப்பட்டு இருக்கக்கூடாது என்பது வரம்பு மீறிய எதிர்பார்ப்பு. அதனால் தான் காதல் என்று நீங்கள் நினைப்பது மூச்சு திணறுகிறது. திருமணத்துக்கு முன் உங்கள் இணையைச் சந்திக்கச் செல்கையில் அழகாக உடுத்தி இனிக்க இனிக்கப் பேசினீர்கள். உணவுவிடுதியிலோ, தியேட்டரிலோ செலவு செய்த சிலமணி நேரங்களில் இருவரும் தத்தம் குறைகளை மறைத்து அவரவரை சிறப்பாக காட்டிக்கொண்டீர்கள். அது ஓர் உண்மைநிலை.

அவரோடு சேர்ந்து வாழ்கையில் அவர் பல் துலக்கும் முறையோ, சமைத் துப்பாரிமாற்றும் விதமோ, படுக்கையில் குறட்டை விடும் ஒலியோ உங்களுக்குப் பிடிக்காமல் போகலாம். அது இன்னோர் உண்மை நிலை.

'உலகமே அழிந்தாலும் அழியாதது எங்கள் காதல்' என்று அறிவித்தவர்கள்கூட பிற்பாடு ஏன் பிரியமே இல்லாமல் சேர்ந்து வாழ்கிறார்கள்?

இது காதலின் குற்றமல்ல. இரண்டு மாறுபட்ட உண்மை நிலைகளைச் சந்திக்க தயாராக இல்லாது இருந்தவர்களின் குறைபாடு.

உங்கள் பிரச்சினை என்ன தெரியுமா?

காதல் என்பது திருமணத்துக்கு முதல்படி என்று நீங்கள் தப்புக் கணக்கு போட்டுவிட்டீர்கள்

ஒருத்தியைக் காதலியாக வைத்துக் கொள்வதற்கு அவளிடம் காட்டிய அதே உணர்வை, மனைவியாக வைத்துக் கொள்வதற்குக் காட்டத்தேவையில்லை என்று முட்டாள்த்தனமான முடிவு செய்துவிட்டீர்கள்.

இன்று உங்கள் காதலில் இலயிப்பு இல்லை கடமை உணர்வுதான் இருக்கிறது. கவனிக்காவிட்டால் காதல் காணாமல்தான் போகும்.

அப்படியில்லை சத்குரு இப்போதும் எங்களுக்குள் பிரியம் இருக்கத்தான் செய்கிறது. அவள்மீது எனக்கோ என் மீது அவளுக்கோ எந்த வெறுப்பும் இல்லை. ஆனால் முன்பு காதலிக்கும்போது கிடைத்த ஆனந்தம் திருமணத்துக்குப்பிறகு ஏன் கிடைக்கவில்லை என்கிறேன்?

காதல் என்பது குறிப்பிட்ட காலம் வரை மட்டுமே வாழ்ந்து முடிவதல்ல.

உருவமாற்றத்திலோ உறவாகி விட்டதாலோ வயதிலோ உதிர்ந்து போய் விடுவதில்லை காதல்.

காதலின் சுகம் பற்றி அறிய பழைய வாழ்வின் நினைவுகளைத்தான் அசை

## காதல் தீர்ந்துவிட்டதா?

போட வேண்டும் என்பது துரதிஷ்டமான மனப்போக்கு ஒரு மரத்துவமனை டாக்கடர்கள்கூடினர். "தீவிர சிகிச்சைப் பிரிவில் தினம் காலை எட்டு மணிக்கு ஒரு நோயாளி இறக்கிறார் ஏன்?"

மருத்துவ ரீதியாக எந்த விளக்கமும் திருப்தி தரவில்லை. நிபுணர்களுக்கு இந்த விடயம் சவாலாக இருந்தது.

"அந்த நேரம் பேய்,பிசாசு போன்ற ஏதோவொரு அமானுஷ்ய சக்தி உள்ளே வந்து உயிரைப்பறித்துப் போகிறதோ?" என்றார் ஒரு டாக்டர் எதுவானாலும் அதைக் கண்டுபிடி ுது விடுவது என்று முடிவானது.

ஒரு குறிப்பிட்ட தினத்தில் டாக்டர்கள் தத்தம் இஷ்ட தெய்வத்தின் பெயரை உச்சரித்தபடி அங்கே ஒளித்திருந்து கவனித்தனர்.

சரியாக எட்டு மணிக்கு கதவு திறந்தது.உள்ளே நுழைந்தால் துப்பரவு செய்யும் பெண்மணி. உயிர் காக்கும் இயந்திரத்தின் பிளக்கை பிடுங்கினாள். அங்கே 'வேக்குவம் கிளீனரின்பிளக்கை' செருகி அறையை சுத்தம் செய்ய ஆரம்பித்தாள்.

இப்படித்தான் நீங்களும் காதல் பிளக்கைப் பிடுங்கி விட்டீர்கள். கடந்த ஐந்து வருடங்களில் உங்கள் விருப்பங்கள், பழக்கவழக்கங்கள் எவ்வளவு மாற்றங்களுக்கு உள்ளாகி விட்டன என்று யோசியுங்கள். உங்கள் இணைக்கும் அதேஅனுபவம் இருக்கும்.

பதினெட்டு வயதில் சந்தித்த காதலி நாற்பது வயதிலும் அதே போல நடந்து கொள்ள வேண்டும் என்று எதிர்பார்ப்பது உண்மையை ஏற்கமறுக்கும் முட்டாட்தனமல்லவா? நல்லதோ, கெட்டதோ இருவரிடமும் ஏதேனும் சில பல மாற்றங்கள் ஏற்ப்பட்டுத்தான் இருக்கும். வாழ்க்கையைப்புரிந்து கொள்ளத் தவறி விட்டு காதலையும் கவர்ச்சியையும் போட்டுக் குழப்பிக்கொள்ளாதீர்கள்.

காதல் தானாக சாகாது; நீங்களாக அதன் கழுத்தைத் திருகிக் கொன்றால்தான் உயிர்விடும். இன்றைக்கும் தினப்படி அதை முறையாக பராமரித்து, உயிர்ப்போடு வைத்திருந்து பாருங்கள்... அந்த அமுதின் ருசியை தொடர்ந்து சுவைக்கலாம்!

சத்குரு ஜக்கி வாசுதேவ்

# திருகோணமலை கலை, இலக்கியமும் தேசியப்பார்வையும்

## 05

நாவல் இலக்கியத்துறையில் இக்காலம் சற்றுவேறுபட்ட முறையில் தேசியத்தரம் அல்லது சர்வ தேசப்பார்வை கொண்ட நாவல்கள் எழுந்த காலமாக இக்காலப்பகுதியைக்கூறலாம். அதில் அ.அ.ஜெயராஜாவின் "சேகுவேரா', 'அப்பா' மற்றும் (சூ.நோபேட்) கோவிந்தனின் 'புதியதோர் உலகம்' என்னும் நாவல் மிகமுக்கியத்துவம் கொண்ட நாவலாக காணப்படுகின்றது. ஜெயராஜாவின் நாவல்கள் சேகுவேராப் போராட்டத்தை மையப்பொருளாகக்கொண்டு எழுந்த நவல்களானக காணப்பட, கோவிந்தனின் நாவல் விடுதலைப்போராட்டத்தின் தார்மீகங்களை சொல்லும் நாவலாகக் காணபப்டுகிறது. இதே வேளை ந.பாலேஸ்வரி, செல்வக்குமார், வி.என். சந்திரகாந்தி போன்றவர்களின் நாவல்களும் பொதுவாழ்வைச்சித்தரிக்கும் நாவல்களாக எழுந்துள்ளன.

2000ஆம் ஆண்டிற்குப்பின் போராட்ட வடிவங்கள் சர்வதேச முக்கியத்துவத்துடன் உலக வல்லரசுகளின் ஆலோசனைகள் , பேச்சு வார்த்தைகள் என மாற்றம் கண்ட போதும் அவற்றின் தாக்கம் திருகோணமலையில் கலை இலக்கியத்தில் சொல்லக்கூடிய மாற்றங்களை கொண்டுவரவில்லை. இருந்த போதிலும் நீரோட்டம் போன்ற ஒருவளர்ச்சி மிகமெதுவாக ஊர்ந்து கொண்டு போவதை பொதுவாக அவதானிக்கக்கூடியதாகவிருந்தது. அதிலும் கிண்ணியா,மூதூர் பிரதேசங்களின் கவிஞர்களின் பங்களிப்பு இக்காலப்பகுதியில் திருகோணமலையின் கவிதைத்துறையை சரியவிடாது காத்து நின்றது எனலாம். சிறுகதைத்துறையை நோக்குவோமாயின் திருமலை சுந்தா, ச.அருளானந்தம், வி.என்.சந்திரகாந்தி,கிண்ணியா அமீர்அலி, கனக சபை,தேவகடாட்சம், ராணி ஸ்ரீதரன் போன்றவர்கள் போதியளவில் எழுதி வந்த போதும் தற்கால சூழ்நிலை நெருடல்களை,அனுபவ துருவல்களை இவர்களது கதைகளில் காணமுடியவில்லை.

நாவல் துறையை நோக்கின் மீண்டும் வ.அ. இராசரத்தினத்தின் வருகை, புரட்சி பாலன் அக்வர்டீன்

**"கொழும்பில் நடைபெற்ற சர்வதேச தமிழ் எழுத்தாளர் மாநாட்டில் சமர்ப்பிக்கப்பட்ட ஆய்வுக்கட்டுரை"**

போன்றவர்களின் ஒரு சில நாவல்கள் பிராந்தியப்பசியை போக்கியதே தவிர நிகழ்காலநிழல்வடிவங்களாக அவை அமையவில்லை.

மேடைநாடகத்துறையிலும் நாடக இலக்கியத்துறையிலும் இக்காலப் பகுதி குறிப்பாக 2000ஆம் ஆண்டிற்குப்பின் பாடசாலை நாடகங்ள் அதிசயிக்கத்தக்க வளர்ச்சியை அடைந்துள்ளமையை பாடசாலைத்தரவுகள் எடுத்துக்காட்டுகின்றன. குறிப்பாக இராணிஜெகசோதி, நக்கீரன், தில்லை முகிலன்,இராசரட்ணம், பற்குணம், த. அமரசிங்கம் திருமலை நவம் போன்றோரின் உழைப்பினாலும், மன்றங்களான திருமலைக் கலாமன்றம் கீழைத்தென்றல் கலாமன்றம் போன்றவற்றின் பங்களிப்பினாலும் பாடசாலைநாடகங்கள் காத்திரமான வளர்ச்சியைக் காணுகின்றன.நாடக இலக்கியம் என்ற துறையில் 1887 ஆம் ஆண்டு அகிலேசப்பிள்ளை என்பவரால் எழுதப்பட்ட 'கண்டி' நாடகத்தில் இருந்து வளர்ச்சி ஒன்று கருக்கொள்கிறது.ஏனைய மாவட்டங்கள் போல நாடக இலக்கியத்தின்செம்மை சார்ந்த வளர்ச்சி திருகோணமலையில் குறிப்பிடக்கூடியதாக இல்லாது இருந்த போதும்1990ஆம் ஆண்டிற்குப்பின் பாலசுகுமார், த.அமரசிங்கம், த.பி.சுப் பிரமணியம் கா.சிவபாலன் திருமலை நவம் பொன்றோர் ஆங்காங்கே எழுதிய நாடக இலக்கியங்கள் பற்றிய கட்டுரைகளைத் தவிர நாடக இலக்கி யத்தின் நெறிசார்ந்த வளர்ச்சி திரு கோணமலைப் பிரதேசத்தில் குறை வாகவே இருந்துள்ளது.

2000ஆம் ஆண்டிற்குப்பின் திருகோணமலையின் கலை இலக்கியத் துறையின்வளர்ச்சி ஓர் மந்தத்தன்மை கொண்டதாக இருந்தபோதிலும் நாவல்,சிறுகதை, நாடகம், தொலைக்காட்சி, மெல்லிசை, சங்கீதம் என்ற தொகை வகைப்பட்ட கலைஇலக்கியத்தின் கூட்டுமொத்த வளர்ச்சியையும் காணக்கூடியதாகவுள்ளது. குறிப்பாக கவிதைத்துறையில் மூதூர், கிண்ணியா போன்ற கிராமங்களில் இருந்து பெருந்தொகையான கவிஞர்கள் எழுத முற்பட்டதும் பல்வேறு கவிதைஏடுகள் இக்காலப் பகுதியில் வெளிவந்தமையும் இதற்கு அடையாளங்களாகும்.


அதேவேளை நாவலின்வரவுமிக அருந்தலாகவே இருந்துள்ளது. ஆனால் சிறுகதையில் தேவகடாட்சம்,திருமலை சுந்தா என்.சந்திரவேல், அ.ச.பாய்வா,வி.என். சந்திரகாந்தி போன்றோர் குறைநிரப்பும் தன்மையில் எழுதிவந்தமை சிறுகதை இலக்கியத்தை தூக்கிப்பிடிக்கும் கைங்கரியமாக இருந்தது. ஏலவே குறிப்பட்டதுபோல் நாடகத்துறை, பள்ளி நாடகங்களில் தங்கியிருந்து வளர்ந்

**திருமலை நவம்**

ததை அவதானிக்கலாம். தெரிந்தோ தெரியாமலோ நுழைந்து விட்ட தெலைக்காட்சி வடிவங்களின் உருவ அமைப்பும் மிகச்சிறிய அளவில் திருகோணமலையில் 2000ஆம் ஆண்டிற்குப்பின் வளர்ந்துவந்துள்ளது. கூட்டுமொத்தமாக திருகோணமலை கலை இலக்கிய வளர்ச்சி என்பது ஏனைய பிரதேசங்களுடன் ஒப்பிடும் போது தரப்படுத்த முடியாத வளர்ச்சியாகவே காணப்படுகிறது.

(முற்றும்)

# ஐ.நா. அறிக்கைக்கு எதிராக தமிழர்களும் இணைந்திருப்பது வருத்தமளிக்கின்றது



## சிறிதரன் எம்.பி.தெரிவிப்பு

**கொழும்பு**

**ஐ.நா. அறிக்கையின் பிரகாரம் எவ்வித போர்க் குற்றங்களும் இடம்பெறவில்லையென கூறுபவர்களின் பின்னால் சில தமிழர்களும் இணைந்துள்ளமை மிகவும் வருத்தமளிக்கும் விடயமாகும் என பாராளுமன்ற உறுப்பினர் சிறிதரன் தெரிவித்துள்ளார்.**

ஐ.நா. அறிக்கையில் குறிப்பிட்டிருப்பது போன்று இங்குள்ள தமிழ் மக்கள் மீது எவ்வித போர்க் குற்றங்களும் இடம்பெறவில்லையென வும் அந்த அறிக்கை மீது எவ்வித விசாரணைகளும் தேவையில்லை யெனவும் கூறுபவர்களின் பின்னால் சில தமிழர்களும் இணைந்துள்ளனர். இது மிகவும் வருத்தமளிக்கும் விடயமாகும் என அவர் மேலும் வலியுறுத்தியுள்ளார்.

வவுனியா இந்து இளைஞர் மன்றத்தில் நடைபெற்ற புத்தக வெளியீட்டு விழாவொன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தமிழக மக்கள் இலங்கையில் உள்ள தமிழ் மக்கள் குறித்துச் சிந்தித்துத் தீர்ப்பு வழங்கியுள்ளனர். அதன் காரணமாகவே நடந்து முடிந்த சட்டசபைத் தேர்தலில் தமிழக மக்கள் சரியான நேரத்தில் தமது அரசியல் சாதுரியத்தை வெளிப்படுத்தியுள்ளனர்.

இவ்வாறான ஒரு நிலைக்கு எமது ஈழத்து மக்களும் வரவேண்டும். ஆனால் இங்கோ ஐ.நா. வெளியிட்ட போர்க்குற்ற அறிக்கைக்கு எதிராக கூக்குரல்கள் எழுந்துள்ளன. இங்கும் எமது மக்களுக்குத் தீர்ப்பொன்றை வழங்குவதற்கான சந்தர்ப்பம் கிடைக்கவுள்ளது. இதை அவர்கள் சரியாகப் பயன்படுத்துவார்களென நம்புகின்றேன் என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ஸ்ரீ-2)

# சிறைக்கைதிகளின் உணவு தவிர்ப்பு போராட்டம் தொடர்கிறது

பல கோரிக்கைகளை முன்வைக்க சிறைக் கைதிகள் ஆரம்பித்த உணவுத் தவிர்ப்பு போராட்டம் சில சிறைச்சாலைகளில் தொடர்ந்தும் முன்னெடுக்கப்டுகின்றன.

வெலிக்கடைச் சிறைச்சாலையின் கூரை மீதேறி போராட்டம் நடத்திய 20 சிறைக்கைதிகள் தமது போராட்டத்தை இடை நிறுத்தியிருப்பதாக சிறைச்சாலையின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

எவ்வாறாயினும் போகம்பறை சிறைச்சாலையின் 33 கைதிகளும் மகர சிறைச்சாலையின் 14 கைதிகளும் தமது உணவுத் தவிர்ப்பு போராட்டத்தை தொடர்ந்தும் மேற் கொள்வதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில் அண்மையில் மாத்தறையில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் பங்கேற்று உரையாற்றிய சிறைச்சாலைகள் மறு சீரமைப்பு அமைச்சர் சந்திரசிறி கஜதீர கைதிகளின் மனோநலத்தை மேம்படுத்தும் வகையில் சிறைச்சாலையினுள்ளேயே அறநெறிப் பாடசாலைகளை ஆரம்பிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என குறிப்பிட்டார். (ஸ்ரீ-2)

# பொன்சேகாவின் வழக்குகளை பரிசீலிக்க சர்வதேச நாடாளுமன்ற ஒன்றிய பிரதிநிதி வருகை

(கொழும்பு)

முன்னாள் இராணுவத்தளபதி சரத் பொன்சேகாவுக்கு எதிராக நீதிமன்றில் தொடுக்கப்பட்டுள்ள வழக்குகளை பரிசீலனை செய்வதற்கு அனைத்துலக நாடாளுமன்ற ஒன்றியத்தின் விசேட பிரதிநிதியொருவர் இலங்கைக்கு வரவழைக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

அவுஸ்திரேலியாவின் சட்டத்தரணியான மார்க் டுவல் என்பவரே இம்மாத இறுதிப்பகுதியில் இலங்கைக்கு வருகை தரவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இவர் உலக நாடுகள் பலவற்றில் இவ்வாறான சர்ச்சைக்குரிய வழக்குகளை பரிசீலனை செய்தவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

மலேசியாவின் முன்னாள் பிரதமராக செயற்பட்ட அன்வர் இப்ராஹீமிற்கு எதிராக அந்நாட்டு நீதி மன்றங்களில் தொடுக்கப்பட்ட வழக்குகளை பரிசீலனை செய்தவர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஸ்ரீ-2)

# பணிப்பெண்களை வெளிநாடு செல்ல ஊக்குவிக்காதீர்!

## அமைச்சர் டிலான் கோரிக்கை

(கொழும்பு)

சவுதி அரேபியாவிற்கு பணிப் பெண்ணாக பணியாற்றச் சென்ற 27 வயதான முந்தலம் பிரதேசத்தைச் சேர்ந்த பெண்ணொருவர் தற்கொலை செய்து கொண்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த விடயம் குறித்து வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தின் சிரேஷ்ட பேச்சாளர் ஒருவர் கருத்து தெரிவிக்கையில்,

இந்தச் சம்பவம் தொடர்பாக இது வரையிலும் எந்தவித தகவல்களும் கிடைக்கவில்லை என குறிப்பிட்டார்.

இந்த நிலையில் வெளிநாடுகளுக்கு பணிப்பெண்களாக இலங்கை பெண்களை அனுப்புவதற்கு ஊக்குவிக்க வேண்டாம் என வெளிநாட்டு முகவர்களை வெளிநாட்டுவேலைவாய்ப்புதுறை அமைச்சர் டிலான் பெரேரா கேட்டுள்ளார்.

இலங்கைபணிப்பெண்கள்வீட்டுஎஜமானர்களால் பாரிய இம்சைக்கு உட்படுவதாக அவர் தெரிவித்துள்ளார்.

இந்த நிலையில் மாதாந்தம் சுமார் 40 முறைப்பாடுகள் ஐக்கிய அரேபிய இராச்சிய நாடுகளில் இருந்து கிடைப்பதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். தற்போது புள்ளி விபரங்களின் படி ஐக்கிய அரேபிய இராச்சிய நாடுகளில் 2 இலட்சத்து 50 ஆயிரம் இலங்கையர்கள் பணியாற்றுவதாகவும் அவர்களில் ஒரு இலட்சத்து 20 ஆயிரம் பேர் பணிப் பெண்களாக பணியாற்றுவதாகவும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை சவுதி அரேபியாவுக்கான விஜயத்தை நேற்று முன்தினம் ஆரம்பித்துள்ள அமைச்சர் அங்கு இரண்டு நாள் தங்கியிருந்து சவுதி அரேபிய உயர்மட்ட அதிகாரிகளுடன் இலங்கை பணியாளர்கள் தொடர்பில் கலந்துரையாடவுள்ளார்.

இந்த விஜயத்தின் போது பயிற்றப்பட்ட ஊழியர்களை சவுதி அரேபியாவுக்கு அனுப்புவது குறித்து முக்கிய கவனம் செலுத்தப்படுவதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. (ஸ்ரீ-2)

# மடகஸ்காரிலிருந்து இலங்கைக்கு வரும் வேடந்தாங்கல் பறவைகள் உயிரிழப்பு

இலங்கைக்கு வரும் வேடந்தாங்கல் பறவைகளில் ஒன்றான ஸ்ரேனா கஸ்பியா எனப்படும் நீள் மூக்குடைய கடற்பறவை வகைகள் மரணிக்கும் அச்சுறுத்தலை எதிர் நோக்கியுள்ளது என வனவிலங்கு பாதுகாப்பு திணைக்களம் தெரிவித்துள்ளது.

கடந்த 11 ஆம் திகதி தொடக்கம் இதுவரை கடற்கரையை அண்மித்த பிரதேசங்களில் இவ்வாறு உயிரிழந்த கஸ்பியா பறவைகளின் 16 உடல்கள் கிடைத்துள்ளதாக திணைக்களத்தின் பிரதி பணிப்பாளர் தாரக பிரசாத் தெரிவித்துள்ளார்.

மடகஸ்காரில் இருந்து இலங்கைக்கு வரும் வேடந்தாங்கல் பறவைகள் இவ்வாறு மரணிப்பது தொடர்பாக ஆய்வுகளை ஆரம்பித்துள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

பறவைகளின் உடல்கள் மேலதிக பரிசோதனைகளுக்காக கண்ணொருவ விலங்கியல் ஆய்வு நிலையத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாக பிரதிப்பணிப்பாளர் மேலும் தெரிவித்துள்ளார். (ஸ்ரீ-2)

## உங்களுக்குத் தெரியுமா? பாடசாலை மட்டப்போட்டி

வடமராட்சி வலய பாடசாலைகளுக்கிடையிலான உங்களுக்கு தெரியுமா? பாடசாலை மட்டப் போட்டி எதிர்வரும் 25 ஆம் திகதி நடைபெறவுள்ளது. இதற்கான வினாத்தாள் பொதிகள் வடமாகாண கல்வித் திணைக்களத்தினால் அனுப்பி வைக்கப்படவுள்ளன. அதிபர்கள் இவ்வினாத்தாள் பொதியை எதிர் வரும் 24 ஆம் திகதி வலயக்கல்வி அலுவலகங்களில்பெற்றுபோட்டிகளை நடத்தலாம் என வடமராட்சி வலய மாணவ அபிவிருத்தி பிரதிக் கல்விப் பணிப்பாளர் திருமதி விஜயலக்சுமி சுகுமாரன் அறிவித்துள்ளார். (ஸ்ரீ-19)

# இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

2011.05 23

★ 1430- ஜோன் ஒஃப் ஆர்க் பிரான்சில் பேர்கண்டியரினால் கைது செய்யப்பட்டாள்.

★ 1568-நெதர்லாந்து ஸ்பெயினிடம் இருந்து விடுதலையை அறிவித்தது.

★ 1805- நெப்போலியன் பொனபார்ட் இத்தாலியின் மன்னனாக முடிசூடினான்.

★ 1813- தென்னமெரிக்க விடுதலைப் போராட்டத் தலைவர் சிமோன் பொலிவார் வெனிசுவேலாவின் முற்றுகைக்குத் தலைமை வகித்துச் சென்றுவிடுவிப்பாளர் எனத் தன்னை அறிவித்தார்.

★ 1846-மெக்சிக்கோ ஐக்கிய அமெரிக்கா மீது போரை அறிவித்தது.

★ 1865-வோஷிங்டன் டிசியில் அமெரிக்க உள்நாட்டுப் போர் முடிவுற்றமை கொண்டாடப்பட்டது.

★ 1915-முதலாம் உலகப் போர்: இத்தாலி ஆஸ்திரியா, ஹங்கேரி மீது போரை அறிவித்தது.

★ 1929- மிக்கி மவுசின் முதலாவது பேசும் கார்ட்டூன் கார்னிவல் கிட் வெளிவந்தது.

★ 1949-ஜேர்மன் கூட்டாட்சி குடியரசு அமைக்கப்பட்டது.

★ 1951-திபெத்தின் விடுதலைக்கான 17 அம்ச உடன்பாட்டில் திபெத்தியர்கள் கட்டாயமாகக் கைச்சாத்திட வைக்கப்பட்டார்கள்.

★ 1958-ஐக்கிய அமெரிக்காவின் முதலாவது செய்மதி எக்ஸ்புளோரர் 1 தனது பூமியுடனான தொடர்பை இழந்தது.

★ 1998-புனித வெள்ளி உடன்பாட்டிற்கு ஆதரவாக வட அயர்லாந்தின் 71 சதவீத மக்கள் வாக்களித்தனர்.

**பிறப்புக்கள்**

★ 1707-கரோலஸ் லின்னேயஸ், தற்கால வாழ் சூழலியலின் முன்னோடி (இ.1778)

★ 1920-காயத்திரி தேவி, ஜெய்ப்பூர் மகாராணி (இ.2009)


★ 1951-அனத்தோலி கார்ப்பொவ், ரஷ்ய சதுரங்க வீரர்.

**இறப்புக்கள்**

★ 1906-ஹென்ரிக் இப்சன் நவீன நாடக இலக்கியத்தின் தந்தை(பி.1828)

★ 1997-அல்பிரட் ஹேர்ஷ்லி, நோபல் பரிசு பெற்றவர் (பி.1908)

# ஐ.நா நிபுணர்கள் குழுவின் அறிக்கை தொடர்பில் புதுடில்லியின் நிலைப்பாடு என்ன? - பகிரங்கப்படுத்துமாறு சீமான் கோரிக்கை!



ஐக்கிய நாடுகள் சபை நிபுணர்கள் குழுவின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதன் பிரகாரம் இலங்கை அரசாங்கம் மேற்கொண்ட போர்க்குற்றங்கள் மற்றும் மனிதவுரிமை மீறல்கள் தொடர்பிலான இந்தியாவின் நிலைப்பாடு குறித்து தமிழக மக்களுக்கு உடனடியாக தெரிவிக்கப்பட வேண்டும் என நாம் தமிழர் கட்சியின் தலைவர் சீமான் வலியுறுத்தியுள்ளார்.

அத்துடன், இவ் விவகாரத்தில் இலங்கை அரசாங்கத்திற்கு உதவும் வகையில் போர்க்குற்ற விசாரணைகளை மேற்கொள்வதற்கு இந்திய அரசாங்கம் தடைகளை ஏற்படுத்துமாயின், இவ்விசாரணைகளில் மத்திய அரசையும் விசாரணை செய்ய வேண்டும் என சர்வதேச ரீதியில் தாம் குரல் கொடுப்போம் என சீமான் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது குறித்து நாம் தமிழர் கட்சியின் தலைவர் சீமான் வெளியிட்டுள்ள அறிக்கையின் முழுவடிவத்தையும் இங்கே தருகின்றோம்.

இலங்கை வெளியுறவு அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் மூன்று நாள் பயணமாக இந்தியா வந்த பொழுது இந்திய பிரதமர் மன்மோகன் சிங், இந்திய வெளியுறவு அமைச்சர் எஸ்.எம்.கிருஷ்ணா, பாதுகாப்புச் செயலர் சிவ்சங்கர் மேனன், வெளியுறவுச் செயலர் நிருபமா ராவ் ஆகியோரைச் சந்தித்துப் பேசியுள்ளார்.

அதன்பிறகு இரு அரசுகளின் சார்பாக ஊடகங்களுக்கு ஒரு கூட்டறிக்கை விடுக்கப்பட்டுள்ளது. அந்த கூட்டறிக்கையில் இலங்கை அமைச்சரின் இந்தியப் பயணத்தின் நோக்கம் என்ன என்பது குறித்து ஒரு இடத்திலும் குறிப்பிடப்படாதது வியப்பளிக்கிறது.

இலங்கையில் நடந்த தமிழினப் படுகொலை குறித்து விரிவான விசாரணை நடத்தப்பட வேண்டும் என்று ஐ.நா.பொதுச் செயலர் பான் கீ மூன் அமைத்த நிபுணர் குழு அறிக்கை வெளி வந்து பன்னாட்டுக் கவனத்தை ஈர்த்துள்ள நிலையில், இலங்கைவெளியுறவு அமைச்சரின் பயணம், அந்த அறிக்கைக்கு எதிராக டெல்லி அரசின் ஆதரவைப் பெறுவதற்காகவே என்று இலங்கையின் ஊடகங்களில் பரவலாக செய்தி வெளியாகியுள்ள நிலையில், டெல்லியில் விடுக்கப்பட்ட கூட்டறிக்கையில் ஐ.நா. நிபுணர் குழு அளித்த அறிக்கை பற்றி விவாதித்ததாக ஒரு வார்த்தை கூட இடம்பெறவில்லை.

இரு தரப்பு உறவுகள் தொடர்பான அனைத்துப் பிரச்சனைகள்

## இலங்கையை காப்பாற்ற உதவினால் இந்தியாவையும் விசாரிக்க கோருவோம்

குறித்தும், இரு நாடுகளுக்கும் பொதுவாக கவலையளிக்கும் மண்டல, பன்னாட்டு பிரச்சனைகள் குறித்தும் விவாதிக்கப்பட்டது என்று தான் பொத்தம் பொதுவாகக் இவ்வறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

இரு நாடுகளுக்கும் கவலையளிக்கும் பிரச்சனைகளில் ஒன்றாக ஐ.நா நிபுணர் குழு அறிக்கை தொடர்பாகவும் விவாதிக்கப்பட்டுள்ளதா? என்ற வினா எழும்புகிறது. ஆனால் பதில் இல்லை.

ஏனெனில், இலங்கையில் போரினால் பாதிக்கப்பட்ட தமிழர்களின் மீள்குடியமர்த்தல் மற்றும் இணக்கப்பாடு தொடர்பான பிரச்சனைகளின் மீது அரசு தொடர்ந்து கவனம் செலுத்தி வருவதாக அமைச்சர் பீரிஸ் கூறினார் என்றும், தமிழ் மக்களின் மீள் குடியமர்த்தல், உண்மையான இணக்கப்பாடு, இன்னமும் முகாம்களில் உள்ள தமிழர்கள் அவர்களின் வாழ்விடங்களில் மீள்குடியமர்த்தப்படுவது, அவசர நிலை சட்டங்களை உடனடியாக திரும்பப்பெறுவது, மனித உரிமை மீறல்கள் குறித்து விசாரணை செய்வது, பாதிக்கப்பட்ட குடும்பங்களின் மனிதாபிமான தேவைகளை நிறைவேற்றுவது ஆகியவற்றை இலங்கை அரசு உறுதி செய்ய வேண்டும் என்று இந்திய வெளியுறவு அமைச்சர் கிருஷ்ணா கேட்டுக் கொண்டார் என்றும் கூட்டறிக்கையின் ஐந்தாவது பகுதியில் கூறப்பட்டுள்ளது.

இதுநாள்வரை வராத அக்கறை இப்போது இந்திய, இலங்கை அரசுக்கு திடீரென்று வந்துள்ள மர்மம் என்ன?

தமிழர்கள் வாழ்ந்த பகுதிகளில் சிங்கள குடியேற்றமும், தமிழர் நகரங்களின் பெரும்பகுதி சிங்கள இராணுவப் பகுதிகளாக மாற்றப்பட்டு, இராணுவ முகாம்களும், குடியிருப்புகளும் கட்டப்பட்டு வருகிறதே, அப்படியானால் அங்கு இது நாள்வரை வாழ்ந்த மக்கள் எங்கே குடியேற்றப்பட்டார்கள்? இந்திய அரசு இந்த வினாவை எழுப்பியதா? என்ற கேள்விக்கும் பதில் இல்லை.

தமிழ் மக்களுக்குச் சொந்தமான நிலங்கள் சிங்களவர்களுக்குத் தாரைவார்க்கப்பட்டுள்ளதாக இலங்கை நாடாளுமன்றத்திலேயே தமிழ்த் தேசிய கூட்டணியின் தலைவர் இரா.சம்பந்தன் பேசினாரே, அதனை சிங்கள அரசு இதுவரை மறுக்க வில்லையே? இப்படிப்பட்ட நிலையில், மீள் குடியமர்த்தலை உறுதி செய்யுமாறு இலங்கை அரசை கேட்டுக் கொள்வதில் என்ன அர்த்தம் உள்ளது?

தமிழ் மக்களுக்கு எதிராக இழைக்கப்பட்ட மனித உரிமை மீறல்கள் குறித்து விசாரணை நடத்த வேண்டும் என்று அமைச்சர் கிருஷ்ணா வலியுறுத்தியதாகக் கூறப்பட்டுள்ளது. ஆனால் அதற்கு இலங்கை அமைச்சர் என்ன பதில் கூறினார் என்ற விபரம் இல்லை.

தமிழ் மக்களுக்கு எதிராக இழைக்கப்பட்ட போர்க்குற்றம், மனித குலத்திற்கு எதிரான குற்றங்கள் ஆகியன பற்றி பன்னாட்டு மனிதாபிமான சட்டங்களின் அடிப்படையில் விசாரணை நடத்த வேண்டும் என்று ஐ.நா. நிபுணர் குழு பரிந்துரை செய்துள்ளது.

ஆனால் ஐ.நா. நிபுணர் குழு அறிக்கை வெளிவந்து ஒரு மாதத்திற்கு மேலாகியும் அது குறித்து பதில் ஏதும் சொல்லாமல் இந்திய அரசு மௌனம் சாதிப்பது ஏன்?

ஐ.நா. நிபுணர் குழு அறிக்கை வெளியாவதற்கு முன்பு வரை, இந்தியாவின் பல்வேறு வர்த்தக எதிர்பாக்காமல் பிடி கொடுக்காமல் இழுத்தடித்து வந்த ராஜபக்ஷ அரசு, இப்போது சம்பூரில் அனல் மின் நிலையம் அமைக்கவும், காங்கேசன் துறைமுகத்தை மேம்படுத்தவும், பலாலி விமான தளத்தை மறுசீரமைக்கவும், பலாலி - காங்கேசன் துறை இடையே இரயில் பாதை அமைக்கும் திட்டத்தை ஏற்கவும், புதிய தொலைத் தொடர்பு மற்றும் சமிக்ஞை அமைப்பு இந்தியாவின் உதவியுடன் நிறுவவும், இதுநாள் வரை சம்மதிக்க மறுத்து வந்த இந்தியாவுடனான விரிவான பொருளாதார கூட்டாண்மை ஒப்பந்தத்தை ஏற்க முன்வந்திருக்கிறது.

மேலும் இலங்கையின் ஒட்டுமொத்த மின் அமைப்பையும், இந்தியாவின் (தமிழ்நாட்டின் ஊடாக) மின் அமைப்புடன் இணைப்பது என்று பல்வேறு பொருளாதார ஒப்பந்தங்களை ஒப்புக் கொள்ள முன்வந்திருக்கிறது. ஐ.நா. நிபுணர் குழு அறிக்கையின் பரிந்துரையால் கலங்கிப்போய் இருக்கும் ராஜபக்ஷ அரசைக் காப்பாற்ற இந்திய அரசு உறுதியளித்திருப்பதற்கு கைமாறாக சிங்கள அரசு மேற்கண்டவற்றை நிறைவேற்ற முன்வந்திருக்கிறது.

ஐ.நா. நிபுணர் குழு அளித்த அறிக்கையின்படி இலங்கை அரசு இழைத்த போர்க்குற்றங்கள் குறித்து பன்நாட்டு விசாரணை நடத்தப்பட வேண்டும் என்று உலகம் முழுவதும் உள்ள தமிழர்களும் மனிதவுரிமை ஆர்வலர்களும் விரும்புகிறார்கள்.

எனவே இந்திய அரசின் நிலைப்பாடு என்ன? ஆதரிக்கிறதா? எதிர்க்கிறதா? என்பதை தமிழ்நாட்டு மக்களுக்கு உடனடியாக, பகிரங்கமாக தெரிவிக்க வேண்டும்.

வழக்கம்போல் இதற்கும் பதில் கூறாமல், தமிழினப் படுகொலையில் ஈடுபட்ட ராஜபக்ஷவிற்கு எல்லா விதத்திலும் இரகசியமாக உதவியது போல் இப்பிரச்சினையிலும் இந்திய அரசு மௌனம் காக்கும் எனில் மறைமுகமாக விசாரணைக்குத் தடைபோடும் முயற்சியில் ஈடுபடுமெனில் இலங்கை அரசுக்கு எதிரான போர்க்குற்ற விசாரணையில் இந்திய அரசையும் சேர்த்தே விசாரிக்க வேண்டும். என்று தமிழர்களாகிய நாங்கள் பன்நாட்டு அளவில் குரல் எழுப்புவோம் என இவ் அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## தோட்டத் தொழிலாளர்களின் சம்பளப் பிரச்சினை குறித்த பேச்சுவார்த்தை ஒத்திவைப்பு

(கொழும்பு)

தோட்டத் தொழிலாளர்களின் சம்பளப் பிரச்சினை தெர்டர்பான பேச்சுவார்த்தை மீண்டும் ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

இதன்படி நாளை செவ்வாய்க்கிழமை வரை இந்தப் பேச்சுவார்த்தை ஒத்தி வைக்கப்பட்டுள்ளதாக இலங்கை தேசிய தோட்டத் தொழிலாளர் சங்கத்தின் பொதுச் செயலாளர் கே.வேலாயுதம் தெரிவித்தார்.

தோட்டத் தொழிலாளர் சம்பளப் பிரச்சினை குறித்த தொழிற்சங்கங்களின் நிலைப்பாடு மற்றும் கோரிக்கைகள் முதலாளிமார் சம்மேளனத்திடம் ஏற்கனவே முன்வைக்கப்பட்டுள்ளதாக அவர் கூறினார்.

இந்த நிலையில் அவை தொடர்பாக முதலாளிமார் சம்மேளனம் ஆராய்ந்து வருவதாக அவர் தெரிவித்தார்.

இதற்கமைய நாளை செவ்வாய்க்கிழமை தோட்டத் தொழிலாளர் சம்பளப் பிரச்சினைக்கான தீர்வினையும் நிலைப்பாட்டையும் முதலாளிமார் சம்மேளனம் அறிவிக்கும் என எதிர்பார்க்கப்படுவதாக இலங்கை தேசிய தோட்டத் தொழிலாளர் சங்கத்தின் பொதுச் செயலாளர் கே. வேலாயுதம் மேலும் குறிப்பிட்டார். (ஸ்ரீ-2)

## மன்னார் தபாலகங்களில் கணனி மயப்படுத்தப்பட்ட சேவை

மன்னார் மாவட்டத்திலுள்ள தலை மன்னார், மன்னார், பேசாலை, எருக்கலம்பிட்டி, வங்காலை, முருங்கன், மடுக்கோவில், சிலாபத்துறை ஆகிய எட்டுத் தபாலகங்களிலும் கணனி மயப்படுத்தப்பட்ட சேவைகள் நடைமுறைக்கு கொண்டு வரப்பட்டுள்ளதாக மன்னார் மாவட்ட தபால் அத்தியட்சகர் எஸ்.சின்னப்பு தெரிவித்துள்ளார்.

வழமையான சேவைகளுடன் கணனி மயப்படுத்தப்பட்ட சேவைகளாக மின்சாரப் பட்டியல் கட்டணம் செலுத்துதல், காசுக் கட்டளை வழங்கல் கொடுப்பனவு, தேசிய சேமிப்பு வங்கிச் சேவைகள், மொபிற்றல் பட்டியல் கட்டணம் செலுத்துதல் போன்ற சேவைகளும் ஏனைய சேவைகளான விரைவு தபாற் சேவை, வாகனத் தண்டப் பணம் அறவிடல், பொதிகள் சேவைகள் என்பனவும் இடம் பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஸ்ரீ-134)

# வெளியுறவுத்துறை அமைச்சின் இந்திய விஜயம் இலங்கைக்கு பாதகத்தை ஏற்படுத்தி உள்ளது

## கொழும்பு ஊடகம் சுட்டிக்காட்டு

(கொழும்பு)

**வெளியுறவுத்துறை அமைச்சர் ஜி.எல்.பீரிஸின் இந்திய விஜயம் இலங்கைக்கு வெற்றியளிக்கவில்லை என்று கொழும்பு ஊடகமொன்று வெளியிட்டுள்ள செய்தியில் தெரிவித்துள்ளது.**

எந்த ஒரு வெளிநாட்டு அலுவல்கள் அதிகாரிகளுமின்றி இந்தியாவுக்கு சென்றிருந்த ஜி.எல்.பீரிஸ் அங்கு இந்திய பிரதமர் மன்மோகன் சிங் உட்பட்டவர்களை சந்தித்திருந்தார். இதன்போது இலங்கை விடாப்பிடியாக இருந்த பல விடயங்களை அமைச்சர் ஜி.எல். பீரிஸ் விட்டுக் கொடுக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

13 ஆவது அரசியலமைப்பு சீர்திருத்தத்தை முழுமையாக அமுல்படுத்துவது என்று இலங்கையின் வெளியுறவு அமைச்சரும் இந்திய வெளியுறவு அமைச்சர் எஸ்.எம்.கிருஷ்ணாவும் வெளியிட்ட கூட்டறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதிலும் ஒரு பகுதியில் 13 ஆவது அரசியலமைப்பு அத்துடன் பிளஸ் என்ற உறுதி மொழியையும் இலங்கை அரசாங்கம் வழங்கியுள்ளது.

இந்தியாவின் அனுசரணையுடன் ஏற்படுத்தப்பட்ட 13 ஆவது அரசியலமைப்புக்குள் மாகாண சபைகளுக்கு பொலிஸ் மற்றும் காணி அதிகாரங்கள் வருகின்றன. எனினும் அதனை மாகாண சபைகளுக்கு வழங்கப்போவதில்லை என்று அரசாங்கம் கூறி வந்தது.

இந்த நிலையில் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு அந்த இரண்டு அதிகாரங்களும் இல்லாமல் இனப்பிரச்சினை தீர்வுக்கான பேச்சுவார்த்தை பயனற்றது என்று தெரிவித்து வருகிறது. இந்த நிலையில் 13 ஆவது அரசியலமைப்பு பிளஸ் என்ற இலங்கை அரசாங்கத்தின் உறுதி மொழி எதனை குறித்து நிற்கிறது என்று அவ்வூடகம் கேள்வி எழுப்பியுள்ளது.

நிச்சயமாக பொலிஸ் மற்றும் காணி அதிகாரங்கள் அதில் உள்ளடங்கும் என்று அது குறிப்பிட்டுள்ளது.

இந்த இரண்டு அதிகாரங்கள் தொடர்பான கோரிக்கையே இலங்கையின் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, தமிழீழ விடுதலைப்புலிகளின் கோரிக்கை என்று கூறி வந்தார். இந்தநிலையில் இந்தியாவின் அழுத்தத்துக்கு மத்தியில் மாகாண சபைகளுக்கு வழங்கப் போகும் இந்த அதிகாரங்கள் தொடர்பில் அவர் சிங்கள மக்களுக்கு எதனைக் கூறப்போகிறார் என்ற கேள்வியும் எழுந்துள்ளது என அதில் கூறப்பட்டுள்ளது.

அத்துடன் பான் கீ மூனின் நிபுணர் குழுவின் அறிக்கையின் பரிந்துரைகளுக்கு எதிரான போக்குக்கு ஆதரவு திரட்டும் முகமாகவே அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் இந்தியாவுக்கு சென்றிருந்தார். எனினும் அந்தக் குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் சர்வதேச அழுத்தங்களை தவிர்க்க உள்ளூரில் சுயாதீனமாக விசாரணை மேற்கொள்ளுமாறு இந்தியா வலியுறுத்த அதனை இலங்கையும் ஏற்றுக் கொண்டுள்ளதாக கூட்டறிக்கையில் குறிப்பிட்டுள்ளது.

எனவே ஜி.எல்.பீரிஸின் இந்திய விஜயம் இலங்கைக்கு பாதகத்தையே கொண்டு வந்துள்ளது.

இதற்கிடையில் தமிழக புதிய முதல்வர் ஜெயலலிதா ஆட்சிக்கு வந்தவுடன் இலங்கை தொடர்பாக தெரிவித்த கருத்துக்கள் மற்றும் அவர் எதிர்க்கட்சி தலைவர் ரணில் விக்ரமசிங்கவுக்கு தமிழகம் வருமாறு அழைப்பு விடுத்தமை ஆகியன ராஜபக்ஷ அரசாங்கத்துக்கு சவால்களேயாகும் என்று ஆய்வாளர்கள் கருத்து வெளியிட்டுள்ளனர். (ஸ்ரீ)

## தனியார்துறை ஓய்வூதியத்திற்கு தனியார் துறையினர் எதிர்ப்பு

(கொழும்பு)

உத்தேச தனியார் ஓய்வூதிய திட்டத்திற்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில் ஒரு இலட்சம் தனியார் துறை ஊழியர்களை கொழும்புக்கு கொண்டு வரவுள்ளதாக அனைத்து நிறுவன ஊழியர் சங்கம் தெரிவித்துள்ளது.

சங்கத்தின் தலைவர் வசந்த சமரசிங்க கருத்துத் தெரிவிக்கையில்,

இந்த எதிர்ப்பு நடவடிக்கைகள் குறித்து இன்றையதினம் தொழிற்சங்கங்களின் தலைவர்களுக்கு இடையேயான கலந்துரையாடல் ஒன்று இடம்பெறவுள்ளதாகவும் குறிப்பிட்டார்.

இதேவேளை தேசிய ஊழியர் சங்கத்தின் செயற்குழுவினால் விசேட கூட்டம் ஒன்றும் இன்றைய தினம் இடம்பெறவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை தனியார் ஓய்வூதியம் தொடர்பாக மேற்கொள்ள வேண்டிய தொழிற்சங்க எதிர்ப்பு நடவடிக்கைகள் குறித்து தீர்மானம் மேற்கொள்ள தீர்மானித்துள்ளதாக சங்கத்தின் பிரதி ஏற்பாட்டாளரும் செயலாளருமான ஆனந்த பாலித தெரிவித்துள்ளார்.

இதேவேளை இந்த விடயம் குறித்து தொழிலமைச்சர் காமினி லொக்குகே கூறுகையில்,

இந்த ஓய்வூதியம் தொடர்பான பிரேரணை நாடாளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படவுள்ளதாக தெரிவித்தார். எப்படியிருப்பினும் உயர்நீதிமன்றம் தனியார் தரப்பு ஓய்வூதியத் திட்டம் குறித்து இலங்கை அரசியல் யாப்பிற்கு ஏற்றவகையில் அமைந்திருப்பதாக அவர் குறிப்பிட்டார். (ஸ்ரீ-2)


## மரண அறிவித்தல்

### திருமதி லயன் டாக்டர் கந்தையா சிவகாமவல்லி



திருநெல்வேலி கிழக்கு பூதவராய வீதியை பிறப்பிடமாகவும், வெள்ளாம்போக்கட்டி, கொடிகாமத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி டாக்டர் கந்தையா சிவகாமவல்லி 19.05.2011 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற இராமசாமி-இராசம்மாவின் அன்பு மகளும், இளைப்பாறிய ஆயுள்வேத மருத்துவ உத்தியோகத்தர் கந்தையாவின் அன்பு மனைவியும், ஆறுமுகம்முதலி செல்வராணியின் சகோதரியும், இந்திராதேவி, வசந்தி, வசந்தகுமார், இந்திரகுமார், குமுதினி ஆகியோரின் அன்புத்தாயாரும், சிறிஇந்திரன், ஜெயக்குமார், சாந்தலிங்கம், மேகலைச்செல்வி, மஞ்சி ஆகியோரின் மாமியும் Dr.சுகன், கஜன், ரகுவர்மன், இந்துஜா, ஆர்த்தி, யுவான், வருண், திரிசா ஆகியோரின் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று 23.05.2011 திங்கட்கிழமை அவரது இல்லத்தில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை 24.05.2011 செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு நடைபெற்று, நண்பகல் 12 மணிக்கு அல்லாரை வெள்ளாம்போக்கட்டி கொற்புலவு இந்து மயானத்தில் பூதவுடல் தகனம் செய்யப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

**வெள்ளாம்போக்கட்டி, கொடிகாமம்.**

**தகவல்: கணவன் லயன் டாக்டர் கந்தையா**

(4990)


## 3ஜி மொபைல் வேகம் குறித்து சோதனை

3 ஜி மொபைல் புரோட்பான்ட் சேவை வழங்குநர்கள் விளம்பரப்படுத்தும் 3ஜி மொபைல் புரோபான்ட் வேகத்தைவிட பாவனையாளர்களுக்கு குறைந்த வேகமே கிடைப்பதாக இலங்கை தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

பாவனையாளர்களுக்கு கிடைக்கும் உண்மையான வேகத்தை கண்டறிவதற்காக அனைத்து (HSPA) சேவைகள் தொடர்பாகவும் வேக சோதனைகளையும் தொழில்நுட்ப மதிப்பீடுகளையும் எதிர்வரும் வாரத்தில் மேற்கொள்வதற்கு திட்டமிடப்பட்டுள்ள தாக மேற்படி தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகம் அனுஷ பெல் பிட்ட தெரிவித்துள்ளார்.

உண்மையான வேகம் கண்டறியப்பட்ட பின்னர் அதை விளம்பரப்படுத்துமாறு சேவை வழங்குநர்கள் அறிவுறுத்தப்படுவர் என அவர் கூறினார்.

பொதுவாக 3.5ஜி வேகம் குறித்து விளம்பரப்படுத்தப்படுவது சந்தை அனுகூலத்திற்காகவே எனவும் இந்த வேகமானது குறித்த தொலைத்தொடர்பு கோபுரம், கோபுரம் உள்ள தூரம் மற்றும் பாவனையாளர்கள் பயன்படுத்தும் சாதனங்கள் உட்பட பல விடயங்களில் தங்கியுள்ளதாக அனுஷ பெல்பிட்ட தெரிவித்துள்ளார்.

(ஸ்ரீ-2)


## துவிச்சக்கர வண்டி ஓட்டப்போட்டி

புத்தூர் மேற்கு கலைமதி விளையாட்டுக் கழகத்தின் 37ஆவது ஆண்டு விழாவை முன்னிட்டு, எதிர்வரும் 27.05.2011 ஆம் திகதி காலை 6.30 மணியளவில் துவிச்சக்கரவண்டி ஓட்டப்போட்டி நடைபெறவிருக்கின்றது.

ஆண்களுக்கான துவிச்சக்கரவண்டி (40 மைல்) ஓட்டப்போட்டியில் யாழ். மாவட்டத்திலுள்ள வீரர்கள் பங்குபற்ற முடியும்.

பெண்களுக்கான துவிச்சக்கரவண்டி (20 மைல்) ஓட்டப்போட்டியில் கோப்பாய் பிரதேச செயலகத்திற்குட்பட்ட வீராங்கனைகள் பங்குபற்ற முடியும். போட்டியில் பங்குபற்ற விரும்பும் வீர, வீராங்கனைகள் 24.05.2011 ஆம் திகதி செவ்வாய்க்கிழமைக்கு முன்னர் தங்களின் பதிவுகளை கலைமதி விளையாட்டுக்கழக செயலாளருடன் தொடர்பு கொண்டு மேற்கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

தொடர்புகளுக்கு: **க.ஜெயக்குமார் (செயலாளர்)**

தொலைபேசி இல: 0771841202, 0776848375, 0778680722.

(4987)

## தூய பிலிப்பு நேரியார் ஆலயம், செம்பியன்பற்று

## வருடாந்த திருவிழா

செம்பியன்பற்று புனித பிலிப்பு நேரியார் ஆலய வருடாந்த திருவிழா 17.05.2011 கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி 25.05.2011 மாலை நற்கருணை விழாவும் 26.05. 2011 காலை திருவிழா திருப்பலியுடன் நிறைவடையும்.

யாழ்ப்பாணம், பருத்தித்துறை சாலைகளில் இருந்து 25ஆம், 26ஆம் திகதிகளில் விசேட போக்குவரத்துச் சேவை நடைபெறும்.

பங்குத் தந்தையும், பங்கு மக்களும்.

(4964)

# என்மீதும், என்குடும்பத்தின் மீதும் வஞ்சம் தீர்க்கும் படலத்தை ஆரம்பித்துள்ளனர்

## கருணாநிதி கருத்து



(சென்னை)

என்மீதும் என் குடும்பத்தின் மீதும் வஞ்சம் தீர்த்துக் கொள்ளும் படலத்தை வஞ்சனையாளர்கள் சிலர் கூடி வெற்றிகரமாக நடத்தி முடித்துள்ளனர் என தி.மு.க தலைவர் கருணாநிதி தெரிவித்துள்ளார். இது தொடர்பாக முன்னாள் முதல்வர் கருணாநிதி கூறியிருப்பதாவது, தனியார் தொலைக்காட்சி குழு மத்தில் இருந்து பங்கு பிரிக்கப்பட்ட போது எனக்கு தரப்பட்ட நூறு கோடி ரூபாவில் 22.5 கோடி ரூபா வருமான வரியாக முறைப்படி செலுத்தினேன். எஞ்சிய தொகையான 77.5 கோடிரூபாவை பகிர்ந்து கொள்ளப்பட்ட போது கனிமொழிக்கு கிடைத்த 2 கோடி ரூபாவை பங்கு தொகையாக செலுத்தி கலைஞர் ரி.வி.யில் ஒரு பங்குதாரராக இருக்க சொல்லி நான் தான் வலியுறுத்தினேன்.

கனிமொழி அதை விரும்பாவிட்டாலும் கூட அப்பா சொல்கிறார் என ஒப்புக்கொண்ட குற்றத்தை தவிர வேறு ஒன்றும் செய்யவில்லை


எந்த ஒரு நிறுவனத்திலும் பங்குதாரர்களாக இருப்பவர்கள் இலாபமோ நட்டமோ அந்த இரண்டில் ஒன்றுக்கு பொறுப்பேற்பது பொதுவான விடயம். ஆனால் அந்த நிறுவனத்தின் ஒவ்வொருநாள் நடவடிக்கைக்கும் அவர்கள் பொறுப்பாவதில்லை.

டில்லி சி.பி.ஐ நீதிமன்றில் கனிமொழிக்காக வாதாடிய பிரபல வழக்கறிஞர் ராம்ஜெத் மாலானி ஒரு நிறுவனத்தில் நடைபெறுகிற வரவு,செலவு –கொடுக்கல், வாங்கல்இவற்றில் எல்லாம் அந்த நிர்வாகத்தின் பங்குதாரர்கள் பொறுப்பேற்க வேண்டியதில்லை என தெளிவாக சுட்டிக்காட்டியுள்ளார்.

இருந்தும் கலைஞர் தொலைக்காட்சி நிர்வாகி சரத்குமாரையும் என் மகள் கனிமொழியையும் பிணையில் விட மறுத்து சிறைக்கு அனுப்பியுள்ளனார். என்மீதும் என் குடும்பத்தின் மீதும் வஞ்சம் தீர்த்துக்கொள்ளும் படலத்தை வஞ்சனையாளர்கள் சிலர் கூடி வெற்றிகரமாக நடத்தி முடித்துள்ளனர்.

ஆயினும் நிம்மதி அடையாமல் நாங்கள் வாழ்ந்த இடம், வாழும் இடம், நம் இரு வண்ணக்கொடி பறக்கும் இடம் அனைத்தும் தரை மட்டமாகி புல் முளைத்த இடமாகிட வேண்டும் என்றும் அதுவும் தர்ப்பைப்புல் முளைத்த இடமாக வேண்டுமென குமரி முனையிலிருந்து இமயம் கொடுமுடி வரையிலும் உள்ளவர்கள் தவம் கிடக்கின்றனர். இவ்வாறு கருணாநிதி கூறியுள்ளார். (ஸ்ரீ)

## மகளைக் கட்டிப்பிடித்து ராஜாத்தி கண்ணீர்



சிறையிலிருந்து நேற்று முன்தினம் நீதிமன்றத்திற்கு கொண்டுவரப்பட்ட கனிமொழியை அவரது தாயார் ராஜாத்தி நேரில் சந்தித்தார். அந்தச் சந்திப்பின்போது கனிமொழியை கட்டியணைத்து கண்ணீர்விட்டு ராஜாத்தி அழுதார்.தனது தாயாரை கனிமொழி ஆறுதல்படுத்தினார். இந்த உருக்கமான காட்சியால் நீதிமன்றில் குழுமியிருந்த தி.மு.க. பிரமுகர்கள் உட்பட அனைவருமே மிகுந்த வருத்தத்தில் ஆழ்ந்தனர். (ஸ்ரீ-2)

## இயல்பு நிலைக்கு திரும்பினார் ரஜினி



(சென்னை)

தீவிர சிகிச்சைப் பிரிவில் அளிக்கப்பட்டு வரும் தொடர் சிகிச்சை காரணமாக நடிகர் ரஜினிகாந்த் உடல்நிலையில் நல்ல முன்னேற்றம் ஏற்பட்டு அவர் இயல்பு நிலைக்கு திரும்பியுள்ளார்.

நேற்று முன்தினம் முதல் அவருக்கு வழக்கமான உணவு கொடுக்கப்படுகிறது. இருப்பினும் பார்வையர்ளர்கள் தொந்தரவு, நோய்த் தொற்று ஆகியவற்றை தவிர்ப்பதற்காக தொடர்ந்து தீவிரசிகிச்சை பிரிவில் வைக்கப் பட்டுள்ளார்.

உடல்நிலை பாதிப்புக் காரணமாக கடந்த 13ஆம் திகதி போரூர் ஸ்ரீ ராமச்சந்திரா மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட நடிகர் ரஜினி காந்திற்கு அங்கு தொடர்ந்து தீவிர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது.

சிறுநீரக செயற்பாடு மந்தமான நிலையில் கடந்த இரு தினங்களுக்கு முன் ரஜினிக்கு அல்ட்ரா பில்ட்ரேஷன் ஹீமோ டயாலிசிஸ் சிகிச்சை மேற்கொள்ளப்பட்டது. இதையடுத்து இரத்தத்தில் அதிகரித்திருந்த கிரியேட்டின் அளவு குறைய ஆரம்பித்துள்ளது. இந்த சிகிச்சையைத் தொடர்ந்து ரஜினியின் உடல் நிலையில் இலேசான முன்னேற்றம் ஏற்பட்டது.

அவருக்குக் கொடுக்கப்படும் மாத்திரை, மருந்துகளை உடல் முறையாக ஏற்றுக் கொள்வதால் உடல்நிலையில் நேற்று முன்தினம் முன்னேற்றம் ஏற்பட்டது. தொடர்ந்து அவர் தீவிர சிகிச்சைப் பிரிவில் இருந்தாலும் மனைவி மகள்களுடனும் மருத்துவக் குழுவினருடன் வழக்கம் போல பேசினார். நேற்று முன்தினம் முதல் வழக்கமான உணவும் அவருக்கு கொடுக்கப்பட்டு வருகிறது. (ஸ்ரீ-2)



முன்னாள் பிரதமர் ராஜீவின் 20 ஆவது நினைவு தினத்தை முன்னிட்டு டில்லியில் உள்ள அவரது நினைவிடத்தில் காங். தலைவர் சோனியாவும் பொதுச்செயலர் ராகுலும் மலர்தூவி அஞ்சலி செலுத்துவதைப் படத்தில் காணலாம் .

## பாரதச் செய்திகள்

## கருணாநிதி இன்று டில்லி பயணம்

(சென்னை)

தி.மு.க .எம்.பி. கனிமொழி ஸ்பெக்ட்ரம் வழக்கில் கைது செய்யப்பட்டுள்ள நிலையில் தி.மு.க. தலைவர் கருணாநிதி திடீரென இன்று திங்கட்கிழமை டில்லி செல்கிறார்.

2ஜிஸ்பெக்ட்ரம் முறைகேடு வழக்கில்தி.மு.க. எம்.பி.யும் முன்னாள் முதலமைச்சர் கருணாநிதியின் மகளுமான கவிஞர் கனிமொழி கைது செய்யப்பட்டு டில்லி திகார் சிறையில் அடைக்கப்பட்டுள்ளார். கனிமொழி மீதான கைது நடவடிக்கையின் காரணமாக அரசியலில் பரபரப்பான சூழ்நிலை ஏற்பட்டுள்ளது.

இந்த நிலையில் தற்போதைய அரசியல் சூழ்நிலை குறித்து கட்சி நிர்வாகிகளுடன் கருணாநிதி தனது கோபாலபுரம் வீட்டில் நேற்று முன்தினம் இரவு அவசர ஆலோசனை நடத்தினார். இதில் மத்திய மந்திரி மு.க.அழகிரி , தி.மு.க. பொருளாளர் மு.க. ஸ்டாலின், பாராளுமன்ற தி.மு.க. தலைவர் டி.ஆர். பாலு எம்.பி. மற்றும் தி.மு.க.வைச் சேர்ந்த மத்திய மந்திரிகள், முன்னாள் அமைச்சர்கள் கலந்து கொண்டனர்.

ஐக்கிய முற்போக்கு கூட்டணி அரசு பொறுப்பேற்று 3 ஆவது ஆண்டு தொடங்குவதை முன்னிட்டு பிரதமர் மன்மோகன் சிங் டில்லியில் விருந்து நிகழ்ச்சிக்கு ஏற்பாடு செய்துள்ளார். இது தொடர்பாகவும் பொதுவான அரசியல் நிலவரம் குறித்தும் தி.மு.க. தலைவர் கருணாநிதி நீண்ட நேரம் விவாதித்ததாக தெரிகிறது.

பிரதமர் மன்மோகன் சிங் அளிக்கும் விருந்தில் தி.மு.க். சார்பில் யாரும் கலந்து கொள்ளாமல் புறக்கணிக்க போவதாக முதலில் தகவல்கள் வெளியாகின. ஆனால் அந்த விருந்தில் தி.மு.க. பாராளுமன்ற குழு தலைவர் டி.ஆர்.பாலு எம்.பி. யை மட்டும் கலந்து கொள்ள செய்வது என்று அந்த கூட்டத்தில் முடிவு எடுக்கப்பட்டதாக தெரிய வந்தது. மேலும் கனிமொழி எம்.பி.யை பார்க்கவும் கூட்டணி கட்சியான காங்கிரஸ் கட்சியின் முக்கிய தலைவர்களை சந்தித்து பேசவும் கருணாநிதி இன்று டில்லி செல்வார் என்றும் தகவல்கள் வெளியாகியுள்ளன. (ஸ்ரீ-2)

## கனிமொழி விவகாரத்தில் சி.பி.ஐ.க்கு கிடைத்த ஆதாரம்

(புதுடில்லி)

ஸ்பெக்ட்ரம் ஊழல் விவகாரத்தில் கனிமொழிக்குத் தொடர்பு உண்டு என்பதை ஆணித்தரமாக நிரூபிக்க கலைஞர் தொலைக்காட்சி ஆரம்பிக்கதனியார்நிறுவனம்மூலம்காசோலை வடிவில் வந்த பணம்தான மிகப் பெரிய ஆதாரமாக சி.பி.ஐ.க்குக் கிடைத்துள்ளது.

ஊழல் விவகாரங்களில் மேற்கொள்ளப்படும் பணப்பரிவர்த்தனைனகள், காசோலை மூலம் நடப்பது மிக அரிதே. பணம் கை மாறும்.அப்படி மேற்கொள்ளப்படும் பணப்பரிவர்த்தனைகளுக்கான கணக்குகளும் சம்பந்தப்பட்ட நபர்களின் உண்மைப் பெயரில் இருக்காது.பொய்ப்பெயரிலோ, வேறு யாருடைய பெயரிலாவது நடக்கும்.

ஆனால் 2ஜி ஸ்பெக்ட்ரம்விவகாரத்தில் 214கோடி ரூபா மதிப்புள்ள பணப்பரிமாற்றம், காசோலை மூலம் நடந்ததே, தற்போது கனிமொழியைச் சிறைக்கு அனுப்பியுள்ளது.

கடந்த 20ஆம் திகதி டில்லி, திகார் சிறையில் கனிமொழியை அடைத்த பின் சி.பி.ஐ. அதிகாரிகள் கூறியதாவது, இந்த விவகாரத்தில் காசோலை மூலம் பணப்பரிமாற்றம் நடந்துள்ளது எங்கள் அதிர்ஷ்டம். மூளையைக் குழப்பும் புதிர்போல ஆங்காங்கே சிதறிக் கிடந்த தகவல்களை ஒன்று திரட்ட இந்தப் பணப்பரிமாற்றம் தான் முக்கிய ஆதாரமாக. விளங்கியது.ஸ்பெக்ட்ரம் ஒதுக்கீட்டுக்காக வாங்கப்பட்ட இலஞ்ச பணத்தின் ஒரு பகுதி கலைஞர் தொலைக்காட்சிக்கு சென்ற பாதையை மட்டும் தான் தற்போது எங்களால் கண்டுபிடிக்க முடிந்தது. அதன்வழியாகத் தான் அந்த தொலைக்காட்சியில் 20 சதவீத பங்கு வைத்துள்ள கனிமொழி சிக்கினார்.

மீத இலஞ்சப் பணம் எங்கு சென்றது என்பதைக் கண்டறிய மொரீஷியஸ் நாட்டுக்குச் செல்ல உள்ளோம்.அங்கு கணிசமான தகவல்கள் கிடைக்கும் என எதிர்பார்க்கிறோம். சுப்பிரமணியசாமி கூறியுள்ளது போல், நாட்டின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்படும் வகையிலான பணப்பரிவர்த்தனைகளும் இந்த விவகாரத்தில் நடந்துள்ளதா என்பதை நாங்கள் ஆராய்ந்து வருகிறோம்.

2ஜி ஸ்பெக்ட்ரம் ஊழல் விவகாரத்தில் நிரா ராடியா ஈடுபட்டதாக நாங்கள் கருதவில்லை. எனினும் வோல்டாஸ் நிலம் தொடர்பான விவகாரங்களில் அவர் தலையீடு இருப்பது குறித்து நாங்கள் விசாரணை நடத்தி வருகிறோம்.

மேலும் 2001 தொடக்கம் 2007ஆம் ஆண்டுகளில் நடைபெற்ற ஸ்பெக்ட்ரம் ஒதுக்கீடு விவகாரம் தொடர்பான புலனாய்வை நாங்கள் விரைவில் ஆரம்பிக்க உள்ளோம். அதற்கான ஆரம்பக் கட்ட விசாரணை நடந்து வருகிறது என சி.பி.ஐ.அதிகாரிகள் கூறினர். (ஸ்ரீ-2)

ஆடம்பரத்தின் மென்மையான மெத்தை யின் மீதுதான் பெரும்பாலான இராட்சியங் கள் அழிந்தன. -யங்.

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

# ஆசிரியர் தொழிற் சங்கங்கள் கலைக்கப்பட வேண்டும்

வடபுலத்தில் இருக்கக் கூடிய ஆசிரியர் தொழிற் சங்கங்கள் உடனடியாக கலைக்கப்பட வேண்டும் என்பது வடபகுதி ஆசிரியர்களின் விருப்பமாகும்.

ஆசிரியர்களின் உரிமைகள் பற்றி எதுவுமே பேசாமல் இருக்கின்ற ஆசிரியர் தொழிற்சங் கங்களால் ஆசிரியர்களுக்கு ஏற்படக்கூடிய நன்மை எதுவுமில்லை.

இதற்கு மேலாக, ஆசிரியர் அல்லாதவர்கள் ஆசிரியர் சங்கங்களின் தலைமைப் பதவிக ளில் இருப்பது வினோதமான விடயம்.

என்னசெய்வது! பதவி ஆசை அந்த ஆசை யிலிருந்து விடுபட முடியாமல் சங்கத்தின் யாப் பில் அதிபர், உதவிக் கல்விப் பணிப்பாளர்கள், விரிவுரையாளர்கள், ஆசிரியர் சங்கத்தில் இடம்பெறலாம். சங்கத்தின் தலைமைப்பதவி களில் இருக்கலாம் என யாப்பை அமைத்துக் கொண்டு சங்கத்தை நடத்துகின்றனர்.

தங்கள் தங்கள் நலன்களைக் கவனிப்பதற் காக இயங்குகின்ற ஆசிரியர் தொழிற்சங்கங் கள் தாமாகவே கலைந்து செல்வது உத்தமம்.

இல்லையேல் இச் சங்கங்களில் அங்கத்து வம் பெற்றிருக்கும் ஆசிரியர்கள் ஒட்டுமொத் தமாக தமது உறுப்புரிமையை இராஜினாமாச் செய்து சங்கங்களை செயலிழக்கச் செய்ய வேண்டும்.

இதனை ஆசிரியர்கள் செய்யாதுவிடின் சங்கத்தின் உயர்பதவிகளில் இருப்பவர்கள் அரச உயர் மட்டங்களோடு சேர்ந்து தங்கள் பதவிகளுக்கு வலுச்சேர்த்துக் கொள்வர்.

ஆசிரியர் தொழிற்சங்கம் என்றால் அது ஆளுமையோடு இருக்க வேண்டும். ஆசிரியர் களின் நலனைப் பேணவேண்டும். ஆனால் எங்கள் ஆசிரியர் சங்கங்களை நினைக்கும் போது வேதனைதான் மிஞ்சுகிறது.

கடந்த ஆண்டிலிருந்து வடபுலத்தில் ஆசிரி யர் இடமாற்றம் நடைபெறுகின்றது. இவ்வாறு அண்மையில் இடமாற்றம் கிடைத்த ஆசிரியர் களில் மேன்முறையீடு செய்தவர்களை நேற்றைய தினம் வடக்கு மாகாண ஆளுநர் யாழ்ப்பாணத்தில் சந்தித்து அவர்களின் மேன்முறையீட்டை பரிசீலித்தார்.

இதன்போது தென்மராட்சி கல்வி வலயத் தைச் சேர்ந்த ஒரு ஆசிரியை பிறந்து 47 நாட் களேயான தனது குழந்தையையும் அங்கு கொண்டுவந்திருந்தார்.

நீண்ட நேரம் காத்திருந்ததை பார்த்தபோது நெஞ்சு வெடித்தது.

குழந்தை வீரிட்டு அழுதது. அம்மா... என்னை ஏன் தமிழினத்தில் பிரசவித்தாய். பார்த்தாயா? என் நிலையை என்று கேட்பது போல அந்தக் குழந்தையின் அழுகையிருந்தது.

அட! நாசமறுத்த ஆசிரியர் சங்கங்களே; உங்கள் பதவிகளை இதோடு தூக்கி எறியக் கூடாதா! என்ன சாதிக்கப் போகிறீர்கள்? யாருக்காக சாதிக்கப்போகிறீர்கள்? இனமானம், ரோசமிருந்தால் கூண்டோடு உங்கள் பதவியை துறந்து சங்கங்களை அடக்கம் செய்யுங்கள். அது போதும்.

# இரட்டைப் பிரஜாவுரிமை முறை மாற்றி அமைக்கப்படுவதால் புலம்பெயர் மக்கள் பாதிப்பு

இலங்கையில் இரட்டைப் பிரஜா வுரிமை முறை மாற்றி அமைக்கப்படு வதால் புலம் பெயர் தமிழர்கள் பலர் பாதிக்கப்படவுள்ளனர்.

இலங்கையில் இரட்டை பிரஜாவுரி மையை மீள் பரிசீலனை செய்யும் முறையினால் வெளிநாடுகளில் உள்ள பல்லாயிரக்கணக்கான இலங்கைப் பிரஜைகள் தமது உரிமைகளை இழப் பர் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இரட் டைப் பிரஜாவுரிமை முறை தற்போது இடைநிறுத்தப்பட்டுள்ளது.

வெளிநாடுகளில் வாழும் பெருமள வான தமிழர்கள் உட்பட சுமார் 35 ஆயிரம் இலங்கைப் பிரஜைகள் பல் வேறு ரீதியாக பாதிக்கப்படுவர்.

அத்துடன் அதற்கு பதிலாக கொண்டு வரப்படும் புதிய முறையால் இரட்டைப் பிரஜாவுரிமையைப் பெற்றுக்கொள்ள விரும்புவோர் கடின நிலைமையை எதிர் நோக்க வேண்டியிருக்கும்.

இந்நிலையில் இரட்டைப் பிரஜா வுரிமை இரத்து செய்யப்பட்டமையை மீள் பரிசீலனை செய்யவுள்ளதாக இலங்கையின் குடிவரவு மற்றும் குடிய கல்வு கட்டுப்பாட்டாளர் தெரிவித்துள்ளார்.

எனினும் மீண்டும் இரட்டைப் பிர ஜாவுரிமை முறை கொண்டு வரப்ப டுமா? என்பதை தம்மால் கூறமுடி யாது என்றும் அவர் கூறியுள்ளார்.

இதேவேளை இரட்டைப் பிரஜா வுரிமை முறைக்குப் பதிலாக புதிய முறை ஒன்று தயாரிக்கப்பட்டுள்ளது. எனினும் அது இலங்கை ஜனாதி தியின் ஒப்புதலுக்காக அனுப்பப்பட் டுள்ளதாக சுசிலாந்த பெரேரா தெரி வித்தார்.

இதற்கிடையில் புதியமுறையின் படி இரட்டைப் பிரஜாவுரிமையைப் பெறவிரும்புவோர், தனிப்பட்ட தகுதி, சுகநலன் தகுதி, நிலையான வைப்பு, சிரேஷ்ட பிரஜாவுரிமை தன்மை என் பன கவனிக்கப்படவுள்ளன.

அத்துடன் இரட்டை பிரஜாவுரிமை பெறுபவர் இரண்டு இலட்சம் ரூபாயை செலுத்தவேண்டும்.

தமது உறவுகளுக்கு இரட்டைப் பிரஜாவுரிமையைப் பெறவேண்டுமா யின் 50 ஆயிரம் ரூபாயை செலுத்த வேண்டும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் சகோதரர்களான பசில் ராஜபக்ஷ மற்றும் கோத்தபாய ராஜபக்ஷ ஆகியோர் அமெரிக்காவி லும் இலங்கையிலும் இரட்டைப் பிரஜா வுரிமையைப் பெற்றவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. (ஸ்ரீ-2)

# வாகனத்திலிருந்து தவறி விழுந்து கடற்படை வீரர் பலி

(மட்டக்களப்பு)

கடற்படையினரின் வாகனத்திலி ருந்து தவறி விழுந்த கடற்படை வீர ரொருவர் வாகனத்தின் சக்கரத்தில் அகப்பட்டு ஸ்தலத்திலேயே பலியாகி யுள்ளார். டீ.எம். திவாகர (வயது-23) என்பவரே வாகனத்தின் சில்லில் அகப் பட்டு பலியானவர் ஆவார்.

மட்டக்களப்பு வாகரைப் பிரதேசத் திலுள்ள கஜவத்த பிரதான வீதியில் நேற்று அதிகாலையில் இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளது.

சடலம் வாழைச்சேனை வைத்திய சாலைக்கு எடுத்துவரப்பட்டுள்ளது. நீதிமன்ற விசாரணைகளின் பின்னர் கடற்படை உயரதிகாரியிடம் சடலத்தை பொலிஸார் ஒப்படைத்துள்ளனர்.

இது தொடர்பாக வாகரை பொலி ஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஸ்ரீ-2)

# தமிழகத்தில் அடுத்த நகர்வுக்கு ஆயத்தமாகும் காங்கிரஸ்

சோனியாவும் பிரதமரும் ஜெயலலி தாவுக்கு வாழ்த்து தெரிவித்திருப்பதன் மூலம் தி.மு.கவில் இருந்து விலகி காங் கிரஸ் அடுத்த நகர்வுக்கு ஆயத்தமாவது வெட்ட வெளிச்சமாகியுள்ளது.

சட்டசபை தேர்தலுக்கு முன் நீங் கள் விரும்பிய கூட்டணி அமையும் என ஜெயலலிதா கூறிய நாள் முதல் காங் கிரஸ் மீது தி.மு.கவுக்கு இருந்த அதிருப்தி அதிகமாகியது.

தொகுதி பங்கீடு பிடிவாதத்தால் மத் திய அரசில் இருந்து விலக தி.மு.க முடி வெடுத்தது. ஒரு சில தினங்களில் கூட் டணியை முறிக்க காங்கிரஸும் கொம்பு சீவியது. வேட்பாளர் தேர்வு நேரத்தில் அறிவாலயத்தில் உள்ள கலைஞர் தொலைக்காட்சி அலுவலகத்தில் சி.பி.ஐ ரெய்டு, கனிமொழியிடம் சி.பி.ஐ விசார ணை, ஸ்பெக்ட்ரம் குற்றப்பத்திரிகையில் கனிமொழி பெயர் இடம்பெற்றது என அடுத்தடுத்த அஸ்திரங்கள் தி.மு.க மீது வீசப்பட்டன.

கருணாநிதியுடன் பிரசார மேடையை பிரதமர் மன்மோகன்சிங் தவிர்ப்பு, பிர சாரத்துக்கு தமிழகம் வந்த ராகுல் எப்போதும் போல் கருணாநிதியை சந்திக்காமல் சென்றது, தேர்தல் ஆணையத்தின் கெடுபிடி, கருணாநிதி உள்ளிட்டோருக்கு பொலிஸ் பாதுகாப் புக் குறைப்பு, நாடாளுமன்ற உறுப் பினர் ரித்திஷ்கை, மத்திய அமைச்சர் அழகிரி உட்பட பல அமைச்சர்கள் வாகனம், அலுவலகத்தில் சோதனை, தி.மு.க வுக்கு சாதகமானவர்கள் என்ற அடிப்படையில் கலெக்டர்கள் பொலிஸ் அதிகாரிகள் இடமாற்றம் என அஸ் திரங்கள் தொடர்ந்தன.

கோவை ஈரோடு பிரசார கூட்டங் களில், தமிழகத்தில் எமர்ஜென்சி நடப் பது போல உள்ளது என கருணாநிதி கூறியதை பலரும் தேர்தல் ஆணை யத்தை குறிப்பிடுகிறார் என்றே நினை த் தனர். ஆனால் அவர் மத்திய அர சைத்தான் அவ்வாறு சாடினார் என தாமதமாகவே பலருக்கும் புரிந்தது. அதற்கேற்ப பொறுப்பாளன தொகு தியில் தி.மு.க கூட்டணி கட்சி வேட் பாளர்களின் பிரசாரம் உட்பட எந்த பணிக்கும் காங்கிரஸார் அவ்வளவாக ஒத்துழைக்கவில்லை.

காங்கிரஸ் தொகுதிகளில் தி.மு.க வும் கழன்று கொண்டது. கடைசியாக இக்கூட்டணி எதிர்க்கட்சி அந்தஸ்தை கூட பெற முடியாமல் போனது. அ.தி. மு.கவுடன் கூட்டணி வைக்க ராகுல் விரும்பினார். ஆனால் சோனியாவின் முடிவால் தி.மு.கவுடன் கூட்டணியை காங்கிரஸ் தொடர்ந்தது. தேர்தல் தோல் விக்கு பின், தி.மு.க கூட்டணிக்கு காரண மான தங்கபாலுவை எதிர்த்து அவரது கொடும்பாவியை மாநிலம் முழுவதும் காங்கிரஸார் எரித்தனர். இதன் மூலம் கூட்டணி குறித்த தங்கள் எதிர்ப்பையும் பதிவு செய்துள்ளனர்.

தேர்தலில் வெற்றி பெற்ற ஜெயலலி தாவுக்கு தொலைபேசி மூலம் சோனி யாவும் பிரதமர் மன்மோகன் சிங்கும் வாழ்த்து கூறியுள்ளனர். தி.மு.க கூட் டணியால் தமிழகத்தையும் புதுச்சேரி யையும் இழந்துள்ள காங்கிரஸ் தி.மு.க வில் இருந்து விலகி அடுத்த நகர்வுக்கு ஆயத்தமாவது வெட்ட வெளிச்சமாகி யுள்ளது. மத்திய அரசில் அங்கம் வகித் தால் 2 ஜி ஸ்பெக்ட்ரம் பிரச்சினையை சந்திப்பது, அ.தி.மு.க அரசை சமா ளிப்பது எளிதாகும் என தி.மு.க விரும் பினாலும் காங்கிரஸ் ஒத்துழைக்குமா என்ற கேள்வி எழுந்துள்ளது. (ஸ்ரீ-2)

# எதிர்க்கட்சித் தலைவர் விரைவில் சென்னை பயணம்

(கொழும்பு)

எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரம சிங்க மிக விரைவில் சென்னை செல்ல வுள்ளதாக ஐ. தே. க. வட்டாரங்கள் தெரி விக்கின்றன.

தமிழகத்தின் புதிய முதலமைச்சரா கப் பதவியேற்றுக் கொண்டுள்ள ஜெய லிதா விடுத்துள்ள அழைப்பை ஏற்றே ஐ.தே.க. தலைவரும் எதிர்க்கட்சித் தலை வருமான ரணில் விக்கிரமசிங்க விரை வில் சென்னைக்குச் செல்லவுள்ளார்.

முதலமைச்சர ராகப் பதவி யேற்ற ஜெய லலிதாவிற்கு ரணில் விக்கிரமசிங்க தொலை பேசி மூலம் வாழ்த்துத் தெரிவித்திருந்தார். அதன் போதே ரணில் விக்கிரமசிங்கவை சென்னைக்கு வரும்படி ஜெயலலிதா அழைப்பு விடுத்திருந்தார். (ஸ்ரீ)

# சுவாமி விவேகானந்தரின் அறிவுரைகள்



**உலகத்தை காலடியில் வைக்க...**

பிறருடைய தவறைக் காண முயற்சிக்காமல், உங்க ளுடைய தவறை திருத்திக் கொள்ளுங்கள். பொறாமை, ஆணவம் ஆகியவற்றைத் தூக்கி எறிந்து விட்டு, உன் முழு வலிமையுடனும், அளவற்ற ஆர்வத்துடனும், தொழில்களத்தில் இறங்கினால் இறைவன் நல்வழி காட்டுவான். தெளிந்த உண்மையும், கருத்துத் தூய் மையும் மனிதனுக்கு உறுதியான வெற்றியைத் தரும். ஒவ் வொரு உயிரிலும் தெய்வத்தன்மை இருக்கிறது, உள்ளேயும், வெளியே யும் இருக் கும் உணர்வுகளைக் கட்டுப்படுத்தி, உள்ளத்தில் குடி கொண்டுள்ள தெய்வத் தன்மையை மலரச் செய்வது தான் ஒருவருக்கு இலட்சியமாக இருக்க வேண்டும். அனைத்தையும் பொறுப்பவளாக இருக்கும் பூமிதேவியைப் போன்று நீங் களும் பொறுமையுடன் இருந்தால் உலகமே உங்கள் காலடியில் அமரும். நம்பிக்கை... உன்னிடம் நம்பிக்கை... இதுவே வெற்றி பெறுவதின் இரகசியம். துன்பப்படுபவர்களுக்கு உதவி செய்வதன் மூலம் தெய்வீக இயல்பு நம்மிடம் வெளிப்படும்.

# அமெரிக்க கண்காணிப்பில் அல்கொய்தா தீவிரவாதிகள்

## ஜனாதிபதி ஒபாமா தெரிவிப்பு



(வோஷிங்டன்)

அல்கொய்தா தீவிரவாதிகள் ஒவ்வொருவரையும் அமெரிக்க உளவு அமைப்பான சி.ஐ.ஏ. இரகசியமாக கண்காணித்து வருகிறது என அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா தெரிவித்தார்.

பாகிஸ்தானில் பதுங்கி இருந்த சர்வதேச பங்கரவாதி பின்லேடனை அமெரிக்க உளவுத்துறையைச் சேர்ந்த சி.ஐ.ஏ அதிகாரிகள் கண்டு பிடித்தனர். அதைத் தொடர்ந்து கடற்படையைச் சேர்ந்த சீல் என்ற சிறப்பு கொமாண்டோ படையினர் நேரில் சென்று பின்லேடனை சுட்டுக் கொன்றனர்.

இந்த நிலையில் விர்ஜீனியா மாகாண லாங்லே நகரில் உள்ள சி.ஐ.ஏ தலைமை அலுவலகத்தில் பாராட்டு விழா நடந்தது. பணியின் போது பலியான சி.ஐ.ஏ. அதிகாரிகள் நினைவாக எழுப்பப்பட்ட நினைவு சுவர் அருகே நடந்த அந்த விழாவில் அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா பங்கேற்றார். உளவுத்துறையான சி.ஐ.ஏ.வில் பணியாற்றும் ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் கலந்து கொண்ட அந்தக்கூட்டத்தில் ஒபாமா பேசியதாவது,

பின்லேடன் பதுங்கியிருந்த இடத்தை கண்டு பிடித்து தகவல் அளித்ததற்காக சி.ஐ.ஏ அதிகாரிகளுக்கு நன்றி தெரிவிக்கின்றேன். சிறு தவறு கூட நேராமல் பணியை முடித்தனர். இத்துடன் பணி முடியவில்லை. பின்லேடன் பதுங்கி இருந்த இடத்தில் பெருமளவில் ஆவணங்கள் கைப்பற்றப்பட்டன. அவற்றை நாம் ஆய்வு செய்ய வேண்டும். அல்கொய்தா அமைப்பில் உள்ள ஒவ்வொரு தீவிரவாதியும் சி.ஐ.ஏ. அமைப்பால் இரகசியமாக கண்காணிக்கப்படுகின்றனர். இதை அவர்கள் உணர்ந்து கொள்ள வேண்டும். அல்கொய்தாவுக்கு எதிரான போரில் மிக முக்கியமான இலக்கை அடைய நீங்கள்(சி.ஐ.ஏ) உதவி செய்திருக்கிறீர்கள். தற்போது ஒட்டுமொத்த உலகமும் உங்களுக்கு நன்றி செலுத்துகிறது. இவ்வாறு ஒபாமா தெரிவித்தார்.

விழாவில் பேசிய சி.ஐ.ஏ. இயக்குநர் லியான் பனேட்டா சுற்றுப்புறச்சூழ்நிலை காரணங்களைக் கொண்டே பின்லேடன் பதுங்கி இருப்பதாக கருதப்பட்டது. எனினும் பின்லேடனை நீதியின் முன்பு நிறுத்த உறுதியான முடிவை ஒபாமா எடுத்தார். அதற்காக அவருக்கு நன்றி தெரிவிக்கிறோம். ஒரு தலைமை தளபதியாக நம்முடைய பணியின் மீது முழு நம்பிக்கை வைத்தார் என்றார்.(ஸ்ரீ-2)

## எகிப்துக்கு ரூ.20 ஆயிரம் கோடி நிதி உதவி

### சவுதி அரேபியா வழங்குகிறது

எகிப்தில் ஜனாதிபதியாக இருந்த ஹோஸ்னி முபாரக்கிக்கு எதிராக பொதுமக்கள் போராட்டம் நடத்தினார்கள். அதை தொடர்ந்து 17 நாட்களுக்கு பின்னர் முபாரக் பதவி விலகினார். தற்போது எகிப்தின் ஆட்சி அதிகாரம் இராணுவத்தின் வசம் உள்ளது.

இந்நிலையில் போராட்டத்தை தொடர்ந்து கலவரத்தால் பாதிக்கப்பட்ட எகிப்தின் பொருளாதார நிலையை மேம்படுத்த சவுதி அரேபியா முன்வந்துள்ளது. எகிப்துக்கு அந்நாடு ரூ.20 ஆயிரம் கோடி நிதி உதவி அளிக்கிறது.

இதில் மானியமும் கடனுதவியும் அடங்கும். இத்தகவலை எகிப்தின் இராணுவ கவுனிசில் தலைவர் உசேன் தத்தாவி தெரிவித்துள்ளார். இதேபோன்று எகிப்துக்கு அமெரிக்காவும் ரூ.9 கோடி கடனுதவி அளிக்கிறது என்று ஜனாதிபதி ஒபாமா அறிவித்துள்ளார். (ஸ்ரீ)




# ஆப்கான் மருத்துவமனையில் தற்கொலை குண்டுத்தாக்குதல்

## பயிற்சி மருத்துவர்கள் 6 பேர் உயிரிழப்பு

(காபூல்)



ஆப்கானிஸ்தான் மருத்துவமனையில் இடம்பெற்ற தற்கொலைக் குண்டுத் தாக்குதலில் பயிற்சி மருத்துவர்கள் 6 பேர் உயிரிழந்துள்ளனர். 23 பேர் காயம் அடைந்தனர்.

ஆப்கானிஸ்தான் நாட்டில் அமெரிக்க ஆதரவுடன் ஜனாதிபதி கர்சாய் அரசுக்கு எதிராக தீவிரவாதிகள் தாக்குதல் நடத்தி வருகின்றனர். அவர்களை ஒடுக்க அமெரிக்க இராணுவமும் ஆப்கானிஸ்தான் அரசும் தீவிர நடவடிக்கை எடுத்து வருகின்றன. இந்த நிலையில் தலைநகர் காபூலில் உள்ள இராணுவ மருத்துவமனைக்கு சனிக்கிழமை காலை தற்கொலைக் குண்டுதாரி ஒருவர் புகுந்தார். திடீரென்று அவர் உடலில் கட்டி இருந்த குண்டை வெடிக்கச் செய்தார். குண்டு பயங்கர சத்தத்துடன் வெடித்து சிதறியதில் பயிற்சி மருத்துவர்கள் 6 பேர் உடல் சிதறி இறந்தனர். மேலும் பயிற்சி மருத்துவர்கள், நோயாளிகள் உட்பட 23 பேர் படுகாயம் அடைந்தனர். இந்த தாக்குதலுக்கு எந்த தீவிரவாத இயக்கமும் பொறுப்பேற்கவில்லை. (ஸ்ரீ-2)

# மலேசியாவில் இடம்பெற்ற மண்சரிவில் 16 பேர் பலி




மலேசியாவில் இடம்பெற்ற மண்சரிவு அனர்த்தத்தில் 16 பேர் கொல்லப்பட்டுள்ளனர். குறித்த சம்பவம் மலேசியாவின் தலைநகர் கோலாலம்பூரில் இடம்பெற்றுள்ளது. உயிரிழந்த அனைவரும் சிறுவர், சிறுமியர் எனவும் ஆதரவற்ற சிறுவர் பராமரிப்பு நிலையமொன்றே மண்சரிவில் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

கடுமையான மழை காரணமாக மீட்புப் பணிகளை உரிய நேரத்தில் மேற்கொள்ள முடியவில்லை என அதிகாரிகள் குறிப்பிட்டுள்ளனர்.

எட்டுமுதல் 18 வரையிலான 15 சிறுவர்களும் சிறுவர் பராமரிப்பு நிலைய பராமரிப்பாளரும் சம்பவத்தில் உயிரிழந்துள்ளனர்.

மிகக்குறுகிய நேரத்தில் அடுத்தடுத்து இரண்டு மண் சரிவுகள் ஏற்பட்டதனால் அதிக சேதம் ஏற்பட்டதாக குறிப்பிடப்படுகிறது.

மீண்டும் மண்சரிவு ஏற்படக்கூடிய அபாயம் காணப்படுவதால் பிரதேச மக்களை வெளியேறுமாறு பொலிஸார் அறிவித்துள்ளனர். (ஸ்ரீ-2)



**ஐரோப்பாவின் எஸ்டோனியா நாட்டின் டாலின் நகரில் விரைவில் கடல் தினம் கொண்டாடப்படுவதை முன்னிட்டு 20 ஆயிரம் தொன் எடை கொண்ட இந்தக் கப்பலை இழுக்கும் முயற்சியில் 20 பேர் மட்டுமே ஈடு படுவதைப் படத்தில் காணலாம்.**

# வாங்கிய வீட்டில் புதையல்; உரிமையாளரிடம் ஒப்படைப்பு

(சால்ட்லேக் சிட்டி)

அமெரிக்காவில் தாங்கள் விலைக்கு வாங்கி வீட்டில் இருந்த 20 இலட்ச ரூபாயை அந்த வீட்டின் பழைய உரிமையாளரிடம் திருப்பிக் கொடுத்துள்ளது ஒரு குடும்பம்.

அமெரிக்காவின் உட்டா மாகாண தலைநகர் சால்ட் லேக் சிட்டியின் புறநகர் பகுதி தான் பவுன்டிபுல். இங்கு பெரின் என்பவர் சமீபத்தில் வீடு ஒன்றை விலைக்கு வாங்கினார்.

பெரின் சால்ட் லேக் சிட்டி நகரில் வெளியாயும் டெசர்ட் நியூஸ் பத்திரிகையில் ஓவியக் கலைஞராக பணியாற்றுகிறார். தங்கள் குடும்பத்துக்கென்று கடைசியில் ஒரு வீடு சொந்தமாக கிடைத்து விட்டது என்ற சந்தோஷத்தில் குடி புகுவதற்கு முன் ஒருநாள் வீட்டைச் சுற்றிப் பார்க்கச் சென்றார். அப்போது மாடிக்கும் போனார். அங்கு சுவரின் ஒரு பகுதியில் துணி ஒன்று வெளியில் நீட்டிக் கொண்டிருப்பதைப் பார்த்து ஆச்சரியம் அடைந்தார்.

ஏணி ஒன்றில் ஏறி துணி இருந்த இடத்தை நெருங்கியவருக்கு அங்கு சுவற்றில் ஒரு சிறு கதவு தெரிந்தது. ஆர்வத்தில் அந்த கதவைத் திறந்தவர் அதிர்ச்சியில் உறைந்து போனார். உள்ளே ஒரு இரும்புப் பெட்டி இருந்தது.

அதை வெளியில் எடுத்தார். அடுத்தடுத்து ஆறு பெட்டிகள் இருந்தன. ஒருபெட்டியைத் திறந்த போது அதில் கத்தைகத்தையாக பணம் இருந்தது.

அதிர்ச்சியில் இருந்து மீண்ட பெரின் அவற்றை தன் காரின் பின்பகுதியில் வைத்துக் கொண்டு தன் பழைய வீட்டுக்குச் சென்றார். அங்கு அவர் மனைவி மற்றும் குழந்தைகள் என அனைவரும் சேர்ந்து அந்தப் பெட்டிகளில் இருந்த பணத்தை எண்ணினார். நாற்பதாயிரம் டொலர்(18 இலட்ச ரூபாய்) அளவு தான் அவர்களால் எண்ண முடிந்தது. ஆனால் மேற்கொண்டு மேசையில்வேறு பணம் கொட்டிக் கிடந்தது.

மொத்த பணத்தையும் வீட்டு சொந்தக்காரரிடம் ஒப்படைத்த பின் அவர் அளித்த பேட்டியில்,

இந்தப் பணம் நான் வாங்கிய வீட்டின் உரிமையாளரை சேர்ந்தது. அவர் தன் வாழ்நாளில் கொஞ்சம் கொஞ்சமாக சேர்த்து வைத்தது எனக்கல்ல என்பதை நான் உணர்ந்தேன். என்குழந்தைகளுக்கு ஒரு நல்ல பாடம் சொல்லிக் கொடுக்கவும் நான் நேர்மையாக நடக்கவும் இதை விட நல்ல சந்தர்ப்பம் கிடைக்காது என்று மட்டும் தெரிந்து கொண்டேன் என்று கூறினார். (ஸ்ரீ-2)

# தோனி அதிரடி; ஹயில் பதிலடி

# முதல் அணியானது பெங்களூர்



(பெங்களூர்)

கிறிஸ் ஹயிலின் அதிரடியில் பெங்களூர் றோயல் சலஞ்ஜர்ஸ் அணி 8 விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் வெற்றிபெற்று பிளே ஒப் சுற்றுக்கு முதல் அணியாக முன்னேறியது.

தோனி போராடியும் சென்னை சுப்பர் கிங்ஸ் அணி தோல்வியைச் சந்தித்து பிளே ஒப் சுற்றில் இரண்டாவது அணியாக முன்னேறி பெங்களூர் றோயல் சலஞ்சர்ஸ் அணியுடன் மோதுகின்றது.

இந்தியன் பிரிமியர் லீக் (ஐ.பி.எல்) அமைப்பின் 10 அணிகள் மோதும் 4ஆவது இருபது-20 கிரிக்கெட் தொடர் இந்தியாவில் நடைபெற்றுவருகிறது.


இதில் பெங்களூரில் நேற்று நடைபெற்ற 69 ஆவது போட்டியில் விக்டோரி தலைமையிலான பெங்களூர் றோயல் சலன்ஜர்ஸ் அணியும் தோனி தலைமையிலான சென்னை சுப்பர்கிங்ஸ் அணியும் மோதின.

இப்போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற பெங்களூர் றோயல்சலன்ஜர்ஸ் அணித் தலைவர் விக்டோரி முதலில் களத்தடுப்பை தீர்மானித்தார்.

இதனடிப்படையில் முதலில் துடுப்பெடுத்தாடிய சென்னை சுப்பர்கிங்ஸ் அணி ஆரம்பம் முதலே சரிவுகண்டது.

இதில் மைக்கல் ஹசி 04, முரளிவிஜய் 06, சுரேஸ்ரெய்னா 04, ஓட்டங்களுடனும் பத்ரிநாத் பூச்சியத்துடனும் ஆட்டமிழக்க சென்னை சுப்பர்கிஸ் அணி 5.4 ஓவர்களில் 22 ஓட்டங்களை எடுத்து 4 விக்கெட்டுக்களையிழந்தது.

இந் நிலையில் சகாவுடன் இணைந்த அணித்தலைவர் தோனி அபார ஆட்டத்தை வழங்கி அணியை மீட்டெடுத்தார். இதில் சகா 30 பந்துகளில் (ஒரு பவுண்டரி, ஒரு சிக்ஸர் உட்பட) 22 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார்.



பின்வரிசையில் பிரவோ 05, அல்பி மோர்கல் 05, அஸ்வின் 02 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்து ஏமாற்றினர்.

எனினும் இறுதிவரை போராடிய தோனி அரைச்சதம் அடித்து அசத்த சென்னை சுப்பர்கிங்ஸ் அணி 20 ஓவர்களில் 8 விக்கெட்டுக்களையிழந்து 128 ஓட்டங்களை எடுத்தது.

இதில் அணித்தலைவர் மகேந்திர சிங் தோனி 40 பந்துகளில் (3 பவுண்டரிகள், 6 சிக்ஸர்கள் உட்பட) 70 ஓட்டங்களை ஆட்டமிழக்காமல் எடுத்தார்.

பந்துவீச்சில் சகீர்கான், அரவிந், விக்டோரி தலா 2 விக்கெட்டுக்களையும் மிதுன், கோலி தலா ஒரு விக்கெட்டையும் சாய்த்தனர்.

பதிலுக்கு 20 ஓவர்களில் 129 ஓட்டங்களை எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் துடுப்பெடுத்தாடிய பெங்களூர் றோயல் சலன்ஜர்ஸ் அணிக்கு ஏபி. டி வில்லியர்ஸ் பூச்சியத்துடன் ஆட்டமிழந்து ஏமாற்றினார்.

எனினும் 2ஆவது விக்கெட்டுக்காக இணைந்த ஹயில்-ஹோலி ஜோடி சிறப்பான ஆட்டத்தை வழங்கி நம்பிக்கையளித்தனர்.

இந்த ஜோடி 9.5 ஓவர்களில் 80 ஓட்டங்களை இணைப்பாட்டமாக சேர்த்தபோது விராட் ஹோலி 29 பந்துகளில் (5 பவுண்டரிகள் உட்பட) 31 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார்.

அடுத்து சௌரப் திவாரி களமிறங்க மறுமுனையில் கிறிஸ் ஹயில் 34 பந்துகளில் அரைச்சதம் கடந்தார்.

இந் நிலையில் பெங்களூர் றோயல் சலன்ஜர்ஸ் அணி 18 ஓவர்களில் 2 விக்கெட்டுக்களைமாத்திரமிழந்து 129 ஓட்டங்களை எடுத்து 8 விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் வெற்றிபெற்றது.

இதில் கிறிஸ் ஹயில் 50 பந்துகளில் (4 பவுண்டரிகள், 6 சிக்ஸர்கள் அடங்கலாக) 75 ஓட்டங்களையும் சௌரப் திவாரி 13 ஓட்டங்களையும் ஆட்டமிழக்காமல் எடுத்தனர்.

பந்துவீச்சில் அஸ்வின், மோர்கல் தலா ஒருவிக்கெட்டை வீழ்த்தினர்.

இப்போட்டியில் பெங்களூர் றோயல் சலன்ஜர்ஸ் அணியின் வெற்றிக்கு திருப்பு முனை அமைத்த கிறிஸ் ஹயில் ஆட்டநாயகனாகத் தெரிவானார்.

இவ்வெற்றியின் மூலம் பெங்களூர் றோயல் சலன்ஜர்ஸ் அணி தான் விளையாடிய 14 போட்டிகளில் 9 ஆவது வெற்றியைப்பெற்று (ஒரு போட்டி கைவிடப்பட்டதால் ஒரு புள்ளி உட்பட) 19 புள்ளிகளுடன் பிளே ஒப் சுற்றுக்கு முதல் அணியாக தெரிவானது.

அத்துடன் இப் போட்டியில் தோல்வியடைந்த சென்னை சுப்பர் கிங்ஸ் அணி 14 போட்டிகளில் 9 வெற்றிகளைப்பெற்று 18 புள்ளிகளுடன் (ஓட்ட நிகர சாராசரி அடிப்படையில்) 2ஆவது அணியாக பிளே ஒப் சுற்றுக்கு தகுதி பெற்றது.

## புள்ளிப் பட்டியல்

| அணிகள் | போட்டி | வெற்றி | தோல்வி | சமனிலை | முடிபில்லை | புள்ளிகள் | நிகர ஓட்ட எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|---|---|
| றோயல் சலஞ்ஜர்ஸ் | 14 | 9 | 4 | 0 | 1 | 19 | +0.326 |
| சென்னை | 14 | 9 | 5 | 0 | 0 | 18 | +0.443 |
| மும்பை இந்தியன்ஸ் | 14 | 9 | 5 | 0 | 0 | 18 | +0.040 |
| கொல்கத்தா | 14 | 8 | 6 | 0 | 0 | 16 | +0.433 |
| கிங்ஸ் லெவின் பஞ்சாப் | 14 | 7 | 7 | 0 | 0 | 14 | -0.051 |
| ராஜஸ்தான் றோயல்ஸ் | 14 | 6 | 7 | 0 | 1 | 13 | -0.691 |
| டெக்கான் சார்ஜர்ஸ் | 14 | 6 | 8 | 0 | 0 | 12 | +0.222 |
| கொச்சி | 14 | 6 | 8 | 0 | 0 | 12 | -0.214 |
| புனே வாரியர்ஸ் | 14 | 4 | 9 | 0 | 1 | 9 | -0.134 |
| டில்லி | 14 | 4 | 9 | 0 | 1 | 9 | -0.448 |

# சனல் 4 தொலைக்காட்சியின்...

சனல் 4 தொலைக்காட்சி தெரிவித்திருந்தது.

2009ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் சனல் 4தொலைக்காட்சி வெளியிட்ட காணொளி ஆதாரத்தில் படைத்தரப்பின் சீருடை அணித்திருந்த படையினரால் தமிழ் இளைஞர்கள் பலர் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டு படுகொலை செய்யப்படுவது குறித்து எடுத்துக் காட்டியிருந்தது. இக் காணொளி உண்மையானது எனவும் ஐக்கிய நாடுகள் சபையால் பின்னர் உறுதி செய்யப்பட்டிருந்தது.

இந்நிலையில் படைத்தரப்பின் சிரேஷ்ட படையதிகாரி ஒருவரும் களமுனையில் நின்ற படைச்சிப்பாய் ஒருவரும் இத்தகைய படுகொலைகள் அரச தரப்பின் உயர்மட்ட கட்டளைகளுக்கு அமையவே மேற்கொள்ளப்பட்டதாக சனல் 4 தொலைக்காட்சிக்கு கூறியிருந்ததை அத் தொலைக்காட்சி ஆதாரத்துடன் கடந்த வருடம் மே மாதம் வெளிப்படுத்தி இருந்தது.

எதிரில் தெரிகின்ற ஒவ்வொருவரையும் சுட்டுக் கொல்லும்படி தங்களுடைய தளபதிகள் தங்களுக்கு கட்டளையிட்டதாக குறிப்பிடும் களமுனையில் நின்ற படைச்சிப்பாய், இக் கட்டளையின் பிரகாரம் தாங்கள் எதிரில் தெரிகின்ற ஒவ்வொருவரையும் சுட்டுக் கொலை செய்ததாகவும் கூறியிருந்தார்.

இதேபோன்று இக் கட்டளை மிக உயர் மட்டத்திலிருந்தே தங்களுக்குக் கிடைத்ததாக குறிப்பிட்டுள்ள இலங்கை படைத்தரப்பின் சிரேஷ்ட படையதிகாரி இக் கட்டளை ஒவ்வொருவரையும் கொலை செய்து தடயங்களை அழித்துவிடச் சொன்னதாக சனல் 4 தொலைக்காட்சிக்கு தெரிவித்திருந்தார்.

வன்னி இறுதிக்கட்டப் போரின் போது இலங்கைப் படையினரால் கைது செய்யப்பட்ட அப்பாவிப் பொதுமக்கள் கொலை செய்யப்பட்ட காணொளிகளை வெளியிட்ட சனல் 4 தொலைக்காட்சி இவ்வாறு படையினரால் கைது செய்யப்பட்டவர்களின் புகைப்படங்களை வெளியிட்டுள்ளதுடன் இப் புகைப் படங்கள் படைச்சிப்பாய் ஒருவரினால் எடுக்கப்பட்டவை என்றும் தெரிவித்திருந்தது.

இக் காணொளியில் பின்னால் கைகள் கட்டப்பட்ட நிலையில் கொல்லப்பட்ட இரண்டு பெண்களின் சடலத்தை சுற்றி படையினர் நிற்கும் படமும் வெளியாகியிருந்தது. படைத்தரப்பின் சிரேஷ்ட அதிகாரியின் தகவலின்படி இப் பெண்கள் கைது செய்யப்பட்ட பின்னர் கொல்லப்பட்டுள்ளனர்.

வன்னிப் போரின் இறுதிக் கட்டத்தில் வெள்ளைக் கொடியுடன் சரணடைவதற்கு வந்த தமிழீழ விடுதலைப்புலிகளின் மூத்த உறுப்பினர்களும், அவர்களின் குடும்பத்தினரையும் கைது செய்து, சித்திரவதை செய்த பின்னர் கொலை செய்ததாக களமுனையில் நின்ற படைச்சிப்பாய் கூறியிருந்தார்.

அத்துடன் தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரனின் 13 வயது மகன் இலங்கைப் படையினரால் கைதுசெய்யப்பட்டு அவரது தந்தையார் எங்கு இருக்கிறார் என விசாரணை செய்யப்பட்ட பின்னர் சுட்டுக்கொலை செய்யப்பட்டதாக படைத்தரப்பின சிரேஷ்ட படையதிகாரி ஒத்துக்கொண்டார் .

வன்னிப் போரின் போது சிறிலங்கா படைத்தரப்பால் மேற்கொள்ளப்பட்ட போர்க் குற்றங்கள் மற்றும் மனிதவுரிமை மீறல்கள் தொடர்பில் சுயாதீனமான சர்வதேச விசாரணைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என சர்வதேச மனிதவுரிமை அமைப்புகளும் மேற்கத்தைய நாடுகளும் வலியுறுத்தி வருகின்றன.

அதேவேளை வன்னிப் போரின்போது பொது மக்கள் எவரும் கொல்லப்படவில்லை. எனவும் தமது படையினர் போர்க்குற்றங்களில் ஈடுபடவோ சர்வதேச மனித உரிமைச் சட்டங்களை மீறவோ இல்லை எனவும் அரசாங்கம் தொடர்ந்து மறுப்புத் தெரிவித்து வருகின்றது.

இந்நிலையில் இவ்விவகாரம் தொடர்பில் கொழும்புக்கு ஏற்படுத்தப்பட்டு வரும் அழுத்தங்களில் இருந்து தப்புவதற்காக பிரித்தானியாவின் சனல் 4 தொலைக்காட்சி கடந்த வருடம் வெளியிட்டுள்ள காணொளி போலியானது என நிறுவ அரசாங்கம் முனைப்புக் காட்டிவருவதாக சண்டே ரைம்ஸ் பத்திரிகை தெரிவித்துள்ளது.

பிரித்தானியாவின் சனல் 4 தொலைக்காட்சி கடந்த வருடம் வெளியிட்ட இக்காணொளி சர்வதேச மட்டத்தில் பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ந-5)

# சொந்த நலனுக்காக...

குறித்தும் பேசி வந்துள்ளோம்.

இதுவரை பேச்சுக்களின்போது எடுக்கப்பட்ட முடிபுகள் எவற்றையும் அரசாங்கம் நடைமுறைப்படுத்தவில்லை. சொந்த நலனுக்காகவே அரசாங்கம் கூட்டமைப்புடன் பேச்சுவார்த்தையை நடத்துகின்றது. கூட்டமைப்பு நம்பிக்கை வைத்து அரசாங்கத்துடன் பேசுகின்றது. ஆனால் அரசாங்கம் தனது சொந்த நலனுக்காக பேச்சுவார்த்தையை நடத்துகின்றது. இந்தியாவின் அழுத்தம் காரணமாகவே அரசாங்கம் எம்முடன் பேச்சுவார்த்தையை நடத்துகின்றது.

சிங்களக் கடும் போக்காளர்களைக் கொண்ட இந்த அரசாங்கத்திடமிருந்து சரியான அரசியல் தீர்வு தமிழர் பிரச்சினைக்கு வரும் என்று நாம் நம்பவில்லை. அவ்வாறான சரியான தீர்வு வரும் என்று எதிர்பார்ப்பது எமது முட்டாள் தனமாகும்.

அரசாங்கத்துடன் கடைசியாக தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு நடத்திய பேச்சுவார்த்தையின் முடிபில் இரண்டுபக்கக் கூட்டறிக்கை விடுவது என்று இணக்கம் காணப்பட்டது.

அக் கூட்டறிக்கையில் அரசாங்கத்தின் செனட்சபை யோசனை பற்றி பிரஸ்தாபிக்கப்பட்டது. அதிகாரப் பகிர்வுக்கும் செனட்சபை அமைப்பது பற்றிய யோசனைக்கும் என்ன சம்பந்தம் இருக்கின்றது? என்று தலைவர் சம்பந்தன் கேட்டார்.

அதிகாரப் பகிர்வுக்கு மாற்றீடாக செனட் சபை இருக்கமுடியாதே என்றும் சம்பந்தன் சுட்டிக்காட்டினார். இறுதியில் இந்தக் கூட்டறிக்கையில் செனட்சபை யோசனை முன்வைக்கப்பட்டது என்று மட்டுமே பிரஸ்தாபிக்கப்பட்டது.

ஆனால் அரசாங்கம் சிங்களப் பத்திரிகைகளுக்கு அனுப்பிய கூட்டறிக்கையில் கூட்டமைப்பு செனட்சபையோசனையை ஏற்றுக்கொண்டதாக தெரி விக்கப்பட்டிருந்தது. ஆங்கிலம் மற்றும் தமிழ்ப் பத்திரிகைகளுக்கு வழங்கப்பட்ட கூட்டறிக்கையில் செனட்சபை நிறுவும் யோசனை பிரஸ்தாபிக்கப்பட்டது என்று மட்டுமே கூறப்பட்டிருந்தது. செனட்சபையை கூட்டமைப்பு ஏற்றுக் கொண்டதாக அதில் கூறப்பட்டிருக்கவில்லை. முழுமையான சுயாட்சித் தீர்வையே தமிழ்த் தேசியக்கூட்டமைப்பு பேச்சுவார்த்தையின் போது முன்வைக்கும்.

இம் மாத இறுதியில் ஐ.நா. மனிதவுரிமைகள் சபையின் மனிதவுரிமைகள் கூட்டத் தொடர் ஜெனிவாவில் நடைபெறவிருக்கின்றது. 47 உறுப்பு நாடுகள் அதில் அங்கம் வகிக்கின்றன. அரசாங்கத்திற்கு எதிரான போர்க் குற்றச்சாட்டுக்களை சுமத்தியுள்ள ஐ.நா. நிபுணர் குழு அறிக்கை அங்கு ஆராயப்பட விருக்கின்றது.

அப்போது சீனா மற்றும் ரஷ்யாவின் நிலைப்பாடு எவ்வாறு அமையும் என்று கூற முடியாது. இக் கூட்டத்தில் எடுக்கும் தீர்மானம் ஐ.நா. பாதுகாப்புச் சபைக்கு செல்லும் பட்சத்தில் சீனாவும், ரஷ்யாவும் தங்கள் வீட்டோ அதிகாரத்தை அரசாங்கத்திற்காகப் பயன்படுத்தும் என எதிர்பார்க்க முடியாது என சுரேஷ் பிரேமச்சந்திரன் தனது உரையில் மேலும் தெரிவித்தார். (ந-5)


SLEAS விசேட கருத்தரங்கு

செவ்வாய், புதன், வியாழன்
இரு பிரிவுகள் நடைபெறும்

பிரிவு 1: மாலை 4 – 6 மணி வரை
பிரிவு 2 : மாலை 6 – 8 மணி வரை
செவ்வாய்: பொது உளச்சார்பு
புதன் : கிரகித்தல்
வியாழன்: விடய ஆய்வு

யாழ்ப்பாணக் கல்லூரி
பட்டப்படிப்புகள் பிரிவு

(யாழ். போதனா வைத்தியசாலைக்கு எதிரே)

(அ-3275)


# முன்னாள் புலிப் போராளி...

எடுக்கப்படும்.

அதேவேளை புனர்வாழ்வு வழங்கப்படாத தமிழீழ விடுதலைப் புலிகளின் உறுப்பினர்களை அருகில் உள்ள புனர்வாழ்வு முகாம்களில் பதிவு செய்து கொள்ளுமாறு புனர்வாழ்வு ஆணையாளர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

புனர்வாழ்வு நிகழ்ச்சித் திட்டத்தின் மற்றுமோர் அங்கமாக புனர்வாழ்வு பெறாது சமூகத்தில் வாழ்ந்து வரும் முன்னாள் விடுதலைப் புலிகளின் உறுப்பினர்களுக்கும் புனர்வாழ்வு வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

தற்போது சமூகத்தில் வாழ்ந்து வருபவர்களை அருகாமையில் உள்ள புனர்வாழ்வு நிலையங்களில் பதிவு செய்து கொள்ள வேண்டும். தமது கடந்த கால விடுதலைப்புலிகளுடனான தொடர்புகள் பற்றி தெரிவித்தபின் குறுகிய காலத்தினுள் அவர்கள் புனர்வாழ்வு பெற்று மீண்டும் சமூகத்துடன் இணைய முடியும்.

இச் சந்தர்ப்பமானது புனர்வாழ்வு பெறாத முன்னாள் விடுதலைப் புலிகளின் உறுப்பினர்களுக்கு என உருவாக்கப்பட்டதாகும். புனர்வாழ்வுக்கான சான்றிதழை பெற்ற பின் மீண்டும் அவர்கள் சமூகத்துடன் இணைக்கப்படுவார்கள் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ந-5)

# விமல் வீரவன்ஸவின்...

எமிரேட்ஸ் விமான சேவைகள் நிறுவ விமானத்தில் முதல் வகுப்பு அமர்வில் இருந்து நியூயோர்க்கு சென்றுள்ளனர்.

அதேவேளை, ஐ.நா. நிபுணர்கள் குழுவின் அறிக்கை தொடர்பில் இலங்கையின் எதிர்ப்பை வெளியிடும் நோக்கத்துடன் அமைச்சர் விமல் வீரவன்ஸவும் ஐக்கிய நாடுகள் சபையின் இலங்கைக்கான பிரதிநிதிகள் பாலித ஹோகன்ன மற்றும் மேஜர் ஜெனரல் சவேந்திர சில்வா ஆகியோர் எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் ஒன்றை ஏற்பாடு செய்திருந்தார்.

இந்த ஆர்ப்பாட்டம் கடந்த 18ஆம் திகதி காலை 11.30 மணியளவில் ஐக்கிய நாடுகள் சபையின் நியூயோர்க் அலுவலகம் முன்பு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இந்த ஆர்ப்பாட்டத்தில் அமெரிக்காவில் வாழ்கின்ற பெரும்பாலான சிங்கள மக்கள் கலந்து கொள்வார்கள் என எதிர்பார்க்கப்பட்டிருந்த போதிலும். விரல்விட்டு எண்ணக் கூடிய ஒரு சிலரே கலந்து கொண்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவர்களில் 5 பேர் பாலித ஹோகன்ன மற்றும் மேஜர் ஜெனரல் சவேந்திர சில்வா ஆகியோரின் பாதுகாப்பு அதிகாரிகள் எனவும் ஏனைய 5 பேர் ஐக்கிய நாடுகள் சபைக்கான இலங்கையின் தூதரக அதிகாரிகள் எனவும் கொழும்பு ஊடகம் ஒன்று சுட்டிக்காட்டியுள்ளது.

இந்த ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொள்வதற்காக அமைச்சர் விமல் வீரவன்ச 12.30 மணியளவில் அங்கு சென்றபோது அங்கே சுமார் 20 பேர் மட்டுமே கலந்து கொண்டிருந்ததைக்கண்டு அதிர்ச்சியடைந்துள்ளார்.

இந் நிலையில் இந்த எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் சில கோசங்களை எழுப்பிய அவர் அந் நிகழ்வை படம்பிடித்த ரூபவாஹினி கூட்டுத்தாபன படப்பிடிப்பாளர்களுக்கும் கருத்துத் தெரிவித்துவிட்டு புறப்பட்டுச் சென்றுவிட்டார்.

வன்னியில் இடம்பெற்ற இறுதிக்கட்டப் போரின்போது தனக்கு ஆலோசனை வழங்குவதற்காக பான் கீ மூன், நிபுணர் குழுவை நியமித்தபோது, அதற்கெதிராக விமல் வீரவன்ச சாகும் வரை உண்ணாவிரதம் இருந்ததோடு, பான் கீ மூனை கடுமையாக விமர்சித்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (ந-5)

# மரண அறிவித்தல்

## கனகசபை அருணாசலம்



ஒட்டுவெளி மிருசுவிலை பிறப்பிடமாகவும், ஆடியபாதம் வீதி, கொக்குவில் மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட கனகசபை அருணாசலம் 22.05.2011 அன்று இறைபதம் எய்தினார்.

அன்னார் அமரர் கனகசபை தங்கம்மா தம்பதிகளின் அன்பு மகனும், அமரர் மகேஸ்வரியின் அன்புக் கணவரும், அமரர் மகேஸ்வரி, சரவணமுத்து, கனகம்மா (இளைப்பாறிய ஆசிரியர்), அமரர் பரமேஸ்வரி (இளைப்பாறிய சேவைக்கால ஆசிரிய ஆலோசகர்), திருவாதவூரர் (இளைப் பாறிய காசாளர் தென்மராட்சி பநோ.கூச), அமரர் மாணிக்கவாசகர் ஆகியோரின் அன்புச் சகோதரரும், அகிலேஸ்வரி, அகிலதாஸ் (அதிபர் கொக்குவில் இந்துக் கல்லூரி), சாந்திலா, கமலேஸ்வரி (இந்தியா), கமலதாஸ் (சுவிஸ்), கனகசபை (துரை, இந்தியா) புஸ்பதாஸ், ஈஸ்வரி ஆகியோரின் அன்புத் தந்தையும், ஸ்ரீபாலசுப்பிரமணியம், நளினி (சேவைக்கால ஆசிரிய ஆலோசகர் வலிகாமம்), மாப்பாணபிள்ளை (டோகா), பன்னீர்ச்செல்வம் (பிரான்ஸ்), குமுதினி (சுவிஸ்) ஆகியோரின் அன்பு மாமனாரும், பாலதர்சினி (பிரான்ஸ்), பிரசாத் (பிரான்ஸ்), டிசாந், புருசோத்மன் (பொறியியல் பீடம்- மொறட்டுவ பல்கலைக்கழகம்), விமோசனன், சங்கீதன், கௌதமி, சாரங்கன், சாருஜன், சாஜனா, சாஜித் (இந்தியா), லக்ஷன், லதுஷா (சுவிஸ்), விதுரா ஆகியோரின் அன்புப் பேரனும், கர்ஷனா, உஜானா (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புப் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரிகைகள் இன்று (23.05.2011) திங்கட்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு அவரது இல்லத்தில நடைபெற்று பூதவுடல் கொக்குவில் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

இல.17, ஆடியபாதம் வீதி,
கொக்குவில் மேற்கு,
கொக்குவில்.
தொ.பே.இல:- 021 3210194

தகவல்:
அ.அகிலதாஸ் (மகன்)
(அதிபர், கொக்குவில்
இந்துக் கல்லூரி)

(4992)


வடமராட்சியில்...

மிகவும் தெளிவான விளக்கத்துடன் இலகுவான முறையில்...

A/L - கணக்கீடு
(Special Class)

ஆசிரியர்
B.Krishnajothy
(B.Com (Hons), Dip.in.Edu.,M.Ed)

- நீங்கள் ஆவலுடன் எதிர்பார்த்த A/L-2013 Batchற்கான புதிய வகுப்புக்கள் ஆரம்பம்.
- A/L-2012 Batchற்கான வகுப்புக்களுக்கு பங்குடமைக் கணக்கு ஆரம்பமாகிவிட்டது.
- A/L-2011 Batchற்கான புதிய வகுப்புக்களுக்கு விசேட பயிற்சிகள் ஆரம்பமாகிவிட்டது. (Part I, Part IIற்கான மிகவும் எதிர்பார்ப்புடன் கூடிய புதிய வகையான கணக்குப் பயிற்சிகள்)

நேர அட்டவணை மற்றும் அனுமதிகளை அலுவலகத்தில் உடன் பெறவும்.

OXFORD ENGLISH ACADEMY
P.K.LANE, POINT PETRO.

(அ-3254)


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 23.05.2011 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.